விலை: ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 கதிர் 352 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 27, வெள்ளிக்கிழமை 13.11.2015

வாரத்தின் 4 நாட்களில் அதிகளவு கோடீஸ்வரர்களை உருவாக்கிய இலங்கையின் ஒரே ஒரு அதிஷ்ட லாப சீட்டு
மஹஜன சம்பத
நீங்களும் இன்றே வாங்குங்கள்
www.nlb.lk
தேசிய லொத்தர் சபை
NLB அதிர்ஷ்டத்தின் ஒரே பெயர்

## தாயகத்தில் இன்று முழு கடையடைப்பு

### கைதிகளின் விடுதலைக்கு ஆதரவளிக்க அனைவரையும் அழைக்கிறது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 13
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி தமிழர் தாயகமான வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இன்று மேற்கொள்ளப்படும் கடையடைப்பு - பொது வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு ஒவ்வொருவரும் உணர்வோடு ஆதரவளிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.
தமிழ் அரசியல் கைதிகளுக்காக, இன்றைய நாளில் மேற்கொள்ளப்படும் போராட்டத்துக்குச் சகல தரப்பினரும் தங்களால் முடிந்த ஆதரவை வழங்கி, சர்வதேச சமூகத்துக்கும், இலங்கை அரசுக்கும் எங்களுடைய நிலைப்பாடுகளைப் பறைசாற்றவேண்டும் என்றும் கூட்டமைப்பு கோரியுள்ளது.
அத்துடன் இன்றைய கடையடைப்புப் போராட்டத்துக்கு வர்த்தக சமூகம், போக்குவரத்துத் துறையினர், ஆசிரியர் சங்கங்கள், தனியார் துறையினர், பொது அமைப்புக்கள், பல்கலைக் கழகச் சமூகத்தினர் என்று பல்வேறு தரப்பினரும் தமது முழுமையான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.
நீண்ட காலமாகச் சிறைகளிலுள்ள பக். 24

## வலி.வடக்கின் சில இடங்கள் பொதுமக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம், நவ.13
வலி.வடக்கில் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த 2 வீதிகள், ஒரு பாடசாலை மற்றும் வீட்டுத் திட்டக் காணி என்பன பொதுமக்கள் பாவனைக்காக மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன.
18.04 ஏக்கர் நிலப்பரப்பே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளது.
இவற்றை விடுவிப்பதற்கான கோரிக்கை நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றையதினம் அவை விடுவிக்கப்பட்டுள்ளன.
ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் கடந்த மார்ச் - ஏப்ரல் மாதங்களில் வலி.வடக்கில் காணிகள் விடுவிக்கப்பட்டன. இவ்வாறு காணிகள் விடுவிக்கப்பட்டாலும், சில வீதிகள், பாடசாலைகள் மற்றும் சில காணித் துண்டுகளில் பக். 24

## நம்பிக்கையை தளரவிடாதீர்

### காணாமற்போனோரின் உறவினர்களுக்கு யாழில் உறுதியூட்டியது ஐ.நா. செயற்குழு



யாழ்ப்பாணம், நவ. 13
காணாமற்போனோரின் உறவுகள் நம்பிக்கையைக் தளரவிடக்கூடாது என்று தெரிவித்துள்ள, பலவந்தமாகக்காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா செயற்குழுவினர், உங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதற்குரிய பதிலை இலங்கை அரசு வழங்குவதற்கு வலியுறுத்துவோம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.
இலங்கைக்கு வருகை தந்துள்ள பலவந்தமாகக் பக். 24

## உணவு தவிர்ப்பால் 11 கைதிகள் மயக்கம்

### வைத்தியசாலைகளில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 13
உணவுதவிர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் அரசியல் கைதிகளில் 11 பேர் மயங்கிய நிலையில் சிறைச்சாலை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
மகசின் சிறைச்சாலையிலிருந்து 7பேரும், அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து 4 பேருமாக 11 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
பொதுமன்னிப்பில் தம்மை விடுதலை செய்யவேண்டும் எனக் கோரி தமிழ் அரசியல் கைதிகள் சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கடந்த 8 ஆம் திகதியிலிருந்து முன்னெடுத்து வருகின்றனர்.
நேற்று ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தப் போராட்டத்தில் 186 கைதிகள் வரை ஈடுபட் பக். 24

## கைதிகள் விடுவிப்பு குறித்து திங்களுக்கு முன் உரிய பதில்

### வடக்கு அமைச்சர்களிடம் ஜனாதிபதி உறுதியளிப்பு



யாழ்ப்பாணம், நவ.13
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் உரிய பதில் வழங்குவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களிடம் உறுதியளித்துள்ளார்.
அத்துடன் இந்தக் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி பக். 24

## பஸ் சேவைகள் இன்று இல்லை

யாழ்ப்பாணம், நவ.13
அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி இன்று கடையடைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதால் பஸ்கள் சேவையில் ஈடுபடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தனியார் பஸ்கள் எதுவுமே இன்று சேவையி ஈடுபடாது என்று தனியார் பஸ் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.
அரச பஸ்கள் பணியில் ஈடுபடுமா என்பதற்கான பதில் அரச பஸ் டிப்போவினரால் தெரிவிக்கப்படாதுள்ள போதும் அரச பஸ்களும் இன்று பணியில் ஈடுபடமாட்டா என்று அரச பஸ் தரப்பினரால் கூறப்பட்டுள்ளது.
அதனால் இன்று அனைத்து நடவடிக்கைகளும் முடங்கும் என்றும் கூறப்பட்டது. (த-4)

## ஏமாற்றிவிட்டார் ஜனாதிபதி மைத்திரி போர்ச் சூழலுக்குள் தள்ளிவிட்டுள்ளார்

### கைதிகளைச் சந்தித்த பின்னர் சரவணபவன் எம்.பி. காட்டம்

யாழ்ப்பாணம், நவ. 13
தமிழ் மக்களின் வாக்குகள் மூலம் பதவியைப் பெற்றுக் கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமிழர்களுக்கு எந்தவொரு நன்மையையும் செய்யாமல் ஏமாற்றியிருக்கிறார். அரசியல் கைதிகளைக்கூட விடுதலை செய்யாமல் தமிழர்களை அவர் மீண்டும் போர்க் காலச் சூழலுக்குள் தள்ளியிருக்கிறார். இன்றைய கடையடைப்புப் போராட்டம் மூலம் மீண்டும் முரண்பாட்டுக்கான வித்தை அவர் விதைத்திருக்கிறார். கடந்த கால சிங்கள அரசியல் தலைமைகளுக்கும் தற்போதைய ஜனாதிபதிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எந்தவொரு வேறுபாடும் இல்லை என்பதை தமிழ் அரசியல் கைதிகள் பக். 24

## புனர்வாழ்வு வழங்கியாவது எமக்கு விடுதலை தாருங்கள்

### அரசியல் கைதிகள் ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், நவ. 13
தம்மை புனர்வாழ்வுக்கு உட்படுத்தியாவது விடுதலை செய்யுங்கள் என்று உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற தமிழ் அரசியல் கைதிகளில் பெரும்பான்மையானவர்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குச் சிறைச்சாலைகள் ஆணையாளர் ஊடாகக் கடிதம் அனுப்பியுள்ளனர்.
ஒவ்வொருவரும் தனித் தனியாக இந்த வேண்டுகோளை விடுக்கும் கடிதத்தை ஜனாதிபதிக்கு நேற்றைய தினம் அனுப்பி வைத்துள்ளனர்.
தமிழ் அரசியல் கைதிகள் கடந்த மாதம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் வழங்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. இதனால் தமிழ் அரசியல் பக். 24

## பிணை கிடைத்த கைதிகளின் விவரம் வெளியானது நேற்று

யாழ்ப்பாணம், நவ. 13
முதல் கட்டமாக நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகளின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் அரசியல் கைதிகள் மற்றும் அரசியல் கைதிகள் சாராதவர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
குருநாலாகே லஸந்த பத்மலால், அலுகொட ஆராச்சிகே பிரியந்த சிசிரகுமார, சுருஹாந்தி உடுதல் மஹதிலால், குருகமகே சுமணதாஸ சுசில்,
தங்கராசா புவனேஸ்வரன், சுந்தரலிங்கம் அகிலன், பூபாலசிங்கம் நிசாந்தன், மயில்வாகனம் ஜெயகரன், சசிதரன்தங்கவேல்,
சபா ரத்தினம் உமாகரன், வீரசிங்கம் சுலக்ஸன், பக். 24

## கறுப்புத் துணிகளால் வாய்களைக் கட்டி காணாமற்போனோருக்காக போராட்டம்

### நடந்தது நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில்




யாழ்ப்பாணம், நவ 13
காணாமற்போனோர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை தமது வாய்களைக் கறுப்புப் பட்டிகளால் கட்டிக்கொண்டு மௌனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா செயற்குழு நேற்று யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டு விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் இவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.
யாழ். கோவில் வீதியில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் வதிவிட காரியாலயத்தின் முன்பாக நேற்றுக் காலை ஒன்றுகூடிய காணாமற்போனோரின் பக். 24

# கடையடைப்புப் போராட்டத்துக்கு பல்கலை ஆசிரியர் சங்கம் ஆதரவு

## வன்முறையின்றி நடத்துமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ. 13

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி இன்று முன்னெடுக்கும் கடையடைப்புப் போராட்டத்துக்கு யாழ்.பல்கலைக்கழக ஆசிரிய சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது. கடையடைப்புப்போராட்டத்தை வன்முறை இல்லாது நடத்துமாறும் அந்தச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அந்தச் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

கைதிகளால் மேற்கொள்ளப்படும் உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் நிகழவுள்ள கடை அடைப்புப் போராட்டத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் முழு ஆதரவை வழங்குகிறது.

இந்தக் கடை அடைப்புப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பை வழங்கும் விதத்தில் அன்று வகுப்புக்களை இடைநிறுத்தி பரீட்சை தவிர்ந்த எந்த வித அலுவலக நடைமுறையிலும் ஈடுபடவேண்டாம் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அகிம்சை ரீதியில் நிகழும் உணவு தவிர்ப்புக்கு ஆதரவான கடை அடைப்புப் போராட்டத்தை அமைதியாகவும் வன்முறை ஏதும் நிகழாமலும் பார்த் துக்கொள்வதோடு மிகமிக அத்தியாவசிய விடயங்களில் தளர்வுப் போக்கைக் கடைப்பிடிக்குமாறும் பொதுமக்களை வினயமாகக் கேட்டுக் கொள்கின்றோம். கடந்தகால அனுபவங்களை மனதில் கொண்டு செயற்படுமாறு வேண்டுகின்றோம். – என்றுள்ளது.

# இன்றைய கடையடைப்புக்கு முற்றுமுழுதான ஆதரவு

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தெரிவிப்பு

யாழ்பாணம், நவ.13

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தில் இன்று நடத்தப்படும் பூரண கடையடைப்புப் போராட்டத்துக்குத் தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் தலைவர் ஜே.தற்பரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

மக்கள் பணியில் ஈடுபட்டிருக்கிற சர்வதேச, தேசிய மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது அலுவலகங்களை மூடித் தமது ஆதரவை வழங்குமாறும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை இதில் பங்கு கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

நல்லிணக்கத்தை நோக்கிப் பயணிக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம். இந்தச் சூழலில் வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் நீண்ட காலமாகத் தடுத்து வைத்திருத்தல், முடிவுக்குக் கொண்டு வரப்படாத நீண்ட காலமான வழக்குகள் போன்றவை நல்லிணக்கச்செயற்பாட்டைப் பாதிக்கும். ஆகவே அரசியல் கைதிகளின் விடுதலையும், அவர்களின் புனர்வாழ்வும் அவசியம்.

சிவில் சமூக அமைப்பினராகிய நாம் அரசியல்கைதிகளின் விடுதலையை வலியுறுத்துகிறோம்.– என்றுள்ளது. (ற–ரி4)

# கடையடைப்புப் போராட்டத்துக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும்

## பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.13

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டு, அவர்கள் தத்தம் குடும்பத்தினருடன் இணைந்து வாழ வேண்டும். இந்தக் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நடத்தப்படும் பூரண கடையடைப்புக்கு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் முழுமையான ஆதரவை வழங்கும். – இவ்வாறு சமாசத் தலைவர் என்.கணேசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

சகல தமிழ் அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும். இந்த அரசியல் கைதிகள் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் அவர்களின் குடும்பத்தினர் தினமும் எதிர்பார்த்த வண்ணம் உள்ளனர். இந்தக் கைதிகள் விடுவிக்கப்பட்டு, அவர்கள் குடும்பத்தினருடன் இணைந்து வாழவேண்டும். நீண்டகாலம் சிறையில் வாடி வதங்கும் இந்தக் கைதிகளை அரசு உடனடியாக விடுதலை செய்ய முன்வர வேண்டும்.

கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நடத்தப்படும் இன்றைய கடையடைப்புப் போராட்டத்துக்கு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் முழுமையான ஆதரவை வழங்கும்.

சங்கங்கள் இன்று முழுமையாக மூடப்பட்டு, பணிகள் யாவும் இடைநிறுத்தப்படும். – என்றார். (ற–17)

# ஆறு வீதிகளைப் புனரமைக்க சாவ. பிரதேச சபை நடவடிக்கை

சாவகச்சேரி பிரதேச சபை இயங்கிய காலத்தில உறுப்பினர்களால் முன்மொழியப்பட்டுநிதி ஒதுக்கப்பட்ட மேலும் ஆறு வீதிகளைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மீசாலை வடக்கு சரவணமுத்து அறிவொளி சனசமூக நிலைய வீதி, எழுதுமட்டுவாழ் கரம்பகம் ஊரெல்லை வீதி, மீசாலை வடக்கு சியாமளா மில் வீதி, மட்டுவில் தெற்கு வாகையடி வீதி, மட்டுவில் – நுணாவில் பாணங்காட்டு வைரவர்வீதி, மீசாலை வீரக்கொடியார் வீதி ஆகிய ஆறு வீதிகளும் சுமார் 4 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன .

பிரதேச சபை இயங்கிய இறுதி வேளையில் கடந்த உத்தேச வரவு செலவுத்திட்டத்தில் உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட வீதிகள் புனரமைப்புக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டவேளையில் சபை கலைக்கப்பட்டது.

முன்மொழியப்பட்ட வேலைகளை மேற்கொள்ள சபையின் செயலாளர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக கடந்த மாதம் ஐந்து வீதிகள் புனரமைக்கப்பட்டன. மேலும் ஆறு வீதிகளைப் புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. (ற–9)




சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவரும் மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்தவருமான மாதுளுவாவே சோபித தேரரின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன. நேற்றைய தினம் தேசிய துக்க தினமாக அறிவிக்கப்பட்டிருந்தது. தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள அரச அலுவலகங்களில் தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தன. (ற–9)

# கைதிகளைப் பிணையில் விடுவது போராட்டத்தை பலவீனப்படுத்தவே

## வடபிராந்திய புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.13

அரசியல் கைதிகளில் குறிப்பிட்ட சிலரை மட்டும் நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்வதன் மூலம் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை. அது அரசியல் கைதிகளின் போராட்டத்தைப் பலவீனப்படுத்தி முடக்குவதாகவே அமையும் என்று தெரிவித்துள்ளது வடபிராந்திய புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி.

இன்று நடைபெறும் கடையடைப்புப் போராட்டத்துக்குத் தமது ஆதரவை வழங்குவதாகவும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

அதன் செயலாளர் செல்வம் கதிர்காமநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

அரசியல் கைதிகள் அனைவரும் முழுமையாக விடுதலைசெய்யப்பட வேண்டும். இது விடயத்தில் அரசும் ஜனாதிபதியும் கவனமெடுக்க வேண்டும். அதன் மூலம் இனங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்த முடியும் என நம்புகிறோம். 30 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் நடைபெற்று வந்த உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து ஆறு ஆண்டுகள் கழிந்துள்ளன. ஆனால் இதுவரையில் அரசியல் கைதிகள் எவரும் விடுதலை செய்யப்படவில்லை. அவர்களின் விடுதலை பற்றி ஆட்சியில் இருப்பவர்களுக்கு அக்கறை இருக்கின்றது என்று கூறிவிட முடியாது.

கடந்த 7 ஆம் திகதிக்கு முன்னர் கைதிகளை விடுதலை செய்வதாகக் கூறி ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேன உறுதி மொழி வழங்கியிருந்தார். அதனை நம்பிய கைதிகள் தற்காலிகமாகப் போராட்டத்தை நிறுத்தி விடுதலைக்காகக் காத்திருந்தார்கள். எதுவும் நடைபெறவில்லை என்பதால் மறுநாள் 8 ஆம் திகதி மீண்டும் உணவுதவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.

இதனை அறிந்த அரசு கைதிகளைப் பகுதி பகுதியாக விடுதலை செய்வதாகவும் முதற்கட்டமாக 30 பேரை விடுதலை செய்வதாகவும் கூறியது. ஆனால் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. சிறைகளில் தங்களின் விடுதலையை வலியுறுத்தி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். அவர்களின் விடுதலை நியாயமானது.

அவர்களின் போராட்டத்தை நிறுத்தி பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என எமது கட்சி வேண்டுகோள் விடுத்து, பல இடங்களில் கவனவீர்ப்புப் போராட்டங்கள் நடந்துள்ளன. இந்தப் போராட்டத்துக்கும் கட்சி ஆதரவு தெரிவிக்கிறது. அவர்களின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் இன்று நடைபெறவுள்ள கடையடைப்புக்கு எமது கட்சி பூரண ஆதரவைத் தெரிவிக்கிறது. எனவே கைதிகளின் நியாயமான போராட்டத்துக்கு அனைத்து மக்களும் ஒத்துழைக்க வேண்டும். – என்றார். (ற–ரி6,10)

# மதுபான சாலைகள் தொடர்பில் விசாரணை செய்ய 3 குழுக்கள்

## மாவட்டச் செயலகத்தில் விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்.குடாநாட்டில் இயங்கும் 10 மதுபானச் சாலைகள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து மூன்று குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

யாழ். குடாநாட்டில் இயங்கும் மதுபானச் சாலைகளில் தற்போதைய சட்டங்களுக்கு அமைவாகவும், மக்களுக்கு நேரடியாக இடையூறாகவும் உள்ளன என்று ஆதாரங்களுடன் மாவட்ட அரச அதிபர் மற்றும் மாகாண ஆளுநர் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் நேரில் ஆய்வு செய்வதற்காக 9 பேர் அடங்கிய 3 விசேட குழுக்கள் மாவட்டச் செயலகத்தில் தமது விசாரணைகளை நடத்தி வருகின்றன.

இதில் முறைப்பாட்டாளர்கள் மற்றும் மதுபானசாலை உரிமையாளர்கள் ஆகியோரை நேரில் அழைத்து ஆய்வில் ஈடுபடும் அதிகாரிகள் இது தொடர்பிலான தமது இறுதி முடிவை மதுவரித் திணைக்களத்துக்குச் சமர்ப்பிப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் சில தனிப்பட்டவர்களின் செல்வாக்கையும், ஆரம்ப காலத்நில் இருந்த சட்டக் குறைபாடுகளையும் பயன்படுத்தி பலரும் அனுமதியை பெற்று மதுபான சாலைகளை நடத்துவதால் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பில் நீண்டகாலமாகச் சுட்டிக்காட்டப்பட்டு வந்தது. அதையடுத்தே குறித்த விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ற–101)

## பரீட்சை மண்டபம் மாற்றம்

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் பட்ட மேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் 2014/2015 கல்வியாண்டு மாணவர்களுக்குரிய இறுதிப் பரீட்சை 14ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாக வீதியில் உள்ள வணிகத் துறை சார் பரீட்சை மண்டபத்தில் நடைபெறும் என யாழ்.[illegible] ய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ற–10)

## தெய்வீக சொற்பொழிவு

கந்தசஷ்டி விரதகாலத்தை முன்னிட்டு மல்லாவி முருகன் ஆலயத்தில் இன்றைய விசேட தெய்வீக சொற்பொழிவாக மு.ப 11 மணிக்கு 'முருகன் பெருமை' எனும் தலைப்பில் தெய்வத் தமிழ்ச் சுடர் இராசையா ஸ்ரீதரன் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஐ)

நூலகம்

2015 நவம்பர் 13 வெள்ளிக்கிழமை உதயன்



## முதியோர் தின நிகழ்வு ஒத்திவைப்பு

வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெற இருந்த சிறுவர் முதியோர் மற்றும் மாற்றுவலுவுடையோருக்கான தினம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வு எதிர்வரும் 20ஆம் திகதி வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என பிரதேச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர். (ற)

## அன்னயாவினும் கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.13

மன்னார் அமுதனின் 'அன்னயாவினும்' கவிதை நூல் வெளியீடும் குறும்பட திரையிடலும் நாளை சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் மஹா தர்மகுமார தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் கலையருவி இயக்குநர் அருட்பணி. தமிழ் நேசன் அடிகளார் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக இந்து மஹா சபைத் தலைவர் எஸ்.எஸ்.இராமகிருஷ்ணன், பிராந்திய வைத்திய அதிகாரி கே.அரவிந்தன், சித்தமருத்துவ நிபுணர் எஸ்.லோகநாதன், ஆகாஷ்ஹோட்டல் உரிமையாளர் எஸ்.தினகரன், மன்னார் தமிழ்ச் சங்க சிரேஷ்ட உப தலைவர் ஜனாப். மக்கள் காதர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூலின் நயவுரையை மன்னார் தாழ்வுப்பாடு புனித வளனார் றோ.க.பா. தமிழாசிரியர் திருமதி.ஜே.சி.டிலானியும், சிறப்புரையை மன்னார் தமிழ்சங்கத்தின் நிர்வாக செயலாளர் கவிஞர்.ஜே.ஆர்.மயூரனும் குறும்பட விமர்சனத்தை தேசியக் கலைஞர் எஸ்.ஏ.உதயனும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட பாடகர்கள் வழங்கும் சிறப்பு இன்னிசைக் கீதங்கள் நடைபெறவுள்ளதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் திருமதி. வாசுவதா தில்லைநாதன் தெரிவித்துள்ளார். (ற-10,ரி6)

# காணாமல் போனோர் அத்தாட்சிப் பத்திரம் இறப்புச் சான்றிதழாக மாறிவிடக் கூடாது

## ஐ.நா. அதிகாரிகளிடம் வலியுறுத்தினார் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர்

மன்னார், நவ.13

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக வழங்கப்படும் அத்தாட்சிப் பத்திரம் காலப் போக்கில் இறப்புச் சான்றிதழாக மாறிவிடக் கூடாது என்ற விடயம் ஐ.நா. அதிகாரிகளிடம் வலியுறுத்தப்பட்டது என்று தெரிவித்தார் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலைதாசன்.

அதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

மன்னார் மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக விசாரனைகளை மேற்கொள்ளுவதற்காக நேற்றுமுன்தினம் புதன் கிழமை மன்னார் வந்திருந்த ஐ.நா அதிகாரிகள் குழு மன்னார் கீரி ஞானோதய மண்டபத்தில் தமது விசாரணைகளை பதிவு செய்தனர். அவர்கள் இரண்டு பிரிவாக தமது விசாரனைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஒரு பிரிவினர் காணாமல் போனவர்களின் உறவினர்களிடமும், மற்றைய பிரிவினர் சிவில் சமூகத்தினருடனும் விசாரணைகளை மேற்கொண்டனர். காணாமல் போனவர்கள் தொடர்பாக 8 பேரும், சிவில் சமூகம் தொடர்பாக 8 பேரும் கதைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. காணாமல் போனவர்களின் குடும்ப உறவினர்கள் 50 பேர் விசாரணைகள் இடம்பெற்ற மண்டபத்தினுள் இருக்க அனுமதிக்கப்பட்டனர். ஏனைய காணாமல் போனவர்களின் குடும்ப உறவினர்கள் மண்டபத்திற்கு வெளியில் இருப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

ஐ.நா.அதிகாரிகள் குழு எங்களிடம் கலந்துரையாடிய போது நாங்கள் அவர்களுக்கு சில திட்டங்களை முன்வைத்துள்ளோம். எங்களால் சேகரிக்கப்பட்ட காணாமல் போன 4 ஆயிரத்து 700 பேரின் பெயர் விவரங்களை அவர்களிடம் நாங்கள் கையளித்தோம். எங்களால் இதுவரை சேகரிக்கப்பட்ட விவரங்களையே கையளித்தோம். இன்னும் பலருடைய விவரங்கள் சேகரிக்க வேண்டி உள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை விசாரிக்கும் ஐ.நா.குழுவுக்கு அனுப்பப்படுகின்ற தகவல்கள் மீண்டும் அரசுக்கு அனுப்பப்படுகின்றன. அதற்கு அரசு பதில் அளிக்கின்ற போது பொய்யான தகவல்களை வழங்குகின்றது என்று நாம் அவர்களுக்கு சுட்டிக்காட்டினோம்.

குறிப்பாக ஒருவருடைய வழக்கு தொடர்பாக ஒரு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அரசு கூறுகின்றது. அது குறித்து நாம் விசாரிக்கும்போது அவ்வாறான வழக்குகள் எவையும் குறித்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. இவற்றையும் நாங்கள் அவர்களிடம் எடுத்துக் கூறினோம்.

காணாமல் போனவர்களை விசாரணைசெய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. இன்னும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாது இயங்கிக் கொண்டுள்ளது என்றும் நாங்கள் கூறியுள்ளோம். ஆணைக்குழுவில் பல குறைபாடுகள் உள்ளதை எடுத்துக் கூறினோம்.

தற்காலிகமாக ஐ.சி.ஆர்சியால் மக்கள் மத்தியில் சென்று வாழ்வாதாரமும், உளவியல் தொடர்பிலான கருத்துக்களை நடத்தப் போவதாகவும் காணாமல் போனவர்களுக்கான சான்றிதழ்களை வழங்க உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அதற்கு நாங்கள் அவர்களிடம் கூறினோம். கலந்துரையாடல்கள் எல்லாம்நீதியைநிலைநாட்டுவதைக் குழப்பக்கூடாது. இவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதை குழப்பக் கூடாது என தெரிவித்தோம். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படும் போது அது காலப்போக்கிலே மரணச்சான்றிதழாக அமையக்கூடாது என்றும் சுட்டிக்காட்டினோம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படுவதற்கு முன்னர் இங்குள்ள சிவில் அமைப்புக்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களோடும் கலந்துரையாடி இவ்வாறான முடிவுகளை எடுக்க வேண்டும் என நாங்கள் ஐ.நா.பிரதிநிதிகள் குழுவிடம் வலியுறுத்தினோம். – என்றார். (ற-56)

# கைதிகள் விடுவிப்பு இழுத்தடிக்கின்றமை அரசு குறித்துச் சந்தேகத்தை எழுப்புகிறது

## பல்கலை விஞ்ஞான சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 13

அரசியல் கைதிகளின் விடுதலையை இழுத்தடிப்பது அரசின் மீதான மற் றும் அதன் எதிர்காலச் செயற்பாட்டின் மீதான நம்பிக்கையில் சந்தேகத்தைத் தோற்றுவிக்கும் என்று தெரிவித்துள்ள யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் இன்றைய கடையடைப்புக்கு ஆதரவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தேசிய நல்லிணக்கத்துக்காக உழைப்பதாகக் கூறும் நல்லாட்சிக்கான தேசிய அரசானது அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பை வழங்கி விடுதலை செய்வதன் மூலம் நல்லிணக்கத்தை நோக்கிய முதலாவது அடியை எடுத்துவைக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கும் அரசுக்கும் இடையில் நிலவும் இடைவெளி மற்றும் தமிழ் மக்களுக்கு அரசின் மீதுள்ள நம்பிக்கையீனம் போன்றவற்றைப் போக்குவதற்கு மேற்படி நடவடிக்கை உதவும்.

மேற்படி கைதிகள் தமது தனிப்பட்ட தேவைகளுக்காக சட்டத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களல்ல. அவர்களின் இன்றைய நிலைக்கு எமது நாட்டில் நிலவிய அரசியல் சூழ்நிலையே முழுமையான காரணமாகும். எனவே அவர் கள் அனைவரும் அரசியல் கைதிகளாகவே கருதப்படவேண்டும்.

அரசியல் கைதிகள் அனைவருக்கும் காலதாமதமின்றி பொது மன்னிப்பு வழங்கப்படுவது தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வின் முக்கிய அம்சமாகும். அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நடைபெறும் அனைத்துப் போராட்டங்களுக்கும் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் தனது தார்மீக ஆதரவை எப்போதும் வழங்கும். – என்றுள்ளது. (ற-4)

# இனந்தெரியாதோரால் கராஜ் தீ வைத்து எரிப்பு

## இருவருக்குக் காயம்: மோ. சைக்கிள்கள் நாசம் வடமராட்சியில் நேற்றுச் சம்பவம்

நெல்லியடி, நவ.13

வடமராட்சி உடுப்பிட்டிச் சந்தியில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் கடையொன்று நேற்று அதிகாலை இனந்தெரியாதோரால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது என்றும் இந்தச் சம்பவத்தில் தீக்காயங்களுடன் இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் மீடின் தெரிவித்தார்.

இது பற்றிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் இது தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

அதிகாலை 1.45 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது என்று கூறப்படுகின்றது. காயமடைந்த இரு இளைஞர்கள் குறித்த கடையில் வேலை செய்பவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. குறித்த இரு இளைஞர்களும் பருத்தித்துறை ஆதார



வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு வேலைகளை முடித்துவிட்டுக் கடையைப் பூட்டி விட்டு பணியாளர்கள் உறங்கியுள்ளனர். அப்போது இனந்தெரியாதோர் சிலர் கடைக்கு தீ மூட்டியுள்ளனர். இதில் கடையில் உறங்கிக் கொண்டிருந்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கடை கடந்த ஆறு மாதமாக இயங்கி வருகின்றது என்றும் உரிமையாளர் மற்றும் மூன்று பணியாளரும் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணி வரை கடையில் இருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் கடையில் திருத்த வேலைக்காக நிறுத்தப்பட்டிருந்த ஆறுக்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் தீயில் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. மேலும் சில பகுதியளவில் சேதமாகியுள்ளன.

சம்பவ இடத்திற்குச் சென்ற வல்வெட்டித்துறைப் பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டனர். இது தொடர்பில் சந்தேக நபர்கள் யாரும் இணங்காணப்படவில்லை எனவும் மேலதிக விசாரணை கள் மேற்கொள்ளப்படுவதாகவும் பிரதான பொலிஸ் பரிசோதகர் மீடின் தெரிவித்தார். (ற-109-108)

# நடைப்பிணமாக வாழும் எனக்கு மகனைத் திரும்பத் தாருங்கள்

## ஐ.நா. வதிவிட காரியாலயம் முன்பாக மகனைத் தொலைத்தவர் கண்ணீர்

இலங்கை அரசின் கோரத் தாக்குதல்களால் காலத்திற்கு காலம் ஒவ்வொருவராக எனது குடும்பமே அழிக்கப்பட்டது. நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். பிடித்துச் சென்ற எனது மகனை என்னிடம் தாருங்கள். – இவ்வாறு உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார் இன்பருட்டியைச் சேர்ந்த லட்சுமிஅம்மா என்ற தாய்.

நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள ஐக்கிய நாடுகள் வதிவிட காரியாலயத்தின் முன்பாக காணாமற்போனோரின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமது காணாமல்போன பிள்ளைகளை கண்டறிவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதில் கலந்துகொண்டிருந்தவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எனது குடும்பத்தில் இழப்புகள் தொடர்கதையாக உள்ளன. 1991ஆம் ஆண்டு இன்பருட்டியில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற எனது கணவரைக் கடலில் வைத்துக் கைது செய்துகொண்டு சென்றனர். அவரை பலாலி இராணுவ முகாமில் வைத்து உயிரோடு கொளுத்தியே கொன்றனர். மூன்று பெண் பிள்ளைகள் உட்பட ஐந்து பிள்ளைகளையும் பெரும் சிரமத்தின் மத்தியில் தையல் வேலை செய்தே வளர்த்தேன். அதன் பின்னர் போர் காரணமாக வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்றோம் என்று அவர் மேலும் தொடர்ந்தார்.

அந்தக் காலப் பகுதியில் ஒரு மகள் திருமணம் செய்து ஒரு பிள்ளைக்கும் தாயானார். பின்னர் எறிகணைத் தாக்குதலில் அவளின் கணவரும் குழந்தையும் அந்த இடத்திலேயே இறந்தனர். மகள் விரக்தியில் இந்தியாவுக்கு அகதியாகச் சென்று முகாமில் வாழ்கின்றார்.

இரண்டாவது மகளும் திருமணம் செய்துள்ளார். இருமகன்களும் இறுதிப் போரின்போது காணாமல் போயிருந்தனர். மூத்த மகன் திருமணம் செய்த நிலையில் காணாமல் போயிருந்தார். இப்போது அவர் விடுவிக்கப்பட்டிருந்தாலும் காயம் காரணமாக தொழில் செய்ய முடியாத நிலையில் உள்ளார்.

பொருளாதார நெருக்கடி நிலையை எண்ணி எனது கடைசி மகள் 2014ஆம் ஆண்டு மத்திய கிழக்கு நாடு ஒன்றுக்குத் தொழிலுக்குச் சென்றார். கடந்த சித்திரை மாதம் அவர் அங்கு இறந்துவிட்டார் என்று எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவரின் உடலைக் கூடக் காட்டவில்லை. இப்போது எனது உடல் இயலாமையையும் கருத்தில் கொள்ளாது தையல் வேலை செய்து வாழ்க்கையை நகர்த்துகின்றேன்.

இறுதிப் போரின்போது காணாமல் போன எனது கடைசி மகன் விஜயகாந் 85ஆம் ஆண்டு பிறந்தவன். இந்த அரசு அவனை விடுவிக்கும் என்று நம்பியிருந்தேன். ஆனால் அந்த நம்பிக்கை இப்போது இல்லை. அதனால்தான் வெளிநாட்டை நம்பி ஐ.நா. அதிகாரிகளைத் தேடி வந்தேன். – என்று லட்சுமியம்மா கண்ணீருடன் தெரிவித்தார். (ற-101)

உதயன் வெள்ளிக்கிழமை நவம்பர் 13 2015

# பயிரழிவு ஏற்பட்டால் மாற்று நடவடிக்கை

## கிளி.கமநல சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ.13

நாடு பூராகவும் பெய்து வரும் கடும் மழையால் கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக பயிர் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளுக்கு பயிர் அழிவு ஏற்படால் அதற்கான மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கிளிநொச்சி மாவடட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தயாளுபன் தெரிவித்துள்ளார்.

தற்போது பெய்துவரும் கடும் மழையால் கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோகப் பயிர்ச் செய்கையை மேற் கொண்ட விவசாயிகளுக்குப் பாதிப் புகள் ஏதும் ஏற்பட்டனவா என்பது குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கிளிநொச்சிமாவட்டத்தைப் பொறுத்தவரையில் இதுவரை பயிர்கள் அழிவடைந்ததற்கான எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. கமநல சேவைகளின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக காலபோக பயிர்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் மழையால் அழிவுகளை எதிர்கொள்ளும் பட்சத்தில் அவர்களுக்கான மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சட்டத்துக்கு புறம்பான இடங்களில் விதைத்துவிட்டு அழிவுகள் ஏற்பட்டுவிட்டன எனக் கூறினால் அதற்கு எதுவும் செய்யமுடியாது. காலபோகப் பயிர்ச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளுக்கான உரங்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன- என்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மொத்தமாக 31 ஆயிரத்து 760 ஏக்கர் நிலப்பரப்பில் செய்ய திட்டமிடப்பட்ட காலபோகத்துக்கான விதைப்பு நடவடிக்கைகள் கடந்த மாதம் 15ம் திகதி ஆரம்பமானது. அறுவடைக்குரிய நாளாக வருகின்ற மாசி மாதம் 28 திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற-21,ரி3)

# உடலில் ஏற்படும் மாற்றம் மூலம் நீரிழிவைக் கண்டுபிடிக்கலாம்

## மருத்துவ நிபுணர் எஸ்.சுகந்தன் விளக்கம்

யாழ்ப்பாணம். நவ. 13

உங்களுக்குஏற்படும்நிறைகுறைவு, கைகால் விறைப்பு, பார்வை மங்குதல் உள்ளிட்ட அறி குறிகளைக் கொண்டு உங்க ளுக்கு நீரிழிரிவு உள்ளதா என்று நீங்களே ஆராய முடியும். அவை பற்றிய அறிவைப் பொதுமக்கள் அனைவரும் கொண்டிருக்க வேண்டும். - இவ்வாறு யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவநிபுணர் எஸ்.சுகந்தன் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்துஅவர் மேலும் தெரிவித்ததாவது-

இரத்தத்தில் உள்ள குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்த முடியாத போது நீரிழிவு ஏற்படுகிறது. இது இன்சுலின் எனும் ஓமோன் குறைபாட்டால் ஏற்படுகிறது. நீரிழிவு நோயைக் குணப்படுத்த முடியாது. ஆனால் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும். கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். நீரிழிவு நோய் ஏற்படுகிறது என்றால் அதற்கான சில அறிகுறிகள் உங்கள் உடலில் ஏற்படும். அதாவது அடிக்கடி சிறுநீர் கழித்தல், அதிகளவான தண்ணீர்த் தாகம், பசி கூடுதலாக இருத்தல், நிறை கூடுதல் அல்லது குறைதல், பார்வை மங்குதல், கை,கால்கள் விறைப்பு ஏற்படுதல் இருக்கும். இந்த அறிகுறிகள் இருந்தால் கட்டாயம் மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும்.

குடும்பத்தில் யாராவது ஒருவருக்கு நீரிழிவு நோய் இருந்தால் அந்தக் கும்பத்தில் ஏனையவர்களுக்கும் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம். உடற்பருமன் கூடுதலாக உள்ளமையும் உரிய முறையற்ற உணவுப் பழக்க வழக்கமும் இதற்குக் காரணம். முக்கியமாக உடற்பயிற்சி இல்லாமை, இனிப்பான உணவுகளை அதிகளவில் உட்கொள்வது உள்ளிட்ட காரணங்களாலும் இந்நோய் ஏற்படுகிறது.

இரத்தத்தில் உள்ள குளுக்கோசின் அளவை வெவ்வேறு நேரங்களில் பரிசோதிப்பதன் மூலமாக நீரிழிவு நோய்க்கான அறிகுறியைப் பரிசோதிக்க முடியும்.

நீரிழிவு நோய் வருவதை எப்படித் தடுப்பது என்பது பற்றி அவதானம் செலுத்த வேண்டும். முதலில் உணவுப் பழக்கத்தை மாற்றி அமைக்க வேண்டும். குறிப்பாக சீனி அதிகளவு கொண்ட உணவுப் பொருள்களை உட்கொள்வதனைத் தவிர்க்க வேண்டும். உடற்பயிற்சி நாளாந்தம் செய்வதன் மூலமாகவும் நீரிழிவைத் தடுக்க முடியும்.

இவற்றைப்பின்பற்றத் தவறின் மூன்றிலொரு பகுதியினருக்கு நீரிரிவு ஏற்படுவதனைத் தடுக்க முடியாது. அந்த மூன்றிலொரு பகுதியினரில் நீங்களும் இருக்கலாம் என்பதனால் மேற்கூறிய அறிவுரைகளைப் பின்பற்ற வேண்டும். - என்றார். (ற-4)

# சரியான தகவல்கள் கிடைத்தால் தொண்டராசியருக்கு நியமனம்

## கல்வி ராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ. 13

சரியான தகவல்கள் கிடைக்கும் பட்சத்தில் தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என கல்வி ராஜாங்க அமைச்சர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நேற்று வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் வன்னி மாவட்டத்தை சேர்ந்த தொண்டராசிரிய சங்கப் பிரதிநிதிகள் கல்வி ராஜாங்க அமைச்சருடன் கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்துள் ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டராசிரியர் சங்கத் தலைவர் உட்பட பிரதிநிதிகள் பலரும் வவுனியா மாவட்டத்துக்கு வந்திருந்த ராஜாங்க அமைச்சருடன் தொண்டராசிரியர் நியமனம் தொடர்பாக கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

அதன்போது பல கஷ்டங்களுக்கு மத்தியில் தாம் பணியாற்றி வருகின்றனர் என்றும் தமக்கு நியமனம் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்த தொண்டர் ஆசிரியர்கள் இது தொடர்பாக வடமாகண கல்வி அமைச்சு, கல்வித் திணைக்களம் ஆகியவற்றுக்குத் தெரியப்படுத்தியும் - ஆர்ப் பாட்டங்கள் நடத்தியும் தமக்கான நியமனம் வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த ராஜாங்க அமைச்சர் -

தொண்டராசிரியர் தொடர்பாக வடமாகாண கல்வி அமைச்சின் மூலம் தங்களுக்கு முழுமையான பெயர்ப் பட்டியல் மற்றும் விவரங்கள் தரப்படவில்லை. அதனை வடமாகண கல்வி அமைச்சு வழங்கப்படும் பட்சத்தில் தொண்டராசிரியர் நியமனத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்படும். - என்று தெரிவித்தார். (ற-ரி3)

# காவடியும் ஆசீர்வாத நிகழ்வும்

யாழ்ப்பாணம், நவ.13

வீணாகான குருபீடம் நடத்தும் முன்பள்ளி சிறுவர்களின் நலன் வேண்டிய காவடியும் ஆசீர்வாத நிகழ்வும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பி.ப 3 மணிக்கு சித்தங்கேணி சிவாலயத்தில் இருந்து பண்ணாகம் முருகமூர்த்தி ஆலயத்தை காவடியும் பாதயாத்திரையும் சென்றடையவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்நிதாச்சாரியார் சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் கலந்துகொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினராக இந்தியப் பிரதித் துணைத் தூதுவர் சு.தட்சணாமூர்த்தி கலந்துகொள்ளவுள்ளனர். (ற-10)

# இலைச்சுருள் நோயைத் தடுக்க வேப்பம் பிண்ணாக்கு சிறந்தது

## மிளகாய் செய்கையாளர்களுக்கு விவசாயத் திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம், நவ.13

மிள்காய்ச் செய்கையில் இலைச்சுருள் நோயைக் கட்டுப்படுத்த வேப்பம் பிண்ணாக்கைப் பயன்படுத்துமாறு வடமாகாண விவசாயத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் கே.சிறீபாலசுந்தரம் தெரிவித்துள்ளதாவது-

யாழ்ப்பாணத்தில் மிளகாய்ச் செய்கை பாரம்பரியமாக மேற்கொள்ளப்படும் பிரபலமான பொருளாதாரப் பயிர். கடந்த 15 வருடங்களுக்கு முதல் யாழ்ப்பாணத்தில் மிளகாய்ச் செய்கை 600 ஹெக்டயருக்கு மேல் மேற்கொள்ளப்பட்டு செத்தல் மிளகாய் உற்பத்தி மூலம் யாழ். மாவட்ட மிளகாய் செய்கையாளர்கள் சிறந்த பொருளாதார வருவாயை எட்டினர்.

கடந்த 15 வருடங்களுக்கு மேல் தொடரும் பூகோள வெப்பமயமாதலால் ஏற்படும் ஏற்படும் இலைச்சுருள் கூட்டு நோய் அதாவது குருமன் நோய் மிளகாய் செய்கைக்கு சவாலாக அமைந்துள்ளது. கடந்த இரண்டுவருடங்களாக யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த நடவடிக்கையின்படி வேப்பம் பிண்ணாக்கை அடிக்கட்டாக எருவுடன் கலந்து குழிகளுக்கு பயன்படுத்துவதன் மூலமும் மேற்கட்டாக யூரியா போன்ற பசளைகளுடன் கலப்பதன் மூலமும் விவசாயிகள் குருமன் எனப்படும் இலைச்சுருள் கூட்டு நோயை வெற்றிகரமாக முறியடிக்க முடிகின்றது.

இந்தச் செய்கை நடைமுறை காலபோகத்திலும் பல விவசாயிகளின் தோட்டத்தில் முன்மாதிரியாக மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே இந்த வேப்பம் பிண்ணாக்கை பயன்படுத்த ஆர்வமுள்ள விவசாயிகள் அருகிலுள்ள விவசாயப் போதனாசிரியர்கள் அல்லது விவசாயத் திணைக்களத்தினருடன் தொடர்புகொண்டு வழங்கப்படும் ஆலோசனைகளுக்கு அமைவாக செயற்பட்டு மிளகாய்ச் செய்கையில் வெற்றிகாணலாம். - என்றார். (ற-10)

# வாகனத் தரிப்பிடம் இன்மையால் கல்வி அலுவலர்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், நவ.13

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகமும் வடமாகாண கல்விப் பணிமனையும் ஒரே வளாகத்தில் ஒரே கட்டடத் தொகுதியில் அமைந்துள்ளன. அங்கு தமது மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட வாகனங்களை நிறுத்த உரிய கொட்டகை இல்லாததால் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றோம் என்று அலுவலர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த இரண்டு அலுவலகங்களிலும் ஏராளமான அலுவலர்கள் கடமையாற்றி வருகின்றனர். அவர்களின் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் என்பவற்றை நிறுத்துவதற்கு கொட்டகை வசதி ஏற்படுத்தப்படாமையால் தற்போது பெய்துவரும் மழை காரணமாக சிரமங்கள் தோன்றியுள்ளன.

இந்த வாகனங்கள் வெயில் காலத்தில் காய்ந்து கொண்டிருப் பது ஒருபுறம் இருக்க மழை காலத்தில் நனைந்து கொண்டிருப்பதால் சில வாகனங்களை இயக்க முடியாத நிலை (ஸ்ராட் பண்ண) காணப்படுகிறது என்று அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அதனால் அலுவலகம் முடிந்து வீடுகளுக்குச் செல்வதில் சிரமமானதொரு நிலை உருவாகியுள்ளது. இதனால் தூர இடங்களிலிருந்து வருகின்ற அலுவலர்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதன் காரணமாக அவர்கள் பஸ்களில் பயணித்து அலுவலகத்துக்கு வரவேண்டியுள்ளது. இவர்களில் அநேகமானவர்கள் யாழ்ப்பாணம் சென்று பின்னர் அங்கிருந்து மருதனார்மடம் செல்ல வேண்டியுள்ளது. இதனால் அதிக நேரம் மற்றும் பணச்செலவுகளை இவர்கள் எதிர்கொள்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

தமது பெறுமதியான வாகனங்கள் மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் பழுதடைகின்றன என்றும் அலுவலர்கள் வேதனை தெரிவித்தனர். அலுவலர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு பாதுகாப்புக் கொட்டகையை அமைத்து வழங்க வேண்டுமென உரிய அதிகாரிகளை அவர்கள் கோருகின்றனர்.

இது தொடர்பில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாருடன் தொடர்பு கொண்டுகேட்டபோது அவர் தெரிவித்தாவது:

கட்டடத்தின் பின்புறமாக தற்போது ஒரு கொட்டகை அமைக்கப்பட்டு வருகிறது. அதன் 50 வீதான வேலைகள் நிறைவடைந்துவிட்டன. அதன் பின்னர் அங்கு வாகனங்களை நிறுத்த முடியும். மாகாணத் திணைக்களம் மற்றும் வலயக் கல்வித் திணைக்களம் என்பனவற்றின் பணியாளர்களாக சுமார் 200 பேர் வரையில் பணிபுரிகின்றனர். அந்தக் கொட்டகையில் போதிய இடமில்லாதிருப்பின் வேறொரு கொட்டகை அடுத்தவருடம் அமைக்கலாம். தற்போது போதிய நிதி இல்லை. மாகாணக் கல்வித் திணைக் களத்துக்கு என உரிய இடம் இன்னும் இன்னும் இல்லை. அதனாலும் சிக்கல் உள்ளது.- என்றார். (ற-4)

# மின்னல் தாக்கியதால் நீர் விநியோகத்தில் தடை

## விரைவில் சீராக்கப்படும் என்று யாழ்.மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.13

மாநகர சபையின் நீர் விநியோக நிலையத்தில் ஏற்பட்ட மின்னல் தாக்கதால் நீர்ப் பம்பிகள் பழுதடைந்துள்ளன. அதனால் நீர் விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.

குறித்த பம்பிகளைச் சீராக்கும் நடவடிக்கைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன என்று தெரிவித்த ஆணையாளர் அவை சீராக்கப்பட்டதும் நீர் விநியோகம் வழமைக்குத் திரும்பும் என்றும் தெரிவித்தார்.

சீராக்கும் நடவடிக்கைகள் முடிவடையும் வரை மாநகர சபை குடி தண்ணீர் பவுசர்கள் மூலமும் சிறிய நீர் விநியோகத் திட்டங்கள் மூலமும் குடி தண்ணீர் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-10)

2015 | நவம்பர் 13 | வெள்ளிக்கிழமை | உதயன்

# குமார் குணரட்ணம் கடத்தல் குறித்து மீளவும் விசாரிக்குக

## முன்னிலை சோசலிசக் கட்சி கோரிக்கை

கொழும்பு, நவ.13

குமார் குணரட்ணம் கடத்தப்பட்ட விவகாரம் குறித்து மீளவும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று முன்னிலை சோசலிசக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக குமார் குணரட்ணம் கடத்தப்பட்ட விடயம் குறித்து முன்னிலை சோசலிசக் கட்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தது. இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் மீளவும் விசாரணைகளை நடத்துமாறு கட்சியின் பரப்புரைச் செயலாளர் புபுது ஜாகொட கோரியுள்ளார். கட்சியின் முக்கிய மூன்று உறுப் பினர்கள் பொலிஸ் தலைமையகத்துக்குச் சென்று விசாரணைகளை மீளவும் ஆரம்பிக்குமாறு கோரியுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி குமார் குணரட்ணம் கடத்தப்பட்டிருந்தார். இந்த நிலையில் புதிய ஆதாரங்களின் அடிப்படையில் விசாரணைகளை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிலியந்தலை, கொட்டாவ மற்றும் கிரிபத்கொட ஆகிய மூன்று பொலிஸ் நிலையங்களில் கட்சி உறுப்பினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் பொலிஸ் தலைமையகத்தில் மற்றுமொரு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்படுகின்றது. கடத்தல் குறித்து தெளிவான சாட்சியங்கள் இல்லாத காரணத்தால் விசாரணைகளை முடிவுறுத்துவதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

எனினும், குமார் குணரட்ணம் கைது செய்யப்பட்டமை குறித்த அண்மையில் முன்னாள் பாதுகாப் புச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ச கருத்து வெளியிட்டிருந்தார். இந்தக் கருத்தின் அடிப்படையில் விசாரணைகளைத் தொடர முடியும் என ஜாகொட கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜே.வி.பி.யின் அனுரகுமார திஸாநாயக்கவின் தகவல்களுடன் குமார் குணரட்ணம் கடத்தப்பட்டார் என்று கோத்தபாய ராஜபக்ச சிங்கள இணையத் தளமொன்றுக்கு செவ்வியளித்துள்ளார் என்றும் ஜகொட குற்றம் சுமத்தியுள்ளார். எனவே இந்த தகவல்களின் அடிப்படையில் மீளவும் விசாரணை நடத்தப்பட முடியும் எனவும் அவர் இதன் போது தெரிவித்துள்ளார். (ற)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கூடாது

## மகிந்த எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, நவ.13



தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படக் கூடாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். தெரிவு செய்துள்ள பிரதான அணிகளை அரசு விடுதலை செய்துள்ளது. விடுதலை செய்வது என்றால், அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும். – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது–

அத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட உள்ளவர்கள் தொடர்பில் நாட்டு மக்களிடம் அச்சம் இருக்கின்றது. கடந்த காலத்தைப் போன்ற நிலைமை ஏற்படும் என்பதால் அவர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குகளை நடத்தி முடிக்க வேண்டும். அப்போது குற்றம் செய்தவர்கள் உள்ளே இருப்பார். குற்றம் செய்யாதவர்களை விடுதலை செய்ய முடியும். அதனால் அரசு என்ற முறையில் எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது.– என்றார். (ற)

# அரசியல் கைதிகளை அரசு விடுதலை செய்ய வேண்டும்

## வலியுறுத்துகின்றார் அசாத் சாலி

கொழும்பு, நவ.13



சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளும் எந்த விதமான நிபந்தனைகளும் இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும். அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதாக அரசு கூறியிருந்த போதிலும் அவர்களை விடுவிக்காததால் இலங்கை அரசு மீதான நம்பிக்கை அற்றுப்போய்விடக்கூடிய அபாயமும் காணப்படுகின்றது. எனவே நல்லாட்சிக்கான அரசானது சிறையில் வாடும் 31 தமிழ் அரசியல் கைதிகளை மட்டுமல்லாது ஏனைய 192 கைதிகளையும் விடுவிக்க வேண்டும்.– என்றார். (ற)

# கடவுச் சீட்டு பிரச்சினையில் சிக்கிய துமிந்த

கொழும்பு, நவ.13

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா இராஜதந்திர வெளிநாட்டு கடவுச்சீட்டில் கடந்த செவ்வாய்கிழமை சிங்கப்பூர் செல்ல முயற்சித்த போதிலும் அந்தக் கடவுச்சீட்டில் செல்வதற்கு அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

குடிவரவு மற்றும் குடியகல்வு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

ஈகே 348 விமானத்தில் சிங்கப்பூர் செல்வதற்கு கடந்த செவ்வாய்க்கிழமை துமிந்த சில்வா விமான நிலையத்திற்கு சென்றுள்ளார் என்றும் அவர் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படவில்லை என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதையடுத்து அவர் நேற்றுமுன்தினம் சாதாரண கடவுச் சீட்டில் தனது சிங்கப்பூர் பயணத்தைத் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# தனியார் சம்பள அதிகரிப்புக்கு நாடாளுமன்றத்தில் பிரேரணை

## டபிள்யூ.டீ.ஜே. செனவிரத்ன தெரிவிப்பு

கொழும்பு, நவ.13



தனியார் துறை ஊழியர்களின் ஊதியத்தை 2 ஆயிரத்து 500 ரூபாவால் அதிகரிக்கும் வகையிலான பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் டபிள்யூ.டீ.ஜே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக ஆயிரம் ரூபா கொடுக்க வேண்டும் என்று அண்மையில் இடம்பெற்ற பேச்சின் போது தொழிற்சங்கங்கள் கோரிக்கை முன்வைத்தன.

எனினும் அதனை நிராகரித்த முதலாளிமார் சம்மேளனம் ஆயிரம் ரூபா சம்பளத்தை நாளாந்தச் சம்பளமாகக் கொடுக்க முடியாது என்று குறிப்பிட்டதோடு, இறப்பர், தேயிலை விலைகள் சந்தையில் குறைவடைந்திருக்கின்ற நிலையில் தொழிலாளர்களுக்கான தற்போதைய சம்பளத்தைக்கூடக் கொடுக்க முடியாத இக்கட்டான நிலை காணப்படுகின்றது என்றும் தெரிவித்தது.

எனவே தோட்டத் தொழிலாளர்களுக்கு எந்தவொரு சம்பள உயர்வையும் வழங்க முடியாதென்றும் முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்தது.

இந்த நிலையில் நாளாந்த சம்பளக் கொடுப்பனவாக இருக்கும் 620 ரூபாவை 770 ரூபாவாக அதிகரிக்கும்படி நான் இந்தச் சந்திப்பின்போது வேண்டுகோள் விடுத்தேன்.

எனினும் இது தொடர்பில முதலாளிமார் சம்மேளனத்திற்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையில் முரண்பாடு காணப்படுகின்றது. விரைவில் இணக்கத்துக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.– என்றார். (ற)

# பிணை முறி மோசடி குறித்து சுயாதீன விசாரணை தேவை

## முன்னாள் அமைச்சர் டலஸ் தெரிவிப்பு

கொழும்பு, நவ.13



மத்திய வங்கியின் பிணை முறி மோசடி குறித்து சுயாதீனமான முறையிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

அவன்ட்கார்ட் பிரச்சினை நாட்டின் ஏனைய பிரச்சினைகளை மறக்கடிக்கச் செய்துள்ளது.

மோசடி இடம்பெற்றிருந்தால் அது குறித்து விசாரணை நடத்தி அவற்றை வெளிப்படுத்துவது அரசின் கடமையாகும். துறைசார் அமைச்சர்கள் சிலர் இவ்வாறு மோசடி இடம்பெறவில்லை எனக் கூறுகின்றனர்.

எனினும் நாட்டுக்கு உண்மையை வெளிப்படுத்த வேண்டியது அரசின் பொறுப்பாகும். அவன்ட்கார்ட் பிரச்சினையை ஓர் போர்வையாக பயன்படுத்தி ஏனைய பிரச்சினைகளை மூடி மறைக்க முடியாது.

இந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மிகப் பெரிய மோசடியாக மத்திய வங்கி பிணை முறி மோசடியை குறிப்பிட முடியும்.

நல்லாட்சி அரசாங்கத்தின் பங்குதாரர்களான ஜே.வி.பி. கட்சியினரால் இந்த மோசடி குறித்து முதன் முதலாக வெளிப்படுத்தப்பட்டது. இந்த விடயம் குறித்து லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழுவிடம் அமைச்சரவையின் பிரபல அமைச்சர் ஒருவரே முறைப்பாடு செய்தார்.


மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் வெளிநாட்டு பிரஜையாவார். இந்த விடயம் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட கோப் ஆணைக்குழுவின் அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருந்த தினம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

ஆணைக்குழுவில் சாட்சியமளித்த மத்திய வங்கி அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். எனவே மத்திய வங்கியின் மோசடிகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். – என்றார். (ற)

# அநுர குமார எம்.பிக்கு காது கேட்காத நோயாம்

## உதய கம்மன்பில கூறுகின்றார்

கொழும்பு, நவ.13



மக்கள் விடுதலை முன்னணியின் அநுரகுமார திஸாநாயக்க காது கேட்கும் திறன் குறைந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

எவன்கார்ட் குறித்த விவாதத்துக்கு வருமாறு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அனுரகுமார திஸாநாயக்கவுக்கு சவால் விடுத்துள்ளார். அந்தச் சவாலை அனுரகுமார திஸாநாயக்க இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை. காது கேளாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளதன் காரணமாகவா அனுர குமார இந்த சவாலை ஏற்கவில்லை எனக் கேள்வி எழுப்புகிறேன். எமது அணியினர் உண்மையான எதிர்க்கட்சியாகச் செயற்பட்டு வருவதால், எதிர்க்கட்சித் தலைவராக தினேஷ் குணவர்தனவையும் பிரதான அமைப்பாளராக டளஸ் அழகபெருமவையும் ஒருங்கிணைப்பாளராக பிரசன்ன ரணதுங்கவையும் நியமித்துள்ளோம். – என்றார். (ற)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், இலாபம் சுமாராக இருக்கும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிக்கல் தீரும். ஆடம்பரப் பொருள் வாங்குவீர்கள்.

**இடபம்:** திட்டமிட்ட பணி நிறைவேறி, நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரம், முன்னேற்றம் அடையும். மேலதிக வருமானம் கிடைக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருளை வாங்குவீர்கள்.

**மிதுனம்:** சந்தோசநிகழ்வைநண்பரிடம்சொல்லிமகிழ் வீர்கள். பேச்சு, செயல்களில், உற்சாகம் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சிப் பணிகள், எளிதாக நிறைவேறும். புத்திரரின் தேவையை அறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**கடகம்:** சிலர் உங்களிடம் வம்பு பேச வரலாம். கவனம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, அதிக முயற்சி தேவைப்படும். பணியாளர்கள் நிர்வாக உத்தரவைக் கவனமாகப் பின்பற்றினால், பிரச்சினை வராமல் தவிர்க்கலாம்.

**சிங்கம்:** செயல்களில் தடுமாற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், இலாபம் சுமாராக இருக்கும். சிறிதளவு கடன் பெற நேரிடலாம். இல்லறத்துணை உதவிகரமாக நடந்து கொள்வார்.

**கன்னி:** அனுபவ அறிவு, நன்மைகளைப் பெற்றுத் தரும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சியான நிலையே தொடரும். கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாகும். மங்கல நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**துலாம்:** மாறுபட்ட கருத்து உள்ளவர்களிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் கிடைக்கக் கடுமையாகப் போராட வேண்டி வரும். புதிய முயற்சிகள் காரணமாக செலவு அதிகரிக்கும். புத்திரர்களின் செயல் நல்லவிதமாக அமைந்து மனதுக்கு அமைதி தரும்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு இடையூறுகளைச் சரி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். கடன் கொடுத்த பணம் திரும்பி வரும்.

**தனுசு:** அறிமுகம் இல்லாதவர்களிடம் பேச வேண்டாம். திட்டமிட்ட பணிகளில் கவனம் கொள்வது நல்லது. தொழில், வியாபார நடைமுறை, மந்தகதியில் இயங்கும். பண வரவை விட செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** நண்பர்கள், உறவினர்கள் ஊக்கம் தருவர். தொழில், வியாபாரம் செழிக்கத் தேவையான பணியை மேற்கொள்வீர்கள். மீதிப் பணம் கிடைக்கும். பெண்கள், குழந்தைகளின் நலன் சிறக்க, புதிய திட்டம் தீட்டுவர்.


**கும்பம்:** மதிநுட்பத்துடன் செயற்படுவீர்கள். சிறிய முயற்சியும் அதிக நன்மையைத்தரும். தொழில், வியாபாரத்தில், கூடுதல் மூலதனம் செய்ய தகுந்த பணவசதி கிடைக்கும். வெளியூரிலிருந்து சுபச் செய்தி வந்து சேரும்.


**மீனம்:** அவசரப்பணிக்காக, வெளியூர் செல்ல வேண்டி வரலாம். குடும்ப உறுப்பினர்களின் தேவை, ஓரளவு பூர்த்தியாகும். தொழில், வியாபாரத்தில், இடையூறு வரக்கூடும். கவனமாய் இருக்கவும். பண வரவு சுமாரான அளவில் இருக்கும்.



# அடுத்த வருட பொங்கலில் ‘உள்குத்து’

‘திருடன் பொலிஸ்’ திரைப்படம் மூலம் இரசிகர்களைக் கவர்ந்த வெற்றிக் கூட்டணி தற்போது மீண்டும் இணைந்திருக்கும் திரைப்படம்; ‘உள்குத்து’. அட்டக்கத்தி தினேஷ் நாயகனாக நடிக்கும் இந்தப் படத்தில் இவருக்கு இணையாக நந்திதா நடித்துள்ளார். இவர்களுடன் பால சரவணன், ஜான் விஜய், சாயா சிங், ஸ்ரீமன், ‘பாண்டிய நாடு’ சரத், திலிப் சுப்புராயன், மற்றும் சமையல் கலை தாமோதரன் என்று பலரும் நடித்துள்ளனர். விறுவிறுப்பாக நடந்து வந்த இந்தப் படத்தின் படப்பிடிப்பு அண்மையில் முடிந்துள்ளது. எனவே தற்போது இறுதிக் கட்டப் பணிகளில் படக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். கெனன்யா பிலிம்ஸ் சார்பாக ஜே.செல்வகுமார் தயாரித்துள்ள இந்தப் படத்தைக் கார்த்திக் ராஜு இயக்கியுள்ளார். திரைப்படம் குறித்து இயக்குநர், ‘உள்குத்து’ கண்களை மட்டுமல்ல, கருத்தையும் கவரும் வண்ணம் படமாக உருவாகியுள்ளது. கடலின் வண்ணமும், கடல் பாசியின் வண்ணமும் படத்தின் வண்ணத்தையும், கடலை சார்ந்த மனிதர்களின் எண்ணத்தையும் பிரதிபலிக்கும் படமாக இருக்கும். எனது முதல் படமான ‘திருடன் பொலிஸ்’ ஏற்படுத்தி உள்ள அபிப்பிராயத்தை இந்தப் படமும் காப்பாற்றும் என்று குறிப்பிட்டுள்ளார். ‘உள்குத்து’ படத்தின் அறிமுகக் காட்சி ’ஒரு நாள் கூத்து’ திரைப்படம் வெளியாகவுள்ள நாளிலும் இசையை மார்கழி மாதம் வெளியிடவுள்ளதாகவும். படம் அடுத்த வருடம் பொங்கல் அன்று திரைக்கு வரும் என்றும் தகவல்கள் கசிந்துள்ளன.





பேஸ் புக்கில் பிடித்தவை...






# நீங்கள் முரண்பாடாகப் பேசுபவரா?

சாதாரணமாகப் பேசும் போது ஒவ்வொரு கருத்துக்கும் நகைச்சுவை உணர்வுடன் கலகலப்பாகப் பதில் தருபவர்களை எரிச்சலுடன் பார்க்கும் குணம் எம்மில் பலருக்கும் உண்டு. இவர்கள் விதண்டாவாதமாக முரண்பாடு கொண்ட கருத்துக்களுடனேயே எப்போதும் பேசுபவர்கள். இதனாலேயே ஆணவம் மிக்கவர்களாக சக நண்பர்களால் பார்க்கப்படுபவர்களாகவும் பணி புரியும் இடத்தில் கெட்ட பெயரை சம்பாதிப்பவர்களாகவும் இந்தக் குணம் இவர்களை மாற்றி விடுகின்றது. எனினும் இதுபோன்ற குணமுடையவர்கள் பல நேரங்களில், அடுத்தவர்களுக்கு எரிச்சலூட்டும் விதமாக நடந்து கொண்டாலும், படைப்பாற்றல் கொண்டவர்களாக இருப்பதாக அமெரிக்காவின் ‘ஹார்வர்ட் பிசினஸ் ஸ்கூல்’ நடத்திய அண்மைய ஆய்வில் தெரியவந்துள்ளது. அலுவலகத்தில் பணிபுரியும் போது இந்தக் குணத்துடன் செயற்படுவோர் மட்டுமல்லாது, சாதாரணமான பாணியில் பேசுவோர் மற்றும் இந்த இரண்டுக்கும் இடைநிலையில் பேசுவோரிடையேயும் ஆய்வு நடத்தப்பட்டது. இதில் கேலியும், கிண்டலுமாக பேசுவோருக்கும், அதைச் சரியான முறையில் புரிந்து கொள்வோருக்கும் அறிவாற்றல் செயற்பாடுகள் சிறப்பாக இருப்பது கண்டறியப்பட்டது. இந்த வகையான பதில்கள் ஒரு தகவலை முரண்பாடான முறையில் ஏள்னம் செய்யவோ, அவமதிப்பான கருத்தாகவோ தெரிவிப்பதாகும். சுமாராக இதை வஞ்சப்புகழ்ச்சி எனக் கூறலாம். ஏனெனில், இந்த விதத்தில் பேசுபவர் பாராட்டுகின்றாரா, இல்லை திட்டுகின்றாரா எனப் பலரும் எளிதில் உணர்வதில்லை. இதுபோல உள்ளர்த்தம் வேறாகவும், வெளிப்படையாக வேறுவிதமாகவும் பேசுபவர்களுக்கு இந்தக் குணமே படைப்பாற்றலைத் தூண்டுவதாக இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

# பழமரக் கன்றுகள் இலவச விநியோகம்

தென்மராட்சி 'அக்கினிச் சிறகுகள் ' அமைப்பினர் மரம் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கடந்த 10 ஆம் திகதி பொது மக்களுக்கு பழ மரக் கன்றுகளை இலவச மாக வழங்கினர்.

கல்விச் சேவைகளை குடாநாட்டில் வழங்கிவந்த இந்த அமைப்பினர் தீபாவளி தினத்தன்று பழமரக் கன்றுகளை சாவகச்சேரி இந்துக் கல்லூரி வாசலில் வைத்து ஏ 9 வீதியில் பயணித்தோருக்கு தலா ஒரு கன்று வீதம் வழங்கினர். மருத்துவர் ச.அம்பிகைபாகன் அமைப்பின் திட்டத்தை ஆரம் பித்து வைத்தார். மாதுளை, எலுமிச்சை, பலா, கொய்யா, நெல்லி, கமுகு உட்பட 200க்கு மேற் பட்ட பழ மரக்கன் றுகள் இவ்விதம் வழங்கப்பட்டன. மாகாண விவசாய அமைச்சால் 5 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வரும் இந்த வேளையில் இந்த அமைப்பின் முயற்சியைபொது மக்கள் பாராட்டினர். (ற-9)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,நவம்.13

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பருத்தித்துறை கலாசார மத்திய நிலையத்தின் பயிற்சி நெறிகளுக்கு நடப் பாண்டுக்கான வளவாளர்களைப் புதிதாக இணைத்துக் கொள்வதற்கான விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகப் பருத்தித் துறை பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன் தெரிவித்துள்ளார். இதற்கமைவாக இசை, நடனம்,சித்திரம்,கிராமியக் கலை சார் வகுப்புக்களையும் மற்றும் ஆங்கிலம், சிங்களம் போன்ற மொழிசார் வகுப் புக்களையும் நடத்துவதற்கு, தகைமை யைக் கொண்ட விண்ணப் பதாரிகள் தமது சுயவிவரம் மற்றும் துறைசார் தகைமை களைஉள்ளடக்கியதானவிண்ணப்பத்தை எதிர்வரும் 27 ஆம் திகதி முன்பதாக, நிலை யப் பொறுப்பதிகாரி,கலாசார மத்திய நிலையம்,சி.க.கூ சங்கக் கட்டடம், கதிர வேற்பிள்ளை வீதி, தும்பசிட்டி, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவித்துள்ளார். இந்த மத்திய நிலையம் கலாசார அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் அகில இலங்கை ரீதி யாக கலை சார்ந்த போட் டிகளை நடத்தி வருவதும், பிரதேச ரீதியாக கலைச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு கலாசார மத்திய நிலையத்தின் மூலமாக கலை சார் வகுப் புக்களையும் மொழி சார் வகுப்புக்களையும் நடத்தி வருகின்ற மையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி2)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
சீதேவி கந்தன் (கார்த்தி)
(கைதடிச் சந்தி, கைதடி)

செந்தண்மை பூண்ட
அன்னையே!
சீதேவி பெயர் கொண்ட சீமாட்டி
சீரோங்கி வாழ்ந்தாய்
கந்தன் மனையாளே
செருக்கறியா சீமாட்டி நீ அம்மா..
ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 1933.06.20
இறப்பு 2015.10.14

சங்கரன் மீனாட்சி
குடும்பம்
நவபுரம், கைதடி

(66054) (12.15)

## அஸ்தி அடக்க வழிபாடு



அமரர் தம்பிராஜா
கிருபானந்தராஜா

எமக்காக மண்ணில் 18.02.1949
இறைவனிடம் 07.11.2015

இடம்:
புனித சிற்பாசாரி ஆலயம்,
நவஜீவனம், பரந்தன்.

காலம்:
14.11.2015
(சனிக்கிழமை)

நேரம் :-
பி.ப 2.00 மணி

நடைபெறும் வழிபாட்டில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நவஜீவன பழைய மாணவர் செயற்பாட்டுக் குழு
இணைப்பாளர்- அருட் தந்தை நா.பிரபாகர்

(63569)(11.15)

## வலி கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.
## சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான
## கேள்வி அறிவித்தல் -2016

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 2016 ஆம் ஆண்டிற்கு (01.01.2016 - 31.12.2016) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 13.11.2015– 26.11.2015.
கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 27.11.2015 ந.ப. 12.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 27.11.2015 பி.ப. 02.00 மணி.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை **"செயலாளர், வலி கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கும், எதிர்வரும் **27.11.2015ஆம்** திகதி ந.ப **12.00** மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 01 | அச்சுவேலி பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டித்தரிப்பிடம்.) துவிச்சக்கர வண்டி 5/=மோட்டார்சைக்கிள் **10/=** மின்சாரக்கட்டணம் ஒப்பந்தக்காரரால் செலுத்தப்படல் வேண்டும்) | 2000.00 | 25,000.00 | 5,671,232.60 | |
| 02 | அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 10000.00 | 627,000.00 | 500.00 |
| 03 | அச்சுவேலி கோழியிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 222,200.00 | 500.00 |
| 04 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 46,500.00 | 500.00 |
| 05 | வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 500.00 | 5000.00 | 137,100.00 | |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | | | |
| 01 | புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 10000.00 | 660,220.00 | 500.00 |
| 02 | புத்தூ ர் பொதுச் சந்தை | 500.00 | 5000.00 | 175,550.00 | |
| 03 | புத்தூ ர் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 14,850.00 | 500.00 |
| | **நீர்வேலி உப அலுவலகம்** | | | | |
| 01 | நீர்வேலி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 70,400.00 | 500.00 |
| 02 | நீர்வேலி ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | | |
| 01 | கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 10000.00 | 728,900.00 | 500.00 |
| 02 | கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 13,200.00 | 500.00 |
| 03 | கோப்பாய் கோழியிறைச்சி கடை | 500.00 | 2000.00 | 67,650.00 | 500.00 |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | | |
| 01 | உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 10000.00 | 463,100.00 | 500.00 |
| 02 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 10000.00 | 407,000.00 | 500.00 |
| 03 | உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 5000.00 | 215,600.00 | |
| 04 | ஊரெழு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 97,100.00 | 500.00 |
| 05 | ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 1000.00 | 30,250.00 | 500.00 |
| 06 | உரும்பிராய் கோழியிறைச்சி கடை | 500.00 | 10000.00 | 364,100.00 | 500.00 |

01. சந்தையிலிருந்து 01 கி.மீற்றர் சுற்றாடலில் மீன்.மரக்கறி விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.
02. கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையைக் கொண்டு வருவதுடன் அதன் நிழற்படப்பிரதியையும் பிரதேச கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
03. கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித்தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு, காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்படவேண்டும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
05. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
06. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம் .
07. விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மாதாந்த வாடகை மீள்மதிப்பீடு செய்யப்படும் போது மதிப்பீடு செய்யப்படும் தொகை செலுத்தப்படல் வேண்டும்
08. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரப்படும் உற்பத்திப் பொருட்களுக்கு 4% வரி அறவிடப்படல் வேண்டும்.
09. உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை இல 03/2015 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றி ஒப்பந்தம் செய்யப்படல் வேண்டும். இது தொடர்பான விபரங்களை கேள்விப்பத்திரங்களை பெறும் போது தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
10. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.நாகராசா குமணன்
செயலாளர்
வலி கிழக்கு பிரதேசசபை.
புத்தூர்.

(C/20034)(10.15)


வீடு தேவை

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றுக்கு அலுவலகப் பாவனைக்குரிய வீடு உடனடியாகத் தேவை. (யாழ்.மாநகர சபைக்கு 7Km இற்குள் இருக்க வேண்டும்)

தொடர்பு:- 076 618 5590

(66051)(11,15)

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் பிளாட்டினம் 10.30 / 2.30 / 6.30
சில்வர் 10.15 / 2.15 / 6.15
பிரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
விசாரணை 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

ஓ விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பரமநாதன்

ஜெயக்குமார் (ஜெயா)

திதி:துதியை (13.11.2015)



எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே
எங்கள் அன்பின் ஜெயா மாமாவே!
தங்க மாமாவே தாமரை நெஞ்சமே
தாங்க முடியாதுன் பிரிவு மாமாவே!
தீபாவளித் திருநாளில் எங்களைத்
திகைக்க வைத்த மாமாவே!
உங்களைப் பிரிந்து
எட்டாண்டுகள் கழிந்தாலும்
உள்ளத்தை விட்டு உங்கள் நினைவு
உறங்கவில்லை மாமாவே...

என்றென்றும் உங்கள் நினைவுடன்
வாழும்...

உங்கள் மருமகன்
சி.சிபிராஜ்
தாவளை, இயற்றாலை, கொடிகாமம்.

அன்னையின் மடியில் 20.07.1982
ஆண்டவன் பிடியில் 11.11.2007

(65889)(11)



## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
12.07.1937

மறைவு
13.11.2010

திருமதி மனோன்மணி பழனிநாதன்

துடித்தது இதயம் உந்தன் நினைவால்
ஐந்து வருடங்கள் உருண்டோடி விட்டதம்மா
எத்தனை வருடங்கள் சென்றாலும்
ஆறாதம்மா உங்கள் நினைவுகள்

36/2, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (65894) (14,15)

என்றும் நினைவில்
கணவர்.



## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

சொக்கலிங்கம்
செல்வவதி (மணி)

(நாகதாழ்வு-
திருக்கேதீஸ்வரம்-
மன்னார்)



ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
அம்மா அம்மா தானே......
இந்த உறவினை
மிஞ்ச ஏது உறவு?
ஐந்து ஆண்டுகள் அல்ல
ஐந்தாயிரம் ஆண்டானாலும்
நான் மறவேன் அம்மாவை...

மகன்- சுதர்சன்
(சிவகாந்தன்- மன்னார்)
077 351 6339

(63571) (12.15)



## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

சின்னத்தம்பி தேவராசா

திதி:-துதியை



ஆண்டுகள் ஐந்தானதையா
ஆறவில்லை எம் துயரம்
மீண்டும் வந்துதிக்க
வேண்டுகின்றோம் ஆண்டவனை
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !!

மண்ணில்
08.10.1942

விண்ணில்
08.11.2010

அன்புக்காய் ஏங்கும்
குடும்பத்தினர்.

நாச்சிமார் கோயிலடி
கட்டுவன் மேற்கு ,தெல்லிப்பழை

(65899)(12.15.)


## சேவை நலன் பாராட்டு விழா

கொழும்பு,நவ.13

முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி மு. ஞானகுணாளனின் சேவை நலன் பாராட்டு விழா, நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப் பாளர் காரியாலயத்தில் நடைபெற்றது. கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப் பாளர் வைத்திய கலாநிதி முருகானந்தம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் கருணாகரன் மற்றும் உதவிச் செயலாளர் ஹசைன்டீன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். நிகழ்வில் 33 வருட காலங்கள் சுகாதாரப் பகுதியில் சேவையாற்றிய, அவரது சிறப் பான செயற்பாடுகளைப் பாராட்டி அனை வரும் உரையாற்றினர். இறுதியில் அவ ருக்கு வாழ்த்து மடலும் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டன. (ஜ

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.13

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி யின் பரிசளிப்பு விழா நாளை மறு தினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலையின் அதிபர் எஸ். வேல ழகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். சிவலிங்கம், கௌரவ விருந்தி னராக கரந்தன் இராமப்பிள்ளை வித்தியாலயத்தின் அதிபர் எஸ். வாகீ சன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ஜ-422)


## நான்காம் ஆண்டு நினைவலைகள்





கருங்காலி , காரைநகரைப் பிறப்பிடமாகவும்,
அராலி வடக்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் சரோஜினிதேவி சிவஸ்கந்தா

(ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர் -
ஸ்ரீலங்கா தெலைத்தொடர்புத் திணைக்களம்)

மலர்வு
14.09.1941

உதிர்வு
28.10.2011

திதி: பூர்வபக்க துதியை

எங்கள் வான் நிலவு நகர்ந்து நான்காண்டுமானதுவே
நானிலத்தில் நாம் வாழ வானிலமேகி மேநிலாவாகிவிட்டீர் கூனிடாமல் வாழ்ந்திடுவீர் என்று சொல்லி
கூற்றுவனிடம் சென்றுவிட்டீர் மாற்று மருத்துவம் காணா இவ்வுலகில்
தோற்றுவிட்டோம் காலனிடம் பற்றுடன் வாழ்ந்த எம்தாயை
சுற்றியே நின்று சுடலையில் பற்றியே வைக்கவிட்ட பாவிக் கடவுளிடம்
கற்றுமே விட்டோம் கடைசியில் வெற்று வாழ்க்கை இதுவென்று
வேற்று இடம் சென்று வீட்டுக்கு வரும் வரையும் கேற்றடியில் காத்து நின்று
ஊட்டிவிட்ட சோற்றுப்பருகையது சொர்க்கத்திலும் கிடைத்திடுமோ?
உற்றார், சுற்றவர், பெற்றவர் நலம் வாழ வற்றாத அன்பு தந்த நற்தாய்க்கு
புற்றாய் வந்தநோயை விரட்டிவிட எம்மால் முடியவில்லையே!
போற்றி போற்றி என்று சொன்ன கடவுளும் சுற்றிலே இருந்துவிட்டான் சுமக்கடன் முடியுமட்டும்
ஏற்றங்கள் நாம் காண ஏறாத கோயிலுண்டோ மாற்றங்கள் கண்டு மறந்து போக
மாற்றாந்தாயா நீரெமக்கு ஆற்றமுடியலையே அம்மா ஆறாத துயரத்தை தே ற்றிவிட
வந்திடீரோ எமைப் பெற்ற தாயே!

தகவல்: கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.




சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரரின் மறைவையொட்டி வவுனியா நகர் பகுதியிலும் வர்த்தக நிலையங்களிலும் மணிக்கூட்டுக் கோபுரம், பொலிஸ் நிலையம் உட்பட அனைத்து இடங்களிலும் மறைந்த தேரருக்கு அஞ்சலி செலுத்தும் மஞ்சள் நிறக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. (ஐ)

## 93 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் நடத்தப்படும் 93 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களின் பிள்ளைகளைக் கௌரவிக்கும் நிகழ்வும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான திருமதி வ.மதுமதி, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசு, யாழ்.மக்கள் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் க.சுஜீந்திரன், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை அதிபர் சி.சிவறதீஸ், அல்வாய் யாழ். சிறிலங்கா வித்தியாசாலை அதிபர் வீ.இந்திரலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கு பரிசில் வழங்கலும், வயது முதிர்ந்த கூட்டுறவாளர்கள் கௌரவிப்பும், இந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களின் பிள்ளைகள் கௌரவிப்பும் நடைபெறவுள்ளதாக சமாசம் அறிவித்துள்ளது. (ஐ-ரி6)

## பொலிஸாரின் சமிக்ஞையை மீறிய சாரதிக்கு 21 ஆயிரம் ரூபா அபராதம்

சாவகச்சேரி,நவ.13

பொலிஸாரின் சமிக்ஞையை மீறி வாகனத்தை நிறுத்தாமல் வேகமாகச் சென்ற வாகனச் சாரதிக்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் 21 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸார் வீதிப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில், வேகமாக வந்த வாகனமொன்றை நிறுத்துமாறு சமிக்ஞை செய்துள்ளனர். சாரதி, வாகனத்தை நிறுத்துவது போல பாவனை செய்து விட்டு நிறுத்தாமல் வேகமாகச் சென்றதால் பொலிஸார் அவரைத் துரத்திப் பிடித்தனர். வாகனத்தைச் சோதனையிட்ட போது, குறித்த சாரதி ஆவணங்களின்றி வாகனம் செலுத்தியமை கண்டுபிடிக்கப்பட்டது சாரதிக்கு எதிராகப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, அவரைக் கடுமையாக எச்சரிக்கை செய்து, 21 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். இதேவேளை- மதுபோதையில் சாரத்திய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதியொருவருக்கு 10 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## கர்ப்பிணித் தாய்மாருக்கான ஜுலை மாத உலர் உணவுப் பொருள்கள் விநியோகம்

சாவகச்சேரி,நவ.13

தென்மராட்சிப் பிரதேச கர்ப்பிணித் தாய்மாருக்கான ஜுலை மாத உலர் உணவுப் பொருள்கள் அந்தந்தப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நேற்று முன்தினம் தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பொருள்களை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## காவடியும் ஆசீர்வாத நிகழ்வும்

யாழ்ப்பாணம்,நவ.13

முன்பள்ளி சிறுவர்களின் நலன் வேண்டி வீணா கான குருபீடம் நடத்தும் காவடியும் ஆசீர்வாத நிகழ்வும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சித்தங்கேணி சிவன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. சிவஸ்ரீ. சபா. வாசுதேவக்குருக்கள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் தூதுவர் ஆறுமுகம் நடராஜன், கௌரவ விருந்தினராக பிரதித் துணைத் தூதுவர் சு.தட்சணாமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ)

## வழித்தட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றிய சாரதிக்கு அபராதம்

சாவகச்சேரி,நவ.13

வழித்தட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றி வந்த சாரதிக்கும், மணல் ஏற்றுவதற்கான அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த டிப்பர் சாரதிக்கும் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது. வீதிப் பரிசோதனையில் அகப்பட்ட வாகனங்களின் சாரதிகளுக்கு எதிராக கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளைத் தனித்தனியாக விசாரித்த நீதிவான் வழித்தட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றி வந்த வாகனச் சாரதிக்கு 20 ஆயிரம் ரூபாவும், அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றி வந்த டிப்பர் சாரதிக்கு 25 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்தார். (ஐ-9)

## கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் தொழிற்சங்கம் ஒன்றுகூடல் நிகழ்வு

அம்பாறை, நவ.13

தொழில் ரீதியான தகுதி வாய்ந்த இலங்கை உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளின் தொழிற்சங்கம் ஒன்றுகூடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இலங்கை உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் தொழிற் சங்கப் பொதுச் செயலாளர் எம்.ஹுசைன் முபாறக் தலைமையில், மட்டக்களப்பு ஆரையம்பதி கலாசார மண்டபத்தில் காலை 9 மணிக்கு இந்த ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா பட்டதாரி மாணவர்களது பிரச்சினை தொடர்பிலான முக்கிய கால கட் டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த முக்கிய ஒன்றுகூடல் நிகழ்வில் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் பெருமளவில் கலந்து கொள்ளவிருப்பதுடன், மேற்படி உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் தொழிற்சங்க உறுப்பினர்கள் சகலரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பொதுச்செயலாளர் ஹுசைன் முபாறக் கோரியுள்ளார். இதேவேளை- இந்தப் பட்டதாரிகள் தொழிற் சங்கத்தில் புதிய உறுப்பினர்களாக இணைந்து கொள்ள விரும்புவோரும் இந்த ஒன்று கூடலில் கலந்து அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளை சமகாலத்தில் அரச நியமனங்களுக்குள் உள்வாங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், காலத்துக்குக் காலம் உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இவற்றுக்கான தீர்வு ஆலோசனைகள், உயர் தேசியக் கணக்கியல் டிப் ளோமா மாணவர்கள் மீதான தாக்குதல், முதலான முக்கிய விடயங்கள் தொடர்பாக இந்த ஒன்று கூடலில் ஆராயப்பட்டு முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன என்றும் தொழிற்சங்கத்தின் கடந்த காலச் செயற்பாடுகள், எதிர்காலத் திட்டமிடல்கள் தொடர்பிலும் கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்கப்படவுள்ளன என்றும் பொதுச் செயலாளர் ஹுசைன் முபாறக் தெரிவித்துள்ளார். (ற-30)

**அன்பொளி கல்வியகம்**
யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
*தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2015*
*சித்தியடைந்த மாணவர்களுக்கான*
**பரிசளிப்பு நிகழ்வு**
எமது கல்வியகத்தில் கற்றுச்சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 14.11.2015 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நாச்சிமார் கோவிலடி (ராஜா கிறீம் ஹவுஸ்) சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இயக்குநர்.

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.**
**உயர் பட்டப்படிப்புகள் பீடம்**
**புதிய அனுமதிகள்**

1. கல்வியியல் முதுமாணி – 2016/17 (அணி XII) யாழ்ப்பாணம்.
2. தமிழில் முதுகலைமாணி – 2016/17 (அணி VI)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**கல்வியியல் முதுமாணி (Master of Education)**

**அனுமதிக்குரிய தகைமைகள்**
- "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும்"

அத்துடன்
- ஒரு பாடசாலையில் அல்லது யாதேனும் கல்வி நிறுவனத்தில் குறைந்த பட்சம் **ஐந்து** ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் அல்லது மேற்படி கற்கைநெறிக்குப் பொருத்தமான கல்விசார் பணிகளில் குறைந்த பட்சம் **ஐந்து** ஆண்டுகள் அனுபவம்.

**தெரிவு முறைமை**
- எழுத்துத் தேர்வும், நேர்முகத் தேர்வும் (எழுத்துத் தேர்வு கல்விசார் பொதுத் தகைமையை பரீட்சிப்பதாக அமையும்.)

**கற்கைக் காலம்:** ஒரு வருடம்
**மொழி மூலம் :** தமிழ்
**கற்கைநெறிக் கட்டணம் : 100,000/-**
**விண்ணப்பப்படிவக் கட்டணம்: 1,000/-**

**தமிழில் முதுகலைமாணி (Master of Arts in Tamil)**

**அனுமதிக்குரிய தகைமைகள்**
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏதாவது ஒரு கற்கை நெறியில் பட்டம்

**குறிப்பு:-** பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக் கூடிய வேறு தகைமைகளும் அனுபவமும் பரிசீலிக்கப்படலாம்

**தெரிவு முறைமை**
- நேர்முகத்தேர்வு

**கற்கை நெறிக் காலம்:** ஒரு வருடம்
**மொழி மூலம்:** தமிழ்
**கற்கை நெறிக்கட்டணம்: 85,000/-**
**விண்ணப்பப் படிவக் கட்டணம்: 1,000/**

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை:**
1) மக்கள் வங்கியின் ஏதாவதொரு கிளையில் 162-1-001-8-0000902 எனும் கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பத்திற்கான ரூபா **1000/-** கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டை உயர் பட்டப் படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
2) தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் எனும் பெயருக்கு விண்ணப்ப படிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் **15/-** பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுக வரியிடப்பட்ட 23 x 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து **உதவிப்பதிவாளர் உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
3) விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்கள் www.jfn.ac.lk/ grad எனும் பல்கலைக்கழக வலைதளவசதியூடாகவும் (website) பெற்றுக் கொள்ளலாம். வலைத்தளமூலமாக தர விறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா **1000/-** பெறுமதியான காசுக் கட்டளையை அல்லது மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பித்தல்**
விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **கற்கை நெறியின் பெயரினைக் குறிப்பிட்டு** பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் **14.12.2015** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்**
09.11.2015 (C/20032)(10.15)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




தேவவினோதன் சஜீவனா (158 புள்ளிகள்)

யா/ மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலயம்
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2015
100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்

அ.அகஸ்ரின் - 123
இ.ஜினா - 114
மு.கிருஷாந்தினி - 105
சி.அஜிந்தா - 103

இவர்களையும் இவர்களைக் கற்பித்த ஆசிரியை திருமதி க.சந்திரநாதன் அவர்களையும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*Congratulation*

ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/மீசாலை விக்னேஸ்வர ம.வி. (ச/ 20030)(11.15)

# ALUMNI ASSOCIATION

## JAFFNA ADVANCED TECHNOLOGICAL INSTITUTE

SLIATE

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**இன்று (13.11.2015) வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிறுவன 12 ஆவது பட்டமளிப்பு வைபவத்தில் (HNDA, HNDM, HNDIT, HNDE,HNDTHM ) பட்டம் பெறும் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் பட்டம் பெறும் ஏனைய மாணவர்களையும் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்படைய வாழ்த்துகின்றோம்**

# ALUMNI ASSOCIATION

JAFFNA ADVANCED TECHNOLOGICAL INSTITUTE,
No.665/2, BEACH ROAD, JAFFNA.
Tele: 021 3206542
E-mail: jatialumni@gmail,com

## பேஸ்புக்குக்கு சிம்ம சொற்பனமாக மாறும் ஸ்நாப்சாற் (Snapchat)



ஸ்நாப்சாற் (Snapchat) எனும் சற்றிங் சேவையை வழங்கிவரும் நிறுவனம் வெளியிட்டுள்ள தகவல் எதிர்வரும் காலங்களில் பேஸ்புக் ஆட்டம் காணுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

அதாவது தமது சேவையின் ஊடாக நாள் ஒன்றுக்கு 6 பில்லியன் வீடியோக்கள் பார்வையிடப்படுவதாக அது தெரிவித்துள்ளது.

இது மே மாத பகுதியில் காணப்பட்டதை விடவும் 2 மில்லியன்கள் அதிகமாகும். இதேவேளை பேஸ்புக் நிறுவனம் அண்மையில் வெளியிட்ட தகவலின்படி தமது சேவையின் ஊடாக நாளாந்தம் 8 பில்லியன் வீடியோக்கள் பார்வையிடப்படுவதாக தெரிவித்துள்ளது.

இதன்படி பார்க்கையில் Snapchat ஆனது விரைவில் பேஸ்புக்கை முந்தி விடும்போல் உள்ளது.

## அலைபேசி வடிவமைப்பில் புரட்சியை ஏற்படுத்த வரும் புறொசெஸ்ஸர் (Processor)

தொடுபேசிகள் மற்றும் டேப்லட்கள் என அதிகளவான மொபைல் சாதனங்களில் குவல்கொம் புறொசெஸ்ஸர் (Qualcomm Processor) களே பயன்ப்டுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் Qualcomm Snapdragon 820 தொடர் Processor இனை அறிமுகம் செய்வது தொடர்பான தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. அடுத்த வருடம் அறிமுகம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படும் இந்த Processor ஆனது சம்சூங் கலெக்சி S-7 மற்றும் எச்ரீசீஎம் 10 ஆகிய தொடுபேசிகளில் பயன்படுத்தப்படலாம் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. மேலும் இந்தப் புதிய புறொசெஸ்ஸர் தொடர்பான தகவல் ஒன்றை அதனை உலகம் முழுவதும் சந்தைப்படுத்தலுக்கு பொறுப்பானவரான ரிம் மக்டொனொவ் என்பவர் தனது ருவிற்றர் தளத்தில் ருவிற் செய்துள்ளார்.

# மர நடுகை மாதம்

## நல்லதைச் செய்
## அதை இன்றே செய்

*"கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்."*

*-இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)*

ஒரு காலத்தில் சிங்களவர்கள் எல்லாம் முட்டாள்கள் என்றும் தமிழர்கள் புத்திசாலிகள், மிக அறிவாளிகள் என்றும் ஓர் அபிப்பிராயம் இருந்தது. அதைவிடத் தமிழர்களை ஏமாற்றுவதில் சிங்கள அரசு மிகக் கெட்டிக்காரர்கள். தமிழர்கள் தங்களை நம்புவது இல்லை. அடுத்தவனையோ இல்லை, அயல் நாடுகளையே நம்பி ஏமாந்து போவதுண்டு. இவை இன்று நேற்று அல்ல. தலைமுறை தலைமுறையாக நடைபெறும் ஒரு சாபக்கேடு என்று சொல்லலாம். அரசு மட்டுமல்ல சகல கொழும்பு நிறுவனங்கள் கூட தமிழ் மக்களை ஏமாற்றிய வண்ணமே உள்ளன. இவை போதாதென்று சாதாரண சிங்கள மகன் கூட ஏமாற்றுகின்றான். சிங்கள ஊரில் இருந்து சின்ன வாகனத்தில் வந்து மரங்களையோ அல்லது வெளியாக மக்கள் கூடுதலாக நடமாடும் இடத்தில் பூச்செடிகளைப் பரப்பி வைத்தோ விற்பனை செய்கின்றான். அவை அவன் கொடுக்கின்ற உரப்பையிலோ அல்லது பொலித்தீன் பையில் இருக்கும் வரையுமே ஒன்று, மூன்று மாதங்கள் உயிருடன் வாழும். பின்னர் அவை பட்டுப் போய்விடும். இதை உணராத எமது மக்களோ அழகான செடி நல்ல ரோஜாப்பூ என அவன் சொன்ன விலைக்கு வாங்கி போய் வாடவைப்பார்கள். ஒன்றிரண்டு மாதங்கள் போனபின் அவனைக் கேட்க முடியுமா? அல்லது இங்கே அவன்தான் இருப்பானா? வீட்டிலே இப்படிச் செடிகளைப், பூக்களை வைத்து வீண் செலவு செய்வதை விட்டு பிரயோசனமான கத்தரி, வெண்டி, மிளகாய் செடிகளை வைத்து வளர்க்கலாமே. இதனால் உங்கள் வீட்டுத் தேவையை ஈடு செய்யலாம் அல்லவா?. செலவும் மிச்சம் அல்லவா. இதைவிட அத்தியாவசியத் தேவையானது எலுமிச்சை (தேசிக்காய்) இதனைச் சிங்களப் பிரதேசங்களில் இருந்தே வரவழைக்க வேண்டியுள்ளது. இன்றைய விலை ஒருகாய் 20,30 ரூபா என விற்பனை செய்கின்றார்கள். இதனை ஒவ்வொரு வீட்டிலும் வைத்து வளர்ப்போமானால் இத்தனை விலை கொடுத்து வாங்க வேண்டியிராது. தட்டுப்பாடும் வராது. இதனை ஓரளவு வளர்த்து விட்டாலே போதும். அதன்பின் தானாகவே வளர்ந்து பயன்தரும். இதைப் போல் தென்னை மரங்களை வீட்டில் வைத்து வளர்த்தாலே அதன் விலையும் 40, 50 ரூபா என வராது. எனவே இனியாவது எமது மக்கள் இதை உணர்ந்து சிங்கள வரைப் பணக்காரனாக்க வழி காட்டாது. ஏமாறாது. அவசியத்தேவைப் பயிர்களை வளர்க்க மனதில் திடம் கொள்வோம். வீட்டில் தேவை கருதி ஒரு பயனுள்ள மரத்தை வெட்டினால் வேறு ஒரு மரச்செடியை (பயனுள்ளதை) நடுங்கள். அவை உங்களுக்கு மட்டுமல்ல உங்கள் வருங் காலப் பிள்ளைகளுக்கும் பயன்படுமென்பதை உணருங்கள். முன்னோர்கள் தங்கள் பிள்ளைகளின் நலன்கருதியே பயனுள்ள மரங்களை நட்டு வளர்த் தார்கள். இப்போது சோம்பேறிகளாகப் பிள்ளை களின் நாளைய எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை (எல்லோரும் அல்ல). மரம் நடுவோம் என எமது மாகாண சபையினர் எம்மை ஊக்கம் செய்யும் போது நாமும் அதைப் பயன்படுத்தி பயனுள்ள செடிகளை மரங்களை நடுவோமாக. எமது மக்கள் எதையும் நாமாக உணர்ந்து நல்லது செய்வதில்லையே. யாராவது தூண்டினால் செய்வார்கள். நல்லதை யாரும் சொல்லலாம். செய்ய வைப்பதுதான் கடினம். எல்லாவற்றுக்கும் நிறுவனங்களையும், அரசையும், சபைக ளைக் குறைகூறுவதைக் கைவிட்டு நாங்களும் உற்சாகமாகத் துணிவுடன் செய்து மற்றவர்களையும் ஊக்கம் கொடுத்து ஏமாறாமல் ஏமாற்றாமல் வாழ்வோமாக. எமது மக்களே! கொஞ்சமாவது இது குறித்துச் சிந்தியுங்கள். யாழ்.வீமன்

# இரண்டாம் ஆண்டு நிறைவில் வருத்தபடாத வாலிபர் சங்கம்







யாழ்ப்பாணம்,நவ.13

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவும் வாலிபத் தீபாவளிக் கொண்டாட்டமும் இளவாலை புனிதஹென்றியரசர் கல்லூரியில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. இதில் 'கருவி' மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் 'ஆசையால் அதிகம் அவஸ்தைப் படுவது ஆண்களா பெண்களா?' என்ற தலைப்பில் விசேட பட்டிமன்றமும், இளவாலை திருமறைக் கலாமன்ற மாணவர்கள், இளவாலை இளைஞர் கழக உறுப்பினர்களின் கலைநிகழ்வுகளும் மற்றும் இளவாலை கிராமத்தைச் சேர்ந்த பொது அமைப்புகளின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன.

மேலும் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் இந்த வருடம் சித்தியடைந்த இளவாலை கிராம மாணவர்களுக்குக் கேடயமும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. சங்கத்தின் ஏற்பாட்டில் முறைசாராக் கற்கை பிரிவால் நடத்தபட்ட இலவச தையல் பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அத்துடன் இளவாலைக் கிராமத்தைச் சேர்ந்த தேசிய சாதனையாளர்கள் கௌரவிப்பும் இடம்பெற்றது. இறுதியாக விசேட இசைக்கச்சேரியும் இடம்பெற்றது. (ஐ)

# நுவரெலியா - ஹற்றன் வீதி கீழிறங்கியுள்ளது

## சாரதிகளுக்கு எச்சரிக்கை



கொழும்பு,நவ.13

நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில் நிலம் கீழிறங்கியுள்ளது. நுவரெலியாவுக்கும், நானுஓயாவுக்கும் இடையில், இரண்டு வெவ்வேறு இடங்களில் பாதையின் ஒருபகுதி கீழ் இறங்கியுள்ளது. சுமார் 5 மீற்றர் தூரமான வீதி கீழிறங்கியுள்ளதால் ஒரு வழிப்பாதையில் மட்டுமே வாகனங்கள் பயணிக்கக் கூடியதாகவுள்ளது. கடந்த மூன்று மாதங்களாக இந்தப் பகுதியில் பெய்த கடும் மழையைத் தொடர்ந்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. பள்ளமான பகுதியில் வீதி கீழிறங்கியுள்ளதால் இந்தப் பாதையைப் பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் செயற்படும்படி பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். இந்த வீதியில் மேலும் பல இடங்களிலும் சிறிய மண் சரிவுகள் மற்றும் வெடிப்புகள் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)






கடந்த 30 வருடங்களாக நீரிழ் மூழ்கியிருந்த ஆர்ஜென்ரீனாவின் எபிகியூன் நகரில் தற்பொழுது நீர் வற்றி வருகின்றது. அந்த நகரின் தோற்றம் மிகவும் பழைமையடைந்த நிலைய
சுற்றுலாத்தலமாக இருந்தது. 1985ஆம் ஆண்டு அங்கு இடம்பெற்ற ஒரு தொடர் மழையால் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அதன்போது அந்த நகரம் அருகில் இருந்த வாவியால் மூழ்க
அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். பின்னர் கடந்த 30 வருடமாக எபிகியூன் நகரம் நீரின் அடியிலேயே மூழ்கிக் கிடந்தது. இந்தநிலையில் தற்பொழுது அந்த நகரம் மீண்டு
பார்த்து வருகின்றனர். எனினும் அந்த நகரம் முழுமையாக மாற்றமடைந்தும் சேதமடைந்தும் காணப்படுகின்றது.

## இந்தியா வரவுள்ள இஸ்ரேல் பிரதமர்

ஜெருசலேம், நவ.13

எதிர்வரும் நாள்களில் தான் இந்தியாவுக்கான பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

கடந்த 2003ஆம் ஆண்டு அப்போ



தைய இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். எனவே நெதன்யாகுவின் இந்த பயணமானது 12 வருடங்களின் பின்னர் இஸ்ரேல் பிரதமர் ஒருவர் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் பயணமாக அமையும்.

கடந்த ஒக்ரோபர் மாதம் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி இஸ்ரேலுக்கு உத்தியோகபூர்வப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டன. இதனைத் தொடர்ந்தே தற்பொழுது நெதன்யாகு இந்தியா வரவுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் நியூயோர்க்கில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவும், இந்தியப் பிரதமர் மோடியும் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தனர். (ற)

## இந்திய - நேபாள எல்லையில் ஆர்ப்பாட்டம் வன்முறையானது

### வாகனங்கள் மீது தாக்குதல்

### லொறி தீ வைத்து எரிப்பு

காத்மண்டு, நவ.13

இந்திய நேபாள எல்லையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரும் மாதேசி இன மக்கள் தற்போது வன்முறைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள் அவர்கள் பொருள்களை ஏற்றிச் சென்ற வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தியதோடு, லொறி ஒன்றையும் தீவைத்து கொளுத்தியதால் அங்கு பதற்றம் நிலவுகிறது.

நேபாளத்தில், கடந்த செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட புதிய அரசமைப்பின்படி நேபாளம் 7 மாகாணங்களாக பிரிக்கப்படுகிறது. இதற்கு மாதேசி, தாரு உள்ளிட்ட பழங்குடி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இந்திய நேபாள எல்லைப் பகுதியில் 45 நாள்களுக்கு மேலாக போராட்டம் நடத்தி வருகின்றனர். அதில் இதுவரை சுமார் 40 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன் பொருள்கள் ஏற்றிவரும் லொறிகளை உள்ளே நுழையவிடாதபடி இந்தியா-நேபாளத்துக்கிடையிலான முக்கிய எல்லைப் பகுதியான பிர்குஞ்ச்-ரக்ஸவ்ல் வீதி அருகே முற்றுகையிட்டுள்ளனர். இதனை அவர்கள் பொருளாதார முற்றுகைப் போராட்டமாக மேற்கொண்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

இந்தநிலையில், எல்லைப்பகுதியான பிர்குஞ்சில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மாதேசி சமுதாயத்தினர், திடீரென வாகனங்கள் மீது நேற்றுமுன்தினம் இரவு கல்வீச்சுத் தாக்குதலில் ஈடுபட்டனர். அதில் 3 வாகனங்கள் சேதமடைந்தன. லொறி ஒன்றையும் அவர்கள் தீ வைத்துக் கொளுத்தினர்.

அதேவேளை, இந்தியாவில் இருந்து பொருள்கள் கொண்டு செல்லப்படுவது தடைப்பட்டுள்ளதால் நேபாள மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர் என்றும், அதனால், எல்லைப்பகுதியில் நிலவும் சிக்கல்களை உடனடியாகக் களைய வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளர் பான்-கி மூன் கேட்டுக் கொண்டுள்ளார். (ற)





## 28 மில்லியன் டொலருக்கு விற்பனையான வைரம்

ஜெனிவா, நவ.13

வைரங்களில் மிக அரிதான ஒன்றாகக் கருதப்படும் 16.08 கேரட் மதிப்புள்ள மாசற்ற பிங்க் நிற வைரக்கல் சுவிற்சர்லாந்து நாட்டின் தலைநகரான ஜெனிவாவில் உள்ள கிறிஸ்டீஸ் ஏல நிறுவனத்தால் 28.5 மில்லியன் டொலருக்கு விற்பனை செய்யப்பட் டுள்ளது.

சுற்றி வெள்ளை நிறத்திலான சிறிய வைரக்கற்கள் பொறிக்கப்பட்ட மோதிரத்தின் நடுவே, வெளிர்சிவப்பு நிறத்தில் இருந்த இந்த வைரக்கல், 23 முதல் 28 மில்லியன் டொலர் வரை ஏலம் போகும் என இந்த நிறுவனம் எதிர்பார்த்திருந்தது.

ஏலத்தின்போது கடும்போட்டிக்கு இடையேஹொங்கொங் நகரில் வசிக்கும் பெயர் குறிப்பிட விரும்பாத சீன நாட்டைச் சேர்ந்த ஒருவர், மிகவும் அரிதான இந்த வைர மோதிரத்தை 28.5 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஏலத்தில் வாங்கியுள்ளார். (ற-ரி4)

## இந்துக்களுக்

## இழைத்தால்

### பாகிஸ்தான்

இஸ்லாமாபாத், நவ.13

இந்துக்களுக்கு எதிராக முஸ்லிம்கள் அநீதி இழைத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் எச்சரித்துள்ளார்.

கராச்சியின் கவர்னர் இல்லத்தில் நடைபெற்ற தீபாவளி நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன் போது இந்து மதப் பிரதிநிதிகள் அவரைச் சந்தித்தனர். அப்போது, அவர்களிடம் தனது அரசு சிறுபான்மையினர் உரிமைகளைக் காப்பதில் மிகுந்த உறுதியுடன் இருக்கின்றது என்று நவாஸ் ஷெரீப் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

பாகிஸ்தான் அனைத்து மக்களுக்கு மான நாடு. பாகிஸ்தான் மக்கள் அனைவருக்கும் நான் பிரதமர். எந்த மதத்தைச் சேர்ந்தவர் என்பது ஒரு விடயம் அல்ல. ஓர் இஸ்லாமி-

யர் இ
இழை
லாம்.
ராக ந
பேன்.
குறிப்
ளுக்கு
மியஅ
தெற்கு
சிறுமி


## 200 சிறாரைச் சுட்டுக் கொன்று ஐ

தமஸ்கு, நவ.13

200 சிறுவர்களை ஐ.எஸ் தீவிரவாதிகள் சுட்டுக் கொலை செய்யும் காட்சி இணையத் தளங்களில் வெளியாகி மக்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.எஸ் தீவிரவாதிகள் அப்பாவி மக்களைக் கொலை செய்வதும் அதனை வீடியோ எடுத்து இணையத் தளங்களில் வெளியிடுவதையும் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

தற்போது ஏமனைச் சேர்ந்த ஆர்வலர் ஒருவர் வீடியோ ஒன்றை இணையத்தளத்தில் பதிவேற்றியுள்ளார். அதில் 200 சிறுவர்களைத் தரையில் வரிசையாகப் படுக்க வைத்து ஐ.எஸ்





...டைந்த நிலையில் காணப்படுகின்றது. குறித்த நகர் ஒரு காலத்தில் மிகவும் பரபரப்பான கடற்கரையோர ...வாவியால் மூழ்கடிக்கப்பட்டது. முழு நகரும் நீருக்கு அடியில் மூழ்கியது. நகரில் வாழ்ந்த மக்கள் அனைவரும் ...த நகரம் மீண்டும் நீரில் இருந்து விடுபட்டுள்ளது. முன்பு அங்கு வாழ்ந்த மக்கள் தமது வீடுகளைச் சென்று (ற)

# இராணுவ ஆதரவுத் தலைவர்களை பேச்சுக்கு அழைக்கின்றார் சூகி

ரங்கூன், நவ.13

மியன்மார் பொதுத் தேர்தலில் வெற்றியைப் பெறும் நிலையில் உள்ள ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சியின் தலைவி ஆங் சான் சூகி தன்னுடன் நல்லிணக்க பேச்சுக்கு வருமாறு இராணுவ ஆதரவு அரசியல் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். தேர்தலில் தனது கட்சி வெற்றிபெற்றமை தொடர்பிலும், அதற்கு ஆதரவு தெரிவித்தவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காகவும் சூகி தொலைக்காட்சி நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தார். அதன்போதே இந்த விடயத்தை அவர் தெரிவித்தார்.



தேர்தல் வாக்குகளை எண்ணும் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. அதன் அனைத்து முடிவுகளும் அறிவிக்கப்பட்ட பின்னர் குறித்த நல்லிணக்கப் பேச்சு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குகள் எண்ணப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், இதுவரை 40 வீதமான இடங்களுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், கிட்டத்தட்ட 80 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளை ஜனநாயகத்துக்கான தேசிய லீக் கட்சி பெற்றுள்ளது. (ற)

# அவசரகால நிலைமை மாலைதீவில் நீக்கம்

## அமெரிக்கா வரவேற்கின்றது

வொஷிங்டன். நவ.13

மாலைதீவில் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலைமை விலக்கிக் கொள்ளப்பட்டமையை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை துணை செய்தி தொடர்பாளர் மார்க் டோனர் கருத்துத் தெரிவிக்கும் போது மாலைதீவில் அவசரகால நிலை திரும்பப் பெறப்பட்டிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம் என்று குறிப்பிட்டார்.

மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூம், தனது மனைவியுடன் ஹஜ் யாத்திரை சென்று விட்டு நாடு திரும்பியபோது, அவர் பயணம் செய்த படகில் வெடிப்பு ஏற்பட்டது. இது அவரைக் கொல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி எனக் கருதப்படுகிறது. இது தொடர்பான வழக்கில் அந்த நாட்டின் துணை அதிபர் அகமது அதீப் அப்துல் கபூர் கைது செய்யப்பட்டார்.

ஆனால் ஜனாதிபதியைக் கொல்வதற்கு முயற்சி நடந்தது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என அமெரிக்கத்திய புலனாய்வு அமைப்பு கூறியதை அரசு நிராகரித்துள்ளது.


இந்த குழப்பமான சூழலில் கடந்த 4 ஆம் திகதி, நாட்டில் ஒரு மாத காலத்துக்கு அவசரகால நிலையை அறிவித்து ஜனாதிபதி அப்துல் கயூம் அறிவிப்பு வெளியிட்டார். இதற்கு அமெரிக்கா அதிருப்தி தெரிவித்தது.

ஆனால் நேற்றுமுன்தினம் அங்கு திடீரென நெருக்கடி நிலை விலக்கிக் கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கையை அமெரிக்கா வரவேற்றுள்ளது. (ற)

# ...களுக்கு எதிராக அநீதி ...தால் கடும் நடவடிக்கை

## ...ான் பிரதமர் எச்சரிக்கை

...ிம்கள்
... நடவ
...பாகிஸ்
...எச்சரித்
...லத்தில்
...யில்
... அவர்
...
...நீதிகள்
...போது,
...றுபான்
...ப்பதில்
...கின்றது
...ித்தார்.
...ம் தெரி
...களுக்கு
...மக்கள்
...ிரதமர்.
... என்பது
...லாமி-



யர் இந்துவுக்கு எதிராக அநீதி இழைத்தால் அவர் என்னிடம் வரலாம். அநீதி இழைத்தவருக்கு எதிராக நான் கடும் நடவடிக்கை எடுப்பேன். அனைத்து மக்களுக்கும் குறிப்பாக சிறுபான்மையின மக்களுக்கு நீதி வழங்குவதுதான் இஸ்லாமிய அரசொன்றின் கடமை. - என்றார்.

தெற்கு சிந்து மாகாணத்தில் இந்து சிறுமிகள் கட்டாய மதமாற்றம் செய்யப்படும் பிரச்சினைக்கு எதிராக நாடாளுமன்றத்திலும் வெளியேயும் இந்து சமூகத்தினர் போராட்டம் நடத்திய நிலையில் நவாஸ் ஷெரீப்பின் இந்தக் கருத்து முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

அண்மைக் காலமாக சிறுபான்மையினருக்கு எதிரான அநீதிகள் பாகிஸ்தானில் அதிகரித்து வரு கின்றன. (ற)



## வறட்சியால் வாடும் எதியோப்பிய மக்கள்

லண்டன், நவ.13

எதியோப்பியாவில் தற்பொழுது நிலவும் கடும் வறட்சியால் அந்த நாட்டு மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அங்கு தற்பொழுது உணவுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஆபிரிக்காவில் உள்ள வறுமையான நாடுகளில் எதியோப்பியாவும் ஒன்று. அங்குள்ள ஒருசில நகரப் பகுதிகளில் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணப்பட்டாலும், அதிகமான பகுதிகளில் மக்கள் மிகவும் கஷ்டத்துடனேயே வாழ்கின்றனர்.

கடந்த சில காலமாக எதியோப்பியாவின் சில பகுதிகளில் அறுவடை தொண்ணூறு வீதத்தால் குறைவடைந்துள்ளது. அதனால் போசாக்கின்மையால் மக்கள் இறக்கும் நிலை அங்கு ஏற்பட்டுள்ளது.

அங்கு நிலவும் கடுமையான வறட்சி காரணமாக அடுத்த வருட முற்பகுதியில் அங்கு ஒன்றரைக் கோடி மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என்றும், அவர்களுக்கான உதவிகள் தேவைப்படும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. (ற)


# ...ஐ.எஸ். அமைப்பு வெறியாட்டம்



தீவிரவாதிகள் துப்பாக்கியால் மிருகத்தனமாக சுட்டுக் கொலை செய்வது ப்திவாகியுள்ளது.

அந்த வீடியோ 2014 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சிரியாவில் உள்ள தக்பா விமானப்படைத் தளம் அருகே எடுக்கப்பட்டது என்று கூறப்படுகிறது.

தீவிரவாதிகள் கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் இதுவரை 2 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரைக் கொலை செய்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற-ரி4)



இங்கிலாந்தைச் சேர்ந்த கில் சோலானா என்பவர் தனது மனைவிக்கு பிரசவம் நடந்தபோது, அவரது முகபாவத்தை செல்பியாக எடுத்து ரிடிஃப்பில் பதிவேற்றம் செய்துள்ளார். அது குறித்து மகிழ்ச்சியான விமர்சனங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்த சோலானாவுக்கு ஏமாற்றமே கிடைத்தது. அவரின் இந்தச் செயலுக்கு பலத்த விமர்சனங்கள் எழுந்துள்ளன. இதுகுறித்துக் கூறிய சோலானா மனைவிக்கு பிரசவ வலி எப்படி உள்ளது என தூரத்தில் இருந்து நச்சரித்துக் கொண்டே இருந்த உறவினர்களுக்கு நிலைமையை விளக்கவும், தங்களது மகள் பிறந்தபோது தமக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளை அறிந்துகொள்ள வேண்டும் என மனைவி விரும்பியதாலும் இந்த செல்பியை எடுத்து, பதிவேற்றம் செய்தேன் என்று கூறியுள்ளார். ஆனாலும் அவரது இந்தச் செயலைக் கண்டித்துப் பலத்த விமர்சனங்கள் கிளம்பியுள்ளன. (ற-ரி)

உதயன் | வெள்ளிக்கிழமை | நவம்பர் 13 | 2015



# பகழிக் கூத்தருக்குப் பரிசளித்த அழகன்



திருச்செந்தூர் என்றாலே கடற்கரையும் கோலக்குமரனின் கோபுர அழகும் தான் எம்மை நிமிர்ந்து பார்க்க வைக்கும். செந்தில் ஆண்டவன் அழகன். கேட்டதெல்லாம் பாலித்து அருளும் அருளாளன். செந்தூரிலிருந்து தான் சூரனை சம்ஹாரம் பண்ணப் புறப்பட்டான். இங்கு அமர்ந்து தான் சூரனைப் பற்றிய விவரங்களையெல்லாம் குருபகவானான பிரகஸ்பதி வாயிலாகக் கேட்டறிந்தான்.

அருளாளன் என்ற பெயருக்கு ஏற்ப சூரனை இரு கூறாக்கி சேவலைக் கொடியாக்கி, மயிலை வாகனமாக ஏற்றுக் கொண்ட பெருந்தகையாளன். பகழிக் கூத்தர் இராமநாதபுரத்தில் திவானாக இருந்தவர். இவருடைய தீராத வயிற்று வலியை செந்தில் ஆண்டவன் தீர்த்து வைத்தான். அதற்கு நன்றிக் கடனாக பகழிக் கூத்தர் திருச்செந்தில் ஆண்டவன் மீது, திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் பாடினார்.

அரங்கேற்றம் நடந்தது. இவரோ பெரிய சமஸ்தானத்து வித்துவான். இவருக்கு என்ன மரியாதை செய்ய முடியும்? என்று பேசாமல் இருந்து விட்டனர் ஆலயத்தினர். கந்தன் பேசாமல் இருப்பானா? பகழிக் கூத்தர் இரவில் உறங்கும் பொழுது தன் கழுத்துச் சங்கிலியைக் கழற்றி அவர் கழுத்தில் போட்டுவிட்டுப், போய்விட்டான். பிள்ளைத் தமிழுக்கு மயங்கிய பேரருளாளன் அவன். மறுநாள் காலை ஆண்டவனின் கழுத்துச் சங்கிலியைக் காணோம் என்று ஆலயம் திறந்த அர்ச்சகர் அலறித்துடிக்க, பகழிக் கூத்தரோ கந்தன் கழுத்துச் சங்கிலி பன்னீரும் சந்தனமும் மணக்க தன்கழுத்தில் எப்படி விழுந்து கிடக்கிறது. தாம் ஆலயத்திலிருந்து வரும்போது, அனைவரும் தானே வந்தார்கள்? இது எப்படிச் சாத்தியம்? தாம் திருட்டுப்பட்டம் சுமக்க வேண்டி வருமோ? என்று அச்சப்பட்டார்.

ஆண்டவன், தான்தான் அவருக்குப் பிள்ளைத் தமிழ் சொற்சுவையைக் கேட்டு, மகிழ்ந்து மரியாதை செய்தோம் என்று அர்ச்சகர் மூலம் அருள்வாக்குச் சொல்ல, ஆலயத்தினர் தங்கள் தவறைக் குமரப் பெருமான் சுட்டிக் காட்டியதை உணர்ந்து பகழிக் கூத்தரை அழைத்து ஆலயத்தில் மரியாதை செய்து சிறப்பித்தனர்.

தமிழ்க்குமரன் முருகப் பெருமான் என்பது இதிலிருந்து விளங்கும். முத்தமிழுக்கும் இவனே முதல்வன். இவன் நாதப் பிரியன் என்று அருணகிரிநாதப் பெருமான் பழனித் திருப்புகழில் நாவின்ப ரசமதான ஆனந்த அருவிபாய நாதங்களோடு குலாவி விளையாட என்கிறார்.

நாதாந்த நாயகனின் மகன் நாதங்களோடு குலாவி விளையாடுவதில் விந்தை ஒன்றும் இல்லை. இதற்கு ஒரு சம்பவத்தை திருச்செந்தூரின் அற்புதமாகவே காணலாம். பல ஆண்டுகளுக்கு முன்னால் நடந்தது. திருச்செந்தூரில் ஆலயத்துக்கு அருகில் ஒரு கல்யாண மண்டபம் இருந்தது. பழைய மண்டபம் அது. அதன் விஸ்தாரமான ஹோலில் முருக பக்தர்கள் தினமும் மாலையில் கூடி முருகனைப் பற்றிய ஸ்தோத்திரப் பாடல்களைப் பாடுவார்கள். அதில் பாம்பன் சுவாமிகளின் பஞ்சாமிர்த வண்ணமும் முக்கியத்துவம் வாய்ந்தது. திருப்புகழைப்போல சந்தத் தமிழின் சொற்சுவையும் பொருள் சுவையும் தமிழின் அழகைக் கொண்டது.

இந்தக் கூட்டத்தை ஒருங்கிணைந்து நடத்துபவர்கள் சுப்பையர் என்பவரும் அனந்த சுப்பிரமணியம் என்பவரும் ஆவார்கள்.

திருச்செந்தூரிலே பிறந்து வளர்ந்து முருக பக்தையாக இருப்பவர் முத்தம்மா என்னும் மூதாட்டி. அதிகாலை முருகனின் விஸ்வ ரூபத்தை தவறவிடாமல் தரிசிப்பவர். தினமும் கந்தனின் பாடல்களைக் காதால் கேட்டு மகிழ்பவர். இந்தப் பக்தர்கள் பாடல்களைப் பாடுவார்களே தவிர ராக ஸ்வர ஞானத்தோடு பாடுபவர்கள் அல்ல.

ஒருநாள் முத்தம்மா இந்தக் கூட்டத்தில் இருந்த சமயம் பேரெழில் கொண்ட ஓர் இளைஞன் கையில் பளபளத்த செம்பு ஒன்றை ஏந்தியபடி நின்றிருப்பதை அவதானித்தார். ஆலயத்துக்குப் பால் கொண்டு செல்பவன் என்று எண்ணினாரோ என்னவோ? அந்த இளைஞன் தொடர்ந்து சில தினங்களாகவே வந்து கொண்டிருந்தான்.

முத்தம்மையும் இவன் யார் வீட்டுப்பையன்? இவனுடைய வீடுஎது? என்றுகுழம்பியவாறு, திரும்பத்திரும்ப சிந்தித்தும் விடை கிடைக்கவில்லை. ஒருநாள் அதிகாலை தரிசனத்துக்காக முத்தம்மை தயாராகிக் கொண்டிருந்தார்.

கதவு தட்டப்பட்டது. இந்த நேரத்தில் யாரென்று எண்ணி, யாராவது தன்னுடன் கோயிலுக்கு வருபவர்களாக இருக்குமோ என்று ஐயத்துடன் கதவைத் திறந்தார். எதிரே சில தினங்களாகத் தன் சித்தத்தைக் கவர்ந்த அந்த அழகிய இளைஞன் இதழ் கொள்ளாத சிரிப்புடன் நின்றான்.

என்ன பாட்டி கோயிலுக்குத்தானே? என்றவுடன் இந்த நேரத்தில் போகலாமா என்ற அச்சம் துளியும் இன்றி நடந்தார் முத்தம்மா. "பயந்த தனி வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே" என்று கந்தரலங்காரப் பாடலைக் கேட்ட பாட்டிக்கா பயம்?

ஆனால், பாட்டியை எதுவும் கேட்க இயலாத மாயை சூழ்ந்திருந்தது. இவன் யாரென்ற கேள்வி மனத்தினுள் அடங்கினாலும் உடன் வரும் ஞான பண்டிதனுக்குத் தெரியாதா? ஆலயத்துக்குச் சற்றுத் தூரத்தில் நின்றவன் பாட்டி நான் யார்? என்வீடு எதுவென்றுதானே உனக்குச் சந்தேகம்? தினமும் என் வீட்டுக்கு வந்துமா என் வீடு தெரியவில்லை. அதோ பார். அதுதான் என் வீடு என்று திருச்செந்தூர் கோயிலைச் சுட்டிக்காட்டினான்.

பாட்டி கோபுரத்தைப் பார்த்துவிட்டு, அவனையே வெறித்தாள். இது செந்திலாண்டவன் கோயில் அல்லவா? மீண்டும் அவனையே வெறித்தாள்.

பாட்டிதினமும்பாட்டுக்கேட்கமண்டபத்துக்கு வருகிறேன். ஆளுக்கு ஆள் ஒவ்வொரு சுருதியில் பாடுறாங்க. ஒரே மாதிரி ராகம் போட்டு பாடினா எனக்குப் பிடிக்கும் என்றவனைப் பார்த்த முத்தம்மைஆலயத்தைப் பார்த்தாள். திரும்பி அருகிலிருந்த இளைஞனைப் பார்க்க அவன் அங்கே இல்லை. வந்தவன் அடியார்கள் சித்தத்தையே வீடாகக் கொண்ட ஆறுமுக வள்ளல் என்பதைப் புரிந்துகொண்டவளால் கதறிக் கண்ணீர் விடத்தான் முடிந்தது.

அன்றிலிருந்து பாடல்களையும்திருப்புகழையும் பஞ்சாமிர்த வண்ணத்தையும் ராகத்தோடு பாட ஆரம்பித்தார்கள்.

நாதம் மீட்டும் இடத்தில் சண்முக நாதன் நிச்சயம் இருப்பான்.

நன்றி
ஞானக்கதிர்

திருச்செந்தூரிலே பிறந்து வளர்ந்து முருக பக்தையாக இருப்பவர் முத்தம்மா என்னும் மூதாட்டி. அதிகாலை முருகனின் விஸ்வ ரூபத்தை தவறவிடாமல் தரிசிப்பவர். தினமும் கந்தனின் பாடல்களைக் காதால் கேட்டு மகிழ்பவர். இந்தப் பக்தர்கள் பாடல்களைப் பாடுவார்களே தவிர ராக ஸ்வர ஞானத்தோடு பாடுபவர்கள் அல்ல.

## எங்கள் குறையை உதயன் தீர்த்து வைப்பானா?

நானும் என்னைப் போன்றவர்களும் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குச் சென்று மோட்டார் சைக்கிளுக்குப் பெற்றோல் நிரப்புகின்றோம். எனது மோட்டார் சைக்கிளுக்கு ஒரு லீற்றர் பெற்றோலுக்கு ஓர் அவுன்ஸ் என்ற விகிதத்தில் ஒயில் கலக்கச் சொல்லி எனது மெக்கானிக் கூறு கின்றார். நான் மோட்டார் சைக்கிள் திருத்தப்போகும் சமயங்களில் ஒயில் குறைவாகவா கலக்கின்றீர்கள் என்று கேட்பார். அப்படிக் கலக்கத் தவறினால் எஞ்சின் பழுதடைந்து விடும் என்றும் கூறுகின்றார்.

ஆனால்பெற்றோல்நிரப்பஎந்தசெற்றுக்குப்போனாலும் 1/4 போத்தல் ஒன்று வைத்திருக்கிறார் கள். எத்தனை அவுன்ஸ் என்றாலும் அந்தப் போத்தலால் கண் மட்டத்துக்கே அளந்து போத்தலைக் கையால் மறைத்துப் பிடித்துக்கொண்டு அல்லது சரித்துப் பிடித்துக்கொண்டு ஒயிலை விடுகிறார்கள். அதில் நாங்கள் சொன்ன அளவு ஒயில் இருக்கின்றதா எனத் தெரியாது. இது இப்படிச் செய்பவர்களுக்கே பொருந்தும். இந்த நவீன உலகத்தில் துல்லியமான எத்தனையோ கருவிகள் வந்துவிட்டன. சரியாக இந்த அளவை அளக்கமுடியாதா? அல்லது ஓர் அவுன்ஸ் இரண்டு அவுன்ஸ் என்பதற்கு போத்தலும் இருக்கின்றன. அவற்றையாவது பாவிக்க முடியாதா? இதை நிவர்த்தி செய்து தருவது எங்கள் அபிமான உதயனின் கடமையாகும்.

– பொ.தவராசலிங்கம், கொக்குவில் மேற்கு.

## பிரதேச செயலக ஓய்வூதியக் கிளைக்கு

நான் அரச திணைக்களத்தில் கடந்த 1991 இல் கடமையாற்றி ஓய்வுபெற்று (மக்கள் வங்கி மூலமாகி) ஓய்வூதியம் பெற்று வருகிறேன். எங்களுக்கு முன்பு வவுச்சர் மூலம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. சில மாதங்களாக வங்கியில் சேமிப்புக் கணக்கு மூலமாக ஓய்வூதியம் பெற்று வருகிறோம். முன்பு வவுச்சரில் அடிப்படை ஓய்வூதியம் எவ்வளவு? ஓய்வூதிய யூனியனில் கடன் பெற்ற மாதாந்த கழிவு தொகை எவ்வளவு கழிக்கப்படுகின்றது? மாதந்த சந்தாப் பணம் எவ்வளவு கழிவு என்பன ஒரு விரவமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். ஆனால் தற்போது ஒரு விதமான விவரமும் தெரியாமல் வங்கியில் சேமிப்புப் புத்தகத்தை கொடுத்து பணத்தைப் பெற்று வருகின்றோம். தற்போது ஓய்வூதியர்களின் சம்பள முரண்பாடு காரணமாக கடந்த ஆவணி மாதத்தில் இருந்து திருத்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் ஆவணி, புரட்டாதி, ஐப்பசி ஆகிய மூன்று மாதங்களில் வெவ்வேறான ஓய்வூதியப் பணம் வழங்கப்பட்டிருக்கின்றன. இதனால் குழப்பமடைய வேண்டியிருக்கிறது. எனவே எங்களுக்கு மாதம் எவ்வளவு ஓய்வூதியப் பணம், கழிவு எவ்வளவு என்பனவற்றை விசேட வவுச்சர் மூலம் தந்துதவும் வண்ணம் பணிவாக வேண்டுகிறோம்.

– தர்மராசா, ஓய்வூதியர்.

## மரங்கள் அழிக்கப்படுவதைத் தடுப்பது எமது தார்மீகக் கடமை

தற்போது மரநடுகை தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது. போரைக் காரணம் காட்டி எமது பகுதியில் ஏராளமான பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டு விட்டன. போரின்போது அழிந்தவை ஒரு புறமிருக்க, மனிதர்களால் திட்டமிடப்பட்டு அழிக்கப்பட்ட மரங்கள்தான் ஏராளம்.

வன்னிப் பகுதிகளில் புலிகள் நிலை கொண்டிருந்தபோது, மரங்களை வெட்டுவதில் இறுக்கமான நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. இதனால் மரங்களை எளிதில் வெட்ட முடியாத ஒரு நிலை காணப்பட்டது. ஆனால் போர் முடிவடைந்து புலிகளும் இல்லாத நிலையில் வன்னிக் காடுகள் பெருமளவில் அழிக் கப்பட்டு விட்டன. இதில் உள்ளூர்வாசிகள் மட்டுமல்லாது வெளியிடங்களைச் சேர்ந்தவர்களும் ஈடு பட்டுள்ளனர். இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு எவரும்முனைப்புடன்செயற்படுவதாகத் தெரியவில்லை.


மழை வீழ்ச்சி குறைவடையும்போது மண்ணின் வளமும் பாதிக்கப்படுகின்றது. இதனால் விவசாயச் செய்கைகளும் பாதிக்கப்படுகின்றன. மழைவீழ்ச்சி ஒழுங்காக இடம்பெற வேண்டுமானால் மரங்கள் அதிகளவில் காணப்படுவது அவசியமாகும். மரங்களை அழிப்பதால் மழை வீழ்ச்சியும் பாதிக்கப் படுகின்றது.

ஆகவே மரங்களை நடுவதில் காட்டுகின்ற ஆர்வத்தை இவற்றை அழிக்காமல் தடுப்பதிலும் காட்ட வேண்டும். இயற்கையின் பெரும் சொத்தான மரங்களை அழிப்பதற்கு எவருக்குமே உரிமை கிடையாது. ஆனால் பல்வேறு காரணங்களைக் கூறி மனிதர்கள் இந்த நாச வேலையில் தொடர்ந்து ஈடுபடவே செய்கின்றனர். மனச்சாட்சியற்ற மனிதர்களின் இந்தச் செயல் ஒட்டுமொத்தச் சமுதாயத்தையே பாதித்து விடும் என்பதை நாம் அனைவரும் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.


ஊடகங்களும் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மரங்கள் எமக்கு இறைவன் அளித்த பெரும் பொக்கிசம் என்பதை நாம் மறந்து விடலாகாது.

– மா.ரகுராமன், சண்டிலிப்பாய்.

### வாசகர் திருமுகம்



### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

## இழுபறியில் நடந்த கைதிகள் விடுதலை

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளில் 32 பேர் நேற்றுமுன்தினம் முற்பகல் பிணையில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று உறுதியளிக்கப்பட்டிருந்தபோதிலும், பலத்த இழுபறிகளுக்கு மத்தியில் 31 பேர் நேற்றுமுன்தினம் பிற்பகல் பிணை அனுமதி வழங்கப்பட்டனர். இந்த விவகாரத்தில் பிச்சுப்பிடுங்கல் இருந்த போதிலும், அரசு நிலைமையின் பாரதூரத் தன்மையை உணர்ந்து துரிதமாகச் செயற்பட்டிருப்பதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

காலையில் கைதிகள் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்ட சமயம் பிரதமர் உறுதி அளித்தபடி இவர்கள் பிணையில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. கைதிகளின் குடும்பத்தவர்கள், உறவினர்கள் பெரும் எண்ணிக்கையில் நீதிமன்றத்தில் திரண்டிருந்தனர். எனினும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி கிடைக்காததால் இவர்களை எதிர்வரும் 24ஆம் திகதி வரை தொடர்ந்து தடுத்துவைக்க நீதிவான் உத்தரவிட்டார். அதனால் கைதிகளின் விடுதலையை எதிர்பார்த்து நீதிமன்றம் வந்திருந்தோர் பெரும் ஏமாற்றமடைந்தனர். தீர்வு விவகாரம் அரசின் உயர் மட்டம் வரை எடுத்துச்செல்லப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால் கைதிகள் பிற்பகலில் மீண்டும் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டுப் பிணை அனுமதி வழங்கப்பட்டது. ஆகவே இந்த விவகாரம் சுமுகமாக இடம் பெறவில்லை என்பது புலனாகின்றது. ஏனைய கைதிகளின் விடுதலைக்காகத் தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டிய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஏனைய தமிழ் அரசியல்வாதிகளும் உள்ளனர். தொடர்ந்து போராட வேண்டிய நிலைமையே காணப்படுகிறது.

கைதிகளின் விடுதலை குறித்து பிரதமர் உட்பட அரசின் முக்கிய தலைவர்கள் பலர் வாக்குறுதிகள் அளித்திருந்தும், கைதிகளின் பிணைவழங்கும் செயற்பாட்டுக்குச் சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடாது என்று பிரதமர் உத்தரவிட்டிருந்தும், சட்டமா அதிபர் திணைக்களம் ஆரம்பத்தில் அனுமதி வழங்காதது ஏமாற்றமளிக்கிறது. அரசின் உயர் மட்டத்தில் உள்ள பிடுங்குப்பாட்டை இது வெளிக்காட்டுகிறது. சட்டமா அதிபர் திணைக் களம் அரசின் முக்கிய தீர்மானங்கள் தொடர்பாக முரண்பாடான நிலைப்பாட்டைத் தொடர்ந்து எடுக்குமானால் அரசாங்கம் சிலதுணிச்சலான நடவடிக் கைகளைக்குத் தள்ளப்படலாம். சட்டமா அதிபர்திணைக் களம் கைதிகள் விடுதலைக்கு முதலிலேயே அனுமதி வழங்கியிருந்தால் நேற்று முன் தினம் பிரச்சினை இவ்வளவு தூரம் பூதாகரமாகியிருக்க முடியாது. கைதிகளுக்கு முதலில் பிணை மறுத்து விட்டு அதேதினம் மீண்டும் அவர்களை நீதிமன்றத்துக்கு அழைத்துவந்து பிணைவழங்கியது இலங்கையின் நீதிமன்ற வரலாற்றில் இதுவே முதலாவது சம்பவமாக இருக்கலாம்.

கைதிகள் தமது உணவுத் தவிர்ப்பும் போராட்டத்தை ஆரம்பித்த நாளில் இருந்து இவர்களின் விடுதலை குறித்து அரசு ஓர் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கமுடியாதிருந்ததை அவதானிக்க முடியும். இதற்கு அரசியல் ரீதியான பிடுங்கல்களும் காரணமாக இருக்கலாம். நீதி அமைச்சர் உட்பட அரசில் உள்ள சில முக்கிய அமைச்சர்கள் கைதிகளுக்குப் பிணை வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தமையும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

இம்மாதம் ஏழாம் திகதிக்கு முன்னர் கைதிகளின் விடுதலைக்கு நடவடிக்கை எடுப்பதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு ஜனாதிபதி அளித்த வாக்குறுதி நேற்று முன்தினம் தான் ஒப்பேறியுள்ளது. அதுவும் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு இல்லை. 31 பேருக்கு மட்டுமே பிணை வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் பிணை நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத காரணத்தினால் மீண்டும் அவர்கள் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கைக்கு எட்டியும் வாய்க்கெட்டாத கதையாக இவர்களின் கதை அமைந்துள்ளமை கவலையளிக்கின்றது.

இரண்டாவது கட்டமாக இம்மாதம் 20ஆம் திகதி மேலும் ஒரு தொகுதி கைதிகள் பிணையில் விடுதலை செய்யப்படுவார்கள் என்று பிரதமர் தெரிவித்துள்ள போதிலும் நேற்றைய சம்பவத்தை நோக்கும்போது அதுவும் சுமுகமாக நிறைவேறும் என்றும் எதிர்பார்க்க முடியாது. ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நாட்டின் ஏனைய தமிழ் அரசியல் தலைவர்களும் கைதிகள் விடுதலை விவகாரத்தில் அழுத்தந்தொடர்ந்து அழுத்தம் கொடுக்கவேண்டும்.

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021‡492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944

விளம்பரம் : 021‡493 1111

விநியோகம் : 021‡493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com

விளம்பரம்: advt@uthayan.com

## அரசியல் ஆட்சி மாறினும் காட்சி மாறாத போக்கு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில், அரசால் கபளீகரம் செய்யப்பட்ட தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள், அவர்களுக்கு மீளக் கிடைக்குமா? கிடைக்குமாயின் அதற்கு எத்தனை ஆண்டுகள் கழிந்தாக வேண்டும் என்பதை எவரும் திட்டவட்டமாகவோ, அன்றி அனுமானித்தோ கூற இயலாத நிலை மேலுயர்ந்துள்ளது. சோதிடம் பார்ப்பவர்கள், கணிப்பவர்கள்கூட இதில் "கோட்டை விடுவார்கள்" என்று நிச்சயமாகக் கூறலாம்!!

நேற்றுமுன்தினம் (11. 11. 2015 இல்) நடைபெற்ற காணிவிடுவிப்புக் குறித்த கலந்துரையாடலில், எதுவுமே உருப்படியாக மேலுயரவில்லை!

வெறுமனே மீள்குடியமர்வு, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அவை விரைந்து மேற்கொள்ளப்படுவது அவசியம் என்று கதைகள் சொல்லப்பட்டனவே அன்றி, உருப்படியான முடிவு, தீர்மானம் எதுவும் வெளிப்படவில்லை.

இவை யாவும் திட்டமிட்டுக் காலத்தைக் கடத்தும் போக்கு என்ற சந்தேகத்தையே உற்பவித்துள்ளது.

- மீள்குடியமர்வு, மீள்குடியமரும் மக்களுக்கான தேவைகள் உள்ளிட்ட பல விடயங்கள் -- பிரச்சினைகள் -- குறித்து ஆராய்வதற்கு மாகாண மட்டத்தில் ஆளுநர், முதலமைச்சர் தலைமையில் குழுவொன்று செயற்படும்.
- மாகாண மட்டத்தில் ஆராய்ந்த பின்னர், எட்டப்படும் தீர்மானம் மீள்குடியேற்ற அமைச்சர் தலைமையில் அமைக்கப்படும் குழுவினால் ஆராயப்படும்.
- இறுதியில், ஜனாதிபதி தலைமையிலான குழுவினால் ஆராயப்படும். அங்கு வைத்தே இறுதி முடிவு செய்யப்படும்.

அப்பாடா! இந்தச் செயல்ஒழுங்கு நடைபெற்று, விளைவு, முடிவு எப்போது வரும்? அது எத்தனை வருடங்களில் செயலாக்கப்படும் என்பதை எண்ணிக் கணக்கிடவே வருடங்கள் பல தேவை என்ற நிலைமை தோற்றுவிக்கப்படுமோ......?

இவை எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துக் கணக்குப் பார்த்தால் ஆண்டுகள் பல சென்றாலும், தமிழ் மக்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட காணிகள் உரியவர்களது கைகளுக்கு எப்போது வந்துசேரும் என்பதை ஆராய்ந்து கண்டுபிடிக்க, ஆண்டுகள் இரட்டை இலக்கங்களில் உயர்ந்தாலும் ஆச்சரியப்பட ஏதும் இல்லை!

அதிலும், குழுக்கள் அமைக்கப்படுவது காலம் கடத்தும் அரசியல் உத்திகளில் ஒன்று. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அது மனப்பாடமாகிவிட்ட சொற்றொடர் ஆகிவிட்டது!

ஒரு சிறிய உதாரணம்: தமது வாழ்விடங்களை இழந்த 318 குடும்பங்களைச் சேர்ந்த 4,737 தமிழ் மக்கள் இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் ஒன்பதாம் திகதி வரை 32 நலன்புரி நிலையங்களில் தங்கி இருந்தபோது --

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடர் ஒன்றில் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் (நூறு சதவீதம்) மீளக்குடியமர்த்தப்பட்டு விட்டனர் என்று நாக்கூசாமல் கணக்குக் காட்டிய "பெருமை" இலங்கை அரசுக்கே உரியது.

எமக்களின் காணிகள் அவர்களுக்கே.

எஇராணுவத்தின் வசம் இருப்பின் மீளப் பெற்றுக் கொடுக்கப்படும்.

இந்த உறுதி மொழிகளை வழங்கியவர் கடந்த மார்ச் மாதம் வடக்குக்கு வருகை தந்த நாட்டின் பெருந்தலைவர். ஆனால் இப்போது காட்சி மாறுகிறது.

எந்த ஆட்சி வந்தாலும் தமிழரின் நிலை மாறாத போக்கு இந்த நாட்டின் வரலாறாகத் தொடர்கிறது.

பொதுவாக கொழும்பு அரசுகளின் நிலை (மன) மாற்றங்கள் இத்தகையனவே. வேறேது சொல்ல......?

# ஐவன் எழுப்பும் ஐயங்களும் ஐயர் பெற்ற தண்டனையும்

வி.எஸ்.நடராஜா

நாடறிந்த ஊடகவியலாளர், ராவய தினப் பத்திரிகையின் ஆசிரியர், 1971 இல் இடம்பெற்ற ஜே.வி.பியினது ஆயுதப் புரட்சியில் பங்குபற்றியதற்காக சிறைவாசம் அனுபவித்தவர் இந்த விக்டர் ஐவன். 2006 ஆம் ஆண்டில் இவரால் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் எழுதப்பட்டு மிக வேகமாக விற்பனை செய்யப்பட்டது இந்த நூல். தமிழில் இதை வேண்டுமானால் ஏமாற்றுச் சுந்தரி என்றோ வஞ்சகராணி என்றோ மொழி பெயர்த்துக் கொள்ளலாம். மேற்படி நூலில் ஆசிரியர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பற்றியே இப்படி வர்ணித்துள்ளார்.



1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து ஆட்சிக்கு வந்த சகல ஊழல் மிகுந்த திறமையற்ற அரசியல்வாதிகளிலேயும் மிகவும் மோசமான ஊழல் பேர்வழியும் திறமையற்ற அரசியல்வாதியுமே இந்த சந்திரிகா அம்மையார் தான். அவரைப் பொறுத்தவரையில் தனது வாழ்க்கையை லேசாகக் கொண்டு செல்வதற்காக பொய் பேசல் என்பது கடவுளால் அவருக்கு அளிக்கப்பட்ட கொடை என்கிறார் ஐவன்.

மேற்படி நூலில் சந்திரா ஐயர், ரகுபதி சர்மா பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளதால் நாம் முதலில் கடந்த செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி அன்று கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிலிருந்து கட்டுரையை ஆரம்பிப்போம். 1999 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான சிறிலங்கா சு.கட்சியின் இறுதி நாள் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்ற கொழும்பு நகர மண்டபப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தற்கொலைத் தாக்குதலில் 30 பேர் உயிரிழந்ததுடன், 115 க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். மேற்படி சம்பவத்தின்போது முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்காவின் வலது கண்ணும் பெரும்பாதிப்புக்குள்ளானது. இந்தத் தாக்குதலுக்குத் திட்டம் தீட்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினரான சக்திவேல் இலங்கேஸ்வரனுக்கு 270 வருட கால கடூழியச் சிறைத்தண்டனை வழங்கி மேல் நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

உதயன் என்றழைக்கப்படும் வேலாயுதம் வரதராஜனுக்கு 290 வருடச் சிறைத்தண்டனையும் சந்திரா ஐயர் ரகுபதிசர்மா என்பவருக்கு 300 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. இரகசியப் பொலிஸார் அல்லது மேலதிகாரிகளின் தவறுகளே சம்பவத்தில் தொடர்பேதும் இல்லாத வசந்தி ரகுபதி சர்மா 15 வருடங்களாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமைக்குக் காரணம் என்கிறார் அவரது சட்டத்தரணி. தற்சமயம் அவர் இந்த வழக்கில் இருந்து நிரபராதி என உயர் நீதிமன்ற நீதிபதி பத்மினி ரணவக்க தீர்ப்பளித்தார்.

மேற்படி வரதராஜனும் ரகுபதி சர்மாவும் அந்தத் தீர்ப்புகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளனர். பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் கீழ் பொலிஸாருக்கு வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களைப் பயன்படுத்தியே அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளனர். இந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களைப் பொலிஸார் சந்தேக நபர்களிடமிருந்து பலவந்தமான முறையில் பெற்றிருந்ததாக வழக்கு விசாரணைகளின்போது சாட்சியங்கள் அளிக்கப்பட்டிருந்தன. ஆனால் அந்தச் சாட்சியங்களை நிராகரித்த நீதிபதி, குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் அவர்களின் சுயவிருப்பத்தின்பேரிலேயே அளிக்கப்பட்டதாகத் தீர்ப்பின்போது தெரிவித்திருந்தார். எனவே தீர்ப்பு எமது சாட்சிகளுக்கு முற்றிலும் தவறானது என்று மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர். எனவே தங்களுக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை ரத்து செய்துவிட்டு தம்மை விடுதலை செய்யுமாறு அவர்கள் நீதிமன்றத்திடம் கோரியுள்ளனர்.

ஏதோ காரணங்களினால் மேற்படி நகர மண்டப குண்டு வெடிப்புச் சம்பந்தமான விசாரணைகள் ஒரு திசையில் திரிபுபட்டதாகவோ அல்லது தோல்வியில் முடிந்ததாகவோ தெளிவாகத் தெரிந்தது.

நகர மண்டபக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற நாளுக்கு மறுநாளே அரசால் மேற்படி குண்டு வெடிப்பு சம்பந்தமாக விசாரணை செய்யும் படி ஒரு மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. பதில் பொலிஸ் பதில் பொலிஸ்மா அதிபர் இந்திரா டீ சில்வா, ஜயதிஸ்ஸ ஹேரத் மற்றும் ஆர்.கே. எல். ரத்னாயக்கா ஆகியோர் இந்தக் குழுவின் அங்கத்தவர்கள். இந்த ஆணைக் குழு வெளியிட்ட இடைக்கால அறிக்கையில் குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் தான் என சகல விசாரணைகளிலிருந்தும் புலனாகின்றது. மேற்படி இடைக்கால அறிக்கை வெளியிட்டதன் பின்பு இந்தக் ஆணைக் குழுவுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை.

ஜனாதிபதியின் உபயோகத்திலிருந்த வி. எம். டபிள்யு வாகனமும் சம்பவ இடத்தில் காணப்பட்ட, ஏனைய குண்டுதுளைக்காத வி.எம்.டபிள்யு வாகனங்களும் குண்டுவெடிப்பின்போது எந்தவித சேதமுமின்றித் தப்பிவிட்டன. ஜனாதிபதியின் பாவிப்பிலிருந்த வி.எம்.டபிள்யு வாகனம் சாதாரணமாக சந்தையில் கிடைக்காத பொருள். இது அவரது விசேட் தேவைகளுக்காக வாடிக்கையாளரின் விருப்பத்துக்கேற்ப நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட விசேட வாகனம்.

கட்டுநாயக்கா சர்வதேச விமானப் படைத்தளத்தைச் சேர்ந்த ஆர்.கே.என். ஆனந்த என்னும் பெயர் கொண்ட கட்டளை அதிகாரி அந்தச் சமயத்தில் நாட்டின் தலைசிறந்த வெடிகுண்டு நிபுணராக இருந்தார். இவரும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் தலைவர் நிகால் கருணாரத்னவும் சேர்ந்தே ஜேர்மனியிலுள்ள வி. எம். டபிள்யு கார் நிறுவனத்துக்கு பயணம் செய்துள்ளார்கள். இவர்களின் கூட்டு பயணத்தின் பின்பே மிகவும் பாதுகாப்பான வாடிக்கையாளரின் தேவைக்கேற்பவும் எந்த விதமான குண்டுவெடிப்புக்களையும் தாக்குப்பிடிக்கக்கூடிய விசேட வி.எம்.டபிள்யு. வாகனம் ஜனாதிபதியின் உபயோகத்துக்கு இலங்கை வந்து சேர்ந்தது. குண்டுவெடிப்பின் பின்பு, ஆனந்த ஜனாதிபதியை வைத்தியசாலையில் பார்வையிடச் சென்றார். அப்பொழுது சந்திரிகா, 'ஆனந்த இந்த வாகனம் ஒரு அங்குலம் உயரமாக இருந்திருந்தால் எனக்கு ஒன்றும் நடந்திருக்காது' - என்றார். இந்தக் குண்டுவெடிப்பு மக்கள் அனுதாபத்தை பெறுவதற்கான விளம்பர உத்தியாக இருந்தால், விசேடமான வி.எம்.டபிள்யு வாகனத்தைத் தயாரித்துப் பெற்றமையும் சதியில் ஒரு பகுதியாகலாம். இப்படிப்பட்ட ஒரு திட்டத்துக்கு உபயோகிப்பதற்காகவே விசேடமாகச்சொல்லிச் செய்விக்கப்பட்டது இந்த வாகனம் என்பதே எனது அனுமானம் என்கிறார் விக்டர் ஐவன்.

தேர்தலில் மக்களின் அனுதாபத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதியின் மேபியாக்குழுவினரால் முன்னெடுக்கப்பட்ட செயலே இது.

அவருக்கு ஏற்பட்ட காயங்களை அவதானிக்கும்பொழுது இந்தச் சதி நம்பக்கூடியதாகவே இருக்கிறது.

மேலும் ஜனாதிபதி குண்டுவெடிப்பு நடைபெற்ற உடனேயே ஒரு தொலைக்காட்சி நேர்காணல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார். குண்டுவெடிப்பு இடம்பெற்ற நேரத்திலேயே சுவர்ண வாகினி தொலைக்காட்சியின் சந்தன சூரியபண்டார தலைமையிலான குழு அலரி மாளிகையில் ஜனாதிபதியைப் பேட்டி காண்பதற்காகக் காத்துக் கொண்டிருந்தது. என்றுமே தனது கட்டுப்பாட்டில் இரண்டு அரச தொலைக்காட்சி நிறுவனங்கள் இருக்கும்பொழுது ஏன் அவர் தனியார் தொலைக்காட்சியான சுவர்ணவாகினியுடன்பேட்டி கொடுக்க விரும்பினார்? அவர் தனது சாவின் எல்லையைத் தொட்டுவந்த அனுபவத்தை எடுத்துக் கூறி, மக்கள் மனதில் அபிப்பிராயத்தை ஏற்படுத்த விரும்பினாரா?

திட்டமிட்ட நாடகம் (சதி) பிழைத்துவிட்ட காரணத்தினாலா அவர் உடனடியாக நவலோக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படாமல் அலரிமாளிகைக்கு வந்து சேர்ந்தார். இந்த நிகழ்ச்சி (குண்டுவெடிப்பு) பொதுமக்களின் அனுதாபத்தைப் பெற உதவியதுடன் குண்டுத்தாக்குதலினால் முன்னிருந்த நிலைமையில் பெரிய மாற்றம் ஏற்பட்டு, தேர்தலில் வெற்றி பெறும் தந்திரத்துக்கும் உதவி வெற்றியை நிச்சயமாக்கி விட்டது.

எனது அபிப்பிராயத்தில் அந்த நகர மண்டபக்குண்டுவெடிப்பு அவரது மாபியா (P.S.D) குழுவினரால் அவருக்குத் தெரிந்தே அரங்கேற்றப்பட்டுள்ளது. அதன் நோக்கம் இன்னொரு 6 வருட ஆட்சியைக் கைப்பற்றிக்கொள்வதற்கு ஏதுவாக மக்களின் மனங்களில் அனுதாப அலையை ஏற்படுத்துவதற்காகவே நடத்தப்பெற்றது. குண்டுவெடிப்பு அவருக்கு தீங்கு (காயம்) ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்படவில்லையாயினும் கணக்கீட்டில் ஏற்பட்ட ஒரு சிறிய தவறு காரணமாகவே அவருக்கு கண்பார்வையில் பாதிப்பு ஏற்பட்டது. இந்த நிகழ்வுக்கு ஈடாக அவர் இரண்டாவது முறையும் சிறிலங்காவின் ஜனாதிபதியானார்.

# இலங்கையின் இருண்ட யுகத்தை முடிவுக்குக் கொண்டுவந்த மதகுரு

ஆங்கில மூலம்-குணவர்த்தன
தமிழில்- ரஜீபன்



இலங்கையில் மதம், அரசியல் வன்முறை என்ற பிரபல நூலின் அட்டைப் படத்தை அந்தக் காலப் பகுதியில் சோபித தேரரின் படமே அலங்கரித்தது, பல மாதங்களாக நாடாளுமன்றத்திலும், ஊடகங்களிலும் இந்த நூல் குறித்து கடும் சர்ச்சை எழுந்ததை தொடர்ந்து இலங்கையில் இந்த நூல் தடைசெய்யப்பட்டது.

இலங்கையின் எந்த அரசியல் கட்சியையும் சேராதவராகக் காணப்பட்டபோதிலும். அற்புதமான அரசியல் வாழ்க்கை நடத்தியவர் மாதுளுவாவே சோபிததேரர். அச்சமற்ற தீவிர அரசியல் ஈடுபாடு கொண்ட இந்த பௌத்த மதகுரு. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவில் ஆரம்பித்து. தொடர்ந்து வந்த அனைத்து இலங்கை ஜனாதிபதிகளையும் எதிர்த்து நின்றவர்,மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியற் தலைவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட ஆணையை மீறுகின்றனர் என உணர்ந்த போது அவர் அதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கத் தயங்கியதில்லை. அவரது வார்த்தைகளில் தயக்கம் காணப்பட்டதில்லை,

கடந்த நான்கு தசாப்தங்களாக தேரர் தனது பேச்சாற்றலையும்,ஒழுங்கமைக்கும் திறமைகளையும் பயன்படுத்தி சாத்வீக போராட்டங்களுக்கு மக்களைத் திரட்டும் பணியை சிறப்பாக மேற்கொண்டார், அவர் சில போராட்டங்களில் வெற்றிபெற்றார், சிலவற்றில் தோற்றார், ஆனால் மக்களுக்காகப் போராடுவதை ஒருபோதும் நிறுத்தியதில்லை, ஒவ்வொரு போராட்டமும் அவரை மேலும் உறுதியானவராக்கியது.

சில சந்தர்ப்பங்களில் தங்களுக்குள் மோதிக் கொண்டிருந்த பிளவுபட்ட எதிர்க்கட்சிகளை விட மாதுளுவாவே தேரரை ஆபத்தனவராக, சவாலானவராக ஆளும் அரசுகள் கருதின.

அதிகளவில் கொடுங்கோலாகவும், தனக்கு வேண்டியவர்களுக்கு மாத்திரம் சலுகை செய்வதாகவும் மாறிவந்த மகிந்த ராஜபக்ச ஆட்சியை தேரர் துணிச்சலுடன் எதிர்த்த வேளை, இந்த நிலையே காணப்பட்டது.நீதியான சமூகத்துக்கான தேசிய இயக்கத்தை உருவாக்கியவர் மாதுளுவாவே சோபித தேரரே. அது பிளவுபட்டிருந்த எதிர்க்கட்சிகளை இணைப்பதில் வெற்றி கண்டது, கலைஞர்கள், தொழிற்சங்கவாதிகள் போன்றவர்களையும் இணைத்து ஆட்சி மாற்றத்துக்கான குரலாக மாறியது.

கடந்தவருடம் இதேகாலப்பகுதியில் ஆட்சி மாற்றத்துக்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டும் என்ற உணர்வு காணப்பட்டது. இலங்கையின் அறிவிக்கப்படாத எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட்டு, எங்களை அந்தஅழிவின் விழிம்பிலிருந்து காப்பாற்றியவர் மாதுளுவாவே சோபித தேரரே.

கொழும்பின் புறநகர் பகுதியைச் சேர்ந்த பௌத்த ஆலயத்தின் தலைவரான சோபித தேரரே- ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும்,பாதுகாப்பதில் ஏனைய மகா நாயக்க தேரர்களை விட முன்னணியில்- நின்றார்.

> **2014 நவம்பர் 21 ஆம் திகதி எவரும் நினைத்துப்பார்க்காத வகையில் மைத்திரி பால சிறிசேன பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் இடம்பெற்றவையெல்லாம் வரலாறு என்பது அனைவருக்கும் தெரியும்.**

**பௌத்தத்தின் அயத்துல்லா**

2014 இல் மாதுளுவாவே சோபித தேரர் ஜனாதிபதித் தேர்தலில் அப்போதைய ஜனாதிபதிக்கு எதிராக போட்டியிடுவார் என்ற ஊகங்கள் காணப்பட்டன.அது ஒரு பௌத்த அயத்துல்லாவை உருவாக்குமா என்ற அச்சமும் சிலர் மத்தியில் காணப்பட்டது.

ஆனால், அவ்வாறான ஊகங்களை உருவாக்கியவர் இந்தத் தேரராகவே காணப்பட்டார். அவ்வாறான ஊகங்களை உருவாக்கிவிட்டு அவர் மகிந்த ராஜபக்சவை எதிர்த்து போட்டியிடக் கூடிய நம்பகத் தன்மை மிக்க வேட்பாளரைக்கண்டுபிடிப்பதிலும்,ராஜபக்சவை எதிர்க்கக் கூடிய எதிர்க்கட்சி கூட்டணியை உருவாக்குவதிலும் திரை மறைவில் செயற்பட்டுவந்தார்.

பல மாதங்களாக எனது அயலில் உள்ள கோட்டே நாகவிகாரை புலனாய்வாளர்களின் தொடர்ச்சியான கண்காணிப்புக்கு உட்பட்டிருந்தது,அந்த விகாரைக்கு வரும் பல விருந்தினர்களைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர்,இந்த விகாரை இவ்வாறான நெருக்கடியைச் சந்திப்பது அது முதல்தடவையல்ல,முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச தான் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாக உணர்ந்ததால், மாதுளுவாவே சோபித தேரர் எவ்வாறான அரசியல் பூகம்பத்தை உருவாக்கப் போகின்றார் என்பதை அறிவதற்காக பொலிஸாரையும், புலனாய்வுப் பிரிவினரையும் விகாரையை சுற்றி ஈடுபடுத்தியிருந்தார். எனினும் தேரர் அனைத்து மன்னர்களினது உளவாளிகளின் கண்ணிலும் வெற்றிகரமாக மண்ணைத் தூவினார். 2014 நவம்பர் 21 ஆம் திகதி எவரும் நினைத்துப்பார்க்காத வகையில் மைத்திரி பால சிறிசேன பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னர் இடம் பெற்றவையெல்லாம் வரலாறு என்பது அனைவருக்கும் தெரியும்.

சோபிததேரரின் விடாமுயற்சியும் புத்திச் சாதுரியமும் இல்லாவிட்டால், ஜனவரி 8 இன் உறுதியான- ஆனால் அமைதியான ஆட்சிமாற்றம் சாத்தியமாகியிராது. இந்தக் காலப்பகுதியில் அவர் தனது இன, மத அடையாளங்களைக் கடந்து பரந்துபட்ட இலங்கையின் சமூகத் தலைவராகப் பரிணமித்திருந்தார்.

ஆட்சி மாற்றத்துக்கான முயற்சிகளை மேற்கொண்ட அதேவேளை, அதனால் ஆபத்துக்களையும், சுமைகளையும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், ஜாதிக ஹெல உறுமய போன்ற அமைப்புகளும் அதிகளவுக்கு எதிர்கொண்டது உண்மையே.

ஆனால் மாதுளுவாவே சோபித தேரரே கூட்டணியை ஏற்படுத்துவதில் முக்கியமானவராகவும். பிரதான தந்திரோபாய வகுப்பாளராகவும் காணப்பட்டார், மிக முக்கியமாக அந்த வழமைக்கு மாறான கூட்டணியில் காணப்பட்டவர்களுடன் ஒப்பிடும்போது ஆகக்குறைந்தளவு தனிப்பட்ட அரசியல் அபிலாசைகள் அற்றவராகவும் அவர் காணப்பட்டார்.

இதன் காரணமாக மைத்திரியின் நல்லாட்சி அரசு தனது பாதையிலிருந்து விலகிச் செல்கின்றது என்பதற்கான அறிகுறிகள் தோன்றிய வேளை, அதிலிருந்து தன்னைத் தனிமைப்படுத்திக்கொள்வது மாதுளுவாவே தேரருக்கு இலகுவான விடயமாகக் காணப்பட்டது. அவர் அதிலிருந்து பிரிந்து செல்லவில்லை, மாறாக கடந்த மார்ச் மாதமளவில் தன்னுடைய கரிசனைகளை வெளிப்படுத்தத் தொடங்கியிருந்தார். தனிப்பட்ட ரீதியில் அவர் எந்தவிதப் பதவியையும், நன்மையையும் பெறாததால் அவர் தொடர்ந்தும் நம்பகத் தன்மை உள்ளவராகக் காணப்பட்டார்.

இலங்கையின் புதிய அரசு மிக மோசமான ஊழல் குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வரும் தருணத்தில், அதன் குறுகியகால வரலாற்றில் மிகமோசமான குழப்பத்தை எதிர்கொண்டுள்ள இந்தத் தருணத்தில் மாதுளுவாவே சோபித தேரர் எங்களை விட்டுப் பிரிந்து சென்றுள்ளார்.

எங்களது தேசத்தின் பொறுப்பாளர்களிடம் அவர்கள் மக்கள் ஆணையை மீறக்கூடாது என ஆணித்தரமாக, உறுதியாக தெரிவிப்பதற்கு சோபிததேரர் இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்.

**காவியுடையணிந்தவர்களின் எதிர்ப்பு**

சோபித தேரர் எப்போதும் சரியானவராக இருந்ததில்லை, அவரது ஆரம்ப கால அரசியல் பரப்புரைகள் சிறுபிள்ளைத் தனமாகவும், பிழையான அர்த்தம் கொண்டவையாகவும் காணப்பட்டது உண்மையே. 1987 இல் இந்திய - இலங்கை உடன்படிக்கையை ஏனைய பௌத்த பிக்குகளுடன் இணைந்து இவர் எதிர்த்தார்.

எனது நண்பரும் தேரரின் நெருங்கிய சகாவுமான பத்திரிகையாளர் தர்மன்விக்கிரமரட்ண இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு எதிரான பெரிய ஆர்ப்பாட்டமொன்றுக்கு தலைமை வகித்த தேரர் எவ்வாறு 1987 ஓகஸ்ட் முதலாம் திகதி கைது செய்யப்பட்டார் என்பதை வர்ணித்தார். கோட்டை நாகவிகாரைக்கு தேரரைக் கைது செய்வதற்காக பொலிஸார் சென்ற வேளை, அதனைத் தடுப்பதற்காக ஆயிரக் கணக்கான மக்கள் அணிதிரண்டனர்.


எனினும் தான் மக்களின் போராட்டத்துக்காக எந்தத் தியாகத்தையும் செய்ய தயாராகவிருப்பதாக தெரிவித்த சோபித தேரர் தானாக முன்வந்து கைதானார், அவர் ஒருமாதம் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் அதிகாரங்களை எதிர்த்தது அதுவே இறுதித் தடவையுமல்ல.

ஹவார்ட் பல்கலைகழக ஆய்வாளர் ஸ்டான்லி தம்பையா எழுதிய பௌத்தத்துக்கு துரோகமிழைக்கப்பட்டது- இலங்கையில் மதம், அரசியல், வன்முறை என்ற பிரபல நூலின் அட்டைப் படத்தை அந்தக் காலப்பகுதியில் சோபித தேரரின் படமே அலங்கரித்தது. பல மாதங்களாக நாடாளுமன்றத்திலும், ஊடகங்களிலும் இந்த நூல் குறித்து கடும் சர்ச்சை எழுந்ததைத் தொடர்ந்து இலங்கையில் இந்த நூல் தடைசெய்யப்பட்டது.இந்த நூலை எழுதிய தம்பையா கிறிஸ்தவ தமிழர் என விமர்சிக்கப்பட்டார்,

இளவயது சோபிதர் தீவிரவாதபோக்கு கொண்ட பௌத்தத்தின் ஆரம்பநாள்களைப் பிரதிபலித்தார் என்றால்,அவர் பின்னர் மிதவாத தளத்தை நோக்கி நகர்ந்தார். இலங்கையைத் தங்களது தேசம் என அழைக்கும் பல்வேறுபட்ட சமூகத்தினர், மதத்தினருடன் கூட்டணிகளை ஏற்படுத்திக் கொள்ளும். அவரது திறனே கடந்த இரு தசாப்தங்களாக அவரது பலமாகக் காணப்பட்டது. அவர் காவியில் ஆரம்பித்து வானவில்லில் முடித்துக்கொண்டார்.

# வயிற்றுவலி வேதனை தீர எளிய சிகிச்சை முறைகள்

வயிற்றுப் பகுதியில் பல்வேறு காரணங்களால் பாதிப்பு ஏற்பட்டு வலி ஏற்படுகிறது. இந்த வயிற்றுவலி வேதனை என்பது தாங்க முடியாதது. இதற்கு வயது வித்தியாசம் எதுவும் கிடையது. வயிற்றில் குடல்புண், கெட்டுப்போன உணவுகளைச் சாப்பிடுவது, செரிமானக் குறைபாடு, நச்சுணவு, இரைப்பைப் புண், இரைப்பை அழற்சி, குடற் புழுத்தொல்லை, குடல் அழற்சி, குடல் வால் அழற்சி, குடல் அடைப்பு, மாத விடாய், மலச்சிக்கல், சிறுநீரக அழற்சி, சிறுநீரகக் கற்கள், பித் தப்பை அழற்சி, பித்தப்பைக் கற் கள் போன்ற பல்வேறு காரணங் களால் வயிற்றுவலி ஏற்படலாம். உணவைச் சரியான அளவில் சாப்பிட்டு, அதிகமான அளவில் தண்ணீர் குடிக்க வேண்டும். வயிற்று வலி ஏற்பட்டால் தகுந்த மாத்திரைகளை உட்கொள்ளலாம். வயிற்றுப்புண், மாதவிடாய் உட்பட எல்லா வயிற்று வலிகளுக்கும் பொதுவான முதலுதவி இது. இந்த மாத்திரை கிடைக்காவிட்டால், ஒரு கண்ணாடிப் போத்தலில் வெந்நீரை நிரப்பிக் கொண்டு, அதை ஒரு துணியால் சுற்றிக்கொண்டு, வயிற்றில் ஒத்தடம் கொடுக்கலாம். மேல் வயிற்றில் வலி உண்டானால், அது இரைப்பைப் புண் அல்லது இரைப்பை அழற்சி காரணமாக இருக்கலாம். இதற்கு அமில நீர்ப்பு மருந்து (எ.கா. ஜெலுசில், டைஜீன்) அல்லது அமில எதிர்ப் பு மாத்திரைகளில் (எ.கா. ரேபி பிரசோல், பேன்டபுரசோல்) பயன் படுத்தலாம். மலச்சிக்கல் காரணமாக வயிறு வலித்தால், வயிற்றுவலி மாத்திரையுடன், மல மிளக்கி மாத்திரை (எ.கா. பர்கோளக்ஸ்) ஒன்றை இரவில் சாப்பிட்டுக் கொள்ளலாம். இரவு நேரத்தில் மட்டும் வயிற்றுவலி வந்தால் அதற்கு குடல்புழு காரணமாகும். இதற்கு குடல்புழு மாத்திரை (எ.கா. அல்பண்ட சோல்) சாப்பிடலாம். சிறுநீர் கடுப்புடன் அடிவயிறு அல்லது கீழ் முதுகு வலித்தால், சிறுநீரகக்கல் காரணமாக இருக்கும். இதற்கு வயிற்றுவலி மாத்திரையுடன், 200 மி.லி. தண்ணீரில் 2 கரண்டி 'சிட்ரால்கா சிரப்' கலந்து குடிக்கலாம். குளிர்ச்சியான பானங்கள் மற்றும் பழரசங்களைக் குடிக்கலாம். இரைப்பை அழற்சி அல்லது செரிமானக் குறைபாடு இருந்தால், வயிற்று வலியுடன் புளித்த ஏப்பம், குமட்டல், வாந்தி, வயிறு உப்புசம் இருக்கும். இதற்கு இளநீர் அருந்தலாம். 'எலெக்ட்ரால்' பவுடர், புளிப்பில்லாத மோர், குளிர்ந்த குடி தண்ணீர் அல்லது குளிர்ச்சியான பானங்களை அருந்தலாம். வாயு சேர்ந்து வயிறு வலித்தால், 'சைமத்திக்கோன்', 'சார்க்கோல்' மாத்திரைகளில் ஒன்றைச் சாப்பிடலாம்.



## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்


| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | – | 80 | 60 | 80 | 40 | 40 |
| கத்தரி | 200 | 180 | 200 | 150 | 200 | 120 | 90 |
| கரட் | 140 | 120 | 80–120 | 140 | 240 | 200 | 220 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 60 | 50 | 40 | 30 |
| பயிற்றை | 350 | 120 | 140 | 340 | 280 | 220 | 200 |
| பாகல் | 300 | 360 | 200 | 600 | 280 | 300 | 300 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 100 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 150 | 150 | 160 | 160 | 140 | 160 | 130 |
| சி.வெங்காயம் | 130 | 140 | 120 | 140 | 130 | 200 | 150 |
| பூசணி | 50 | 40 | 60 | 50 | 40–50 | 80 | 50 |
| தக்காளி | 180 | 140 | 150 | 140 | 180 | 200 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 60 | 70 | 70 | 40 |
| கீரை | 30 | 60 | 40 | 40 | 40 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | – | 30 | 40 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 450 | 500 | 440 | 500 | 300 | 450 |
| புடோல் | 120 | 100 | 120 | 120 | 120 | 120 | 120 |
| கோவா | 160 | 140 | 160 | 160 | 140 | 160 | 120 |
| வெண்டி | 120 | 180 | 120 | 120 | 120 | 50 | 80 |
| போஞ்சி | 200 | – | 240 | 380 | 240–260 | 320 | 220 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 | 120 | 120 | 140 | 180 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 40 | 50 | 40–45 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 110 | 140 | 120 | 130 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 350 | 380 | 300 | 300 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 10 | 10 | 20 | 10 |
| கறிமிளகாய் | 200 | – | 300 | 240 | 260 | 320 | 220 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | 180 | 100 | 200 | 100 | 180 | 200 | 200 |

## நாளை

ஐப்பசி-28 சனிக்கிழமை (14.11.2015)

திதி: திருதியை:பி.இ 01.51 வரை
நட்சத்திரம் : கேட்டை:மாலை 06.46 வரை
சுபநேரம்: 03.07-04.37 வரை
இராகு காலம்: 09.07-10.37 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



**உங்கள் விதியை நீங்களே நிர்ணயிக்கிறீர்கள்**

இயற்கைக்குக் கீழ்ப்படியாமல் இருப்பது தான் மனித சமுதாயத்தின் வளர்ச்சியாகும். வரலாற்றைப் பார்த்தால் மனிதவளர்ச்சி இதனால் தான் உண்டாகிறது. மனிதன் தனது வாழ்க்கையைத் தானே உருவாக்கிக் கொள்கிறான். தனக்குத்தானே அமைத்துக் கொள்ளும் விதிகளைத் தவிர, வேறு எதற்கும் மனிதன் கட்டுப்படத் தேவையில்லை. தைரியமாக இருங்கள். உங்கள் விதியை நிர்ணயிக்கும் சக்தியைப் பெறுவீர்கள். நல்ல செயல்களுக்கும், இதயப்பூர்வமான நன்மைகளுக்கும் இறைவனே முன்நின்று உதவுவார்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | சாவகச்சேரி | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | யாழ்ப்பாணம் | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 550 | 600 | 600 | 700 | 500 |
| நண்டு | 150 | 400 | 200 | 300 | 300 | 400 |
| கணவாய் | 600 | 600 | 400 | 500 | 700 | - |
| பாரை | 400 | 400 | 350 | 500 | 500 | 300 |
| சுறா | 300 | 400 | 350 | 600 | 800 | 370 |
| சீலா | 300 | 300 | 300 | 350 | 400 | 250 |
| விளை | 300 | 400 | 260 | 300 | 500 | 200 |
| முரல் | 200 | 300 | 250 | 300 | 400 | - |
| கும்பிளா | - | 300 | 200 | 250 | 300 | 200 |
| கிழாக்கன் | - | 800 | - | 300 | - | - |
| ஓரா | - | 300 | 220 | 250 | - | 200 |
| திரளி | 100 | 200 | 150 | 120 | 200 | - |
| நகரை | 150 | 200 | 100 | 250 | 200 | 200 |
| சூடை | 100 | 100 | 50 | 100 | 100 | - |
| ஒட்டி | 150 | 150 | 180 | 150 | 200 | 100 |
| திருக்கை | - | 350 | 150 | 200 | 200 | 110 |
| பாலை | 200 | 200 | - | 250 | - | - |
| வாளை | 100 | 150 | 150 | 120 | - | - |
| கொய் | 50 | 100 | 40 | 100 | 50 | - |
| மதனம் | 100 | 200 | 130 | 200 | - | 150 |

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | 5 | | | 7 | |
| 3 | | | 6 | | | 8 | | |
| | | 2 | | | 3 | | | 6 |
| | | | | 7 | | | 3 | |
| | | 1 | | | | 4 | | |
| | 5 | | | 1 | | | | |
| 7 | | | 1 | | | 6 | | |
| | | 4 | | | 6 | | | 8 |
| | 1 | | | 9 | | | 5 | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 1 | 3 | 9 | 8 | 2 | 7 | 6 |
| 7 | 2 | 8 | 4 | 1 | 6 | 3 | 5 | 9 |
| 3 | 9 | 6 | 7 | 2 | 5 | 8 | 1 | 4 |
| 1 | 8 | 2 | 9 | 5 | 3 | 6 | 4 | 7 |
| 9 | 7 | 5 | 8 | 6 | 4 | 1 | 3 | 2 |
| 6 | 3 | 4 | 1 | 7 | 2 | 9 | 8 | 5 |
| 8 | 1 | 7 | 6 | 4 | 9 | 5 | 2 | 3 |
| 2 | 4 | 9 | 5 | 3 | 1 | 7 | 6 | 8 |
| 5 | 6 | 3 | 2 | 8 | 7 | 4 | 9 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# உங்கள் பிறந்த மாத பலன்கள் எப்படி?

## ஜூன்

சூரியன் தனது சுழற்சிக் காலத்தில் மிதுன ராசியில் சஞ்சரிக்கும் காலம் ஜூன் மாதம் என்று அழைக்கப்படுகிறது. இந்த ராசி புதனுக்கு ஆட்சி வீடு ஆகும். பஞ்சதத்துவங்களில் ஒன்றான காற்றை இந்த ராசி பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இதனால், புதனுக்கேயுரிய பிரத்தியேக குணங்களான நடுநிலை தவறாமை, நுண்ணறிவு, உதவும் மனப்பான்மை, யுக்தி, சாதுர்யம், எதையும் கற்றுக்கொள்வதில் ஆர்வம், வேகமாகச் செயற்பட்டு காரியங்களை முடிக்க முனைதல், தந்திரம், நகைச்சுவை உணர்வு, கேளிக்கை, கிண்டல் முதலியவற்றில் எல்லையில்லாத ஆர்வம், கதைகளில் ஈர்ப்பு போன்றவை இந்த மாதத்தில் தோன்றியவர்களிடத்தில் அதிகமாகக் காணப்படும். மெலிந்த, உயரமான உடலமைப்பு, நீள்முகம், விரிந்த, அகன்ற நெற்றி, நீள்புருவம், குறுகுறுக்கும் பார்வை ஆகியவற்றுக்குச் சொந்தக்காரர்கள். அகன்ற வாயும் மேல் உதடு தடித்தும் குவிந்தும் காணப்படும் செவிகள் விரிந்து இருக்கும். தோள்கள் தடித்திருக்கும். வேகமான நடைப்பாங்குடையவர். நிரந்தரக் கொள்கைகள் இவர்களிடம் காணப்படாது. அடிக்கடி தாம் எடுக்கும் முடிவுகளை மாற்றிக்கொண்டே இருப்பர். செயலில் ஈடுபடும்போது மற்றொன்றாக முடியும். இவரிடத்தில் பழகாதவர்கள் இவரைப் பற்றிப் புரிந்து கொள்வது அசாத்தியமான காரியம். நெருங்கிப் பழகுபவர்களும் இவரைத் தவறாகவே புரிந்து கொள்வர். வெகு சீக்கிரமாகக் கிரகிக்கும் தன்மையுடையவர். அதுபோலவே வெகு சீக்கிரத்தில் மனதை மாற்றிக்கொள்ளவும் இவர்களால் முடியும். அவசரக்காரர்கள் என்றாலும் தந்திர சாலிகள். உள்ளத்தில் இருப்பதை வெளிப்படுத்த மாட்டார்கள். பிறர் உள்ளத்தைச் சோதித்துப் பார்ப்பவர். அவசரத்தால் ஆகாது என்று தெரிந்தவுடன் கொள்கையை மாற்றிக்கொள்வர். மே மாதத்தில் தோன்றியவர்களைப் போல் இவர்கள் பொறுமைசாலிகளல்லர்.

துயரத்தை வரவேற்கவும், கஷ்டத்தைத் தாங்கவும் மாட்டார்கள். இத்தகைய சந்தர்ப்பங்கள் வாழ்க்கையில் நேரிடும்போது மெல்ல நழுவிக் கொள்வர். காரியங்களை வெகு சுலபமாக்கிக்கொள்வர். ஆரம்பித்த காரியங்களில் தலையிடுவர். இவருக்குத் தெரியாத விடயங்கள் எவை என்ற கேள்விக்கு உறுதியாக இவரைக் குறிப்பிடவும் முடியாதாம். மேதாவிகளைப் போல் பிறர் புலனுக்குத் தோற்றமளித்திடுவர். இவர் கற்றுத் தோற்றது பல. இவர் ஆலோசனைகளைக் கேட்டறிந்து செயலில் ஈடுபடலாம். ஆனால் இவரை சகாயத்துக்கு மட்டும் அழைக்கலாகாது. சகாயத்துக்கு அழைத்தவர்களுக்கு அபாயம் நேரிடுவது போல் தெரிந்தால் இடையில் இவர்கள் சொல்லாமல் கொள்ளாமல் நழுவி விடுவார்கள். இவர் காரியவாதிகளல்லர். இலட்சியவாதிகளும் அல்லர். சமயோசித சூழ்நிலைக் கேற்றவாறு கருத்தை மாற்றிக் கொள்வர். தம்மைப் பாதிக்காமலிருக்கும் காரியங்களிலும் அதிகம் பொறுப்பு ஏற்படாமலிருக்கும் துறைகளிலும் இவர் தைரியமாக தோன்றிடுவர். கடன் வாங்குவ தென்றால் இவருக்குப் பயம். கடன் வாங்கினாலும் கூடிய சீக்கிரத்தில் திருப்பிக் கொடுத்திடுவர். இல்லாமலிருந்தாலும் அதிகப் பிரயாசைக்குள்ளாக மாட்டார். பழகாதவர்களிடத்திலும் இவர் நீண்டநாள் பழகியவர்போல் பழகுவர். மூளைதான் இவருக்கு மூலதனம். இதைக்கொண்டு வியாபாரமோ, தொழிலகங்களோ நிறுவினால் நிர்மூலமாகி, வேறு தொழிலில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். புத்தகங்களில் அதிக ஈடுபாடுள்ளவர்கள். தர்க்கத்திலே தாம் தோல்வியுற நேர்ந்தாலும் குதர்க்கம் பேசுவதில் வித்தகர். வாதிகளிடத்தில் விதண்டாவாதியுமாவர். ஒரே கல்லில் இரண்டு கனிகளை அடையும் சாதுர்யமுடையவராக இருப்பார். சிறு வயதில் தொண்டையில் ரணம் உடையவர்களாக விளங்குவர். இதற்குக் காரணம் குளிர்பானங்கள், ஐஸ்கிரீம் போன்றவற்றை உட்கொள்வதே. இதனால் இருமல், சளி, தொண்டையில் சதை வளருதல் போன்ற உபாதைகள் ஏற்படும்.

இதனால் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளவும் நேரிடும். கூடாத பொருள்களை அறவே நீக்குவது சாலச் சிறந்தது. வயது வளர வளர, இந்த மாதத்தில் தோன்றியவர்கள் ஆழ்ந்த யோசனையில் ஈடுபடுவதால் நரம்புத் தளர்ச்சி போன்ற பிணிகளுக்கு இடந்தர நேரிடும். கூடுமான வரையில் குடிப்பதற்கு வெந்நீரை உபயோகிப்பது நலம். உணவும் சூடு குறையாமல் இருப்பது மிகவும் நல்லது. தனித்திருக்கும் போது ஏதாவதொரு சிறு பணியில் ஈடுபடுவது சிறந்தது. குளிர்ந்த தண்ணீரில் நீராடுவது கூடாது. வெந்நீரும் நன்கு கலந்து, சற்று ஆறிய நீரே உகந்தது. இரும்புச் சத்து அதிகமுள்ள காய்கறிகளையும் வஸ்துக்களையும் உட்கொள்வது மிகவும் சிறந்தது. மேலே கூறிய இந்த முறைகளை இவர் கையாண்டு வருவாராயின் நோயற்று நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கலாம். கஷ்டப்பட்டு முன்னுக்கு வரக்கூடிய ஆற்றல் மிக்கவர். எதையும் கூர்ந்து நோக்கும் ஆராய்ச்சித் திறனுடையவர். எந்தக் காரியத்திலும் நல்லது கெட்டது என இரண்டையும் அலசிப் பார்த்துப் பின்னர் செயலில் ஈடுபடுவர். அதிக கஷ்டத்தை ஏற்கத் தயங்குவர். பொறுப்பை ஏற்பதென்றால் இவருக்கு வேம்பு. ஆனால் எதையும் ஏற்றுக்கொண்ட பிறகு முழு முயற்சியுடன் சாதித்து முடித்திடுவர். இவர் தனக்கெனப் பாடுபடாவிட்டாலும் பிறருக்காக ஈடுபடும் விவகாரங்களில் மிகவும் உற்சாகம் கொண்டவர். இவருக்கென சில கொள்கைகளை வகுத்துக்கொள்வர். தம்முடைய அபிப்பிராயத்தைத் துச்சமென மதிப்பவர்களிடத்தில் இவர் உறவு கொள்ளார். கடுகடுப்பானவர். பிறர் மனதைப் புண்படுத்தும்படி பேசுவதென்றால் சந்தர்ப்பத்தை நழுவவிடார். ஏழை எளியவர்களுக்கு உபகாரி. ஆனால் பணக்காரர் என்றால் இவர் எதிரியாகவே பாவிப்பார். கேளிக்கை வினோதங்களில் இவருக்கு மிக்க ஆர்வமுண்டு. விளையாட்டுப் பந்தயங்களிலும் கலந்து கொள்வர். சண்டை சச்சரவுகளில் இவர் மறைந்து கொள்வர். அதிகச் சிரமம் இல்லாமல் அரிய, பெரிய காரியங்களைப் பிறர் வியக்கும் வண்ணம் சாதிக்கும் திறமையுடையவர் தந்திரமாகச் சாதிக்கக் கூடிய காரியங்களில் விடாக் கண்டர்கள். தரகு, மத்தியஸ்தம் செய்யும் துறைகளில் இவர்களைக் கருவியாகப் பயன்படுத்தினால் காரிய வெற்றியும் கைமேற் பலனும் கிட்டிடும். ஒக்ரோபர், பெப்ரவரி மாதத்தில் தோன்றிய பெண்மணிகளை வாழ்க்கைத் துணைவியாக ஏற்கவும் தொழிலில் கூட்டாளிகளாகச் சேர்த்துக்கொள்ளவும் உகந்தது. கார்த்திகை, தை மாதத்தில் பிறந்தவர்களுடன் சேர்ந்து விரோதமும், வஞ்சகமும், ஏமாற்றமும் ஏற்படும். ஒரே இடத்தில் நிரந்தரமாக இருக்கக் கூடியவர்களல்லர். நிரந்தரமாக உட்கார்ந்து செய்யக்கூடிய கடினமான வேலைகளுக்கு இவர் தகுதியுடையவரல்லர். சதா காலமும் சுற்றுப் பிரயாணம் செய்யும் காரியங்களிலும் பிறர் செய்த காரியங்களை மேற்பார்வை செய்யும் விவகாரங்களிலும் கணக்குகளைப் பரிசோதித்தல், தொழில் ஸ்தாபனங்களுக்கு முக்கிய பிரதிநிதிகளாக வேலை பார்த்தல், தகராறுகளை மத்தியஸ்தம் செய்தல், தரகு பேசுதல், மொழி பெயர்த்தல் போன்ற காரியங்களில் இவர் சிறந்த திறமைசாலிகளாக விளங்குவர். அதிக சரீர உழைப்பின்றி மூளையின் உதவியைக் கொண்டு புத்திகூர்மையாலும் வாக்கு சாதுர்யத்தாலும் சாதிக்கக்கூடிய செயல்களில் இவர் திறமை சோபிக்கும். சட்ட நுணுக்கங்களை ஆராய்வதிலும் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதிலும் பிறர் குற்றங்களை வேவு பார்ப்பதிலும் இவருக்கு நிகர் இவரே தான். ஆனால் இவரைப் பிறர் கட்டுப்படுத்துவதோ, அடிமையாக்கிக் கொள்வதோ முடியாத காரியம். சுயேச்சை விரும்பிகள். இவருடைய விருப்பத்துக்கு விட்டுக் கொடுத்தால்தான் இவரால் காரியத்தைச் சாதிக்க முடியும். இல்லையேல் ஆரம்பித்தவை முடிவு பெறாமலேயே நிற்கும். இவர்கள் நல்ல நடிகர்களுமாவர்.





# மாறுவாயா பெண்ணே...

(நேற்றைய தொடர்ச்சி...)

பெண்ணே! உன்னை, உனக்குள் இருக்கும் திறமைகளை முதலில் இனங் கண்டுகொள். ஆணாதிக்கத்தின் பிடியில் சிக்கிவிடாமல் சமயோசிதமாக உனது பயணத்தை தொடர்ந்து கொள். இந்த அழகிய உலகில், அழகாய் வாழ, அழகிய பிறவியாய் படைக்கப்பட்டவள் நீ. அழகும் அறிவும் இருந்தால், சிறப்பான வாழ்க்கை வாழமுடியும்.

எவருக்காகவும் உன்னை வேதனைப்படுத்தாதே. ஆண் ஆதிக்கம் செய்யும் அளவுக்கு அடிமையாகிவிடாதே. ஆணைப்போலவே நீயும் சுயமாய் வாழப்பிறந்தவள். வாழ்வியல் மாற்றத்துக்கேற்ப, உன்னை மாற்றிக்கொள். உனது வாழ்வில் புதுப்புது மாற்றங்களை ஏற்படுத்து. அந்த மாற்றங்கள் உனது வளர்ச்சியின் படிக்கல்லாக அமையட்டும். வாழும் காலத்தில் உனக்கென ஓர் அடையாளத்தை ஏற்படுத்து.

அந்த அடையாளம் சமூகம் வியந்து நோக்கத்தக்கதாக அமையுமாறு பார்த்துக் கொள். நீ ஏற்படுத்துகிற உனது அடையாளம் உன் உடல் அழிந்த பின்னரும் சமுதாயம் மீட்டுப்பார்க்கும் பெருமை கொண்டதாக இருக்கட்டும். உனது பாதையின் இருமருங்கிலும் வருகின்ற முட்செடிகள் உனது காலை இடறிவிடாதபடி நிதானமாய் நட. உனது இலட்சியத்தை நோக்கி நட. வேதனைகளும் கண்ணீரும் தொடர்ந்த போதிலும் அதனை ஒரு பொருட்டாக எண்ணாது நீ கொண்ட இலட்சியத்தோடு நேராகப் பயணம் செய். கண்ணீர் விட்டழுத காலங்களின் காயங்களை வலியோடு உணர்ந்தவளாக நட, எதற்காக மனதில் ஏற்பட்டதோ, அதையே தேடி ஓடு. உன் மனதில் அமைதியையும் சந்தோசத்தையும் நீயே ஏற்படுத்து. உன்னை நீயே ஆற்றித்தேற்றிக் கொள். உன்மனம் அழும்போதெல்லாம் அடுத்தவரின் ஆறுதலுக்காக காத்திருக்காதே.

உன்னிரு கரங்களும் உன்னை அணைத்து ஆறுதல் சொல்லட்டும். எவரையும் எதற்கும் எதிர்பாராதே. உன்னால் முடியும் என்ற திடமனதுடன் உற்சாகமாக தெளிந்த சிந்தையோடு நட. உனது கால்களின் பலத்தில் பூமியில் விழாதபடி நில். பூமியை முத்தமிடும் உன் பாதங்கள் உன் பயணத்தில் உன்னைத் தாங்கும் சக்தியாகட்டும். பெண்ணே! அரவணைப்பும் அன்பும் கிடைக்கவில்லை என்று அழுதுபுலம்புவதை விட, உன்னை நீயே அரவணைத் துக்கொள். புலம்பித் தவிக்கும் மனதைவிட்டு புலரும் பொழுதை எதிர்கொள்ளும் பெண்ணாக மாறுவாயா?

உடுவிலூர் கலா

திலகம்



## எல்லோரும் சோம்பேறிகளே!

சந்தை கூடும் இடத்தில், ஓர் உயர்ந்த இடத்தில் முல்லா நின்று கொண்டார். மக்கள் சந்தையை நோக்கிப் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருந்தனர். "அன்பார்ந்த நண்பர்களே! உங்கள் வாழ்க்கைக்கு ஏற்ற அருமையான சில யோசனைகள் என்னிடம் இருக்கின்றன. இவற்றைக் காது கொடுத்துக் கேட்க வேண்டும் என்று நினைப்பவர்கள் சற்று அருள் கூர்ந்து நில்லுங்கள் " என்று முல்லா உரத்த குரலில் கூறினார். முல்லா என்ன சொல்லப் போகிறார் என்று அறிந்து கொள்வதற்காக ஒரு பெருங்கூட்டம் அங்கே கூடியது. "நண்பர்களே! கொஞ்சம் கூட உடல் உழைக்காமல் வீட்டில் இருந்தவாறே ஆயிரக் கணக்கில் சம்பாதித்து சுகபோக வாழ்வு வாழ உங்களில் எத்தனை பேருக்கு விருப்பம்? நான் அதற்கு வழி சொல்லுகிறேன். என்னுடைய யோசனைகளைக் கேட்கத் தயாராக இருப்பவர்கள் எத்தனைபேர்? அவர்கள் மட்டும் கையைத் தூக்குங்கள்" என்றார் முல்லா. அனேகமாக அங்கே இருந்த அத்தனைபேரும் கையைத் தூக்கினார்கள். "முல்லா உழைக்காமல் சுக போக வாழ்வு வாழ என்ன வழி? தயவு செய்து கூறுங்கள்?" என்று மக்கள் கூச்சலிட்டனர். முல்லா தாம் நின்றிருந்த இடத்தை விட்டுக் கீழிறங்கி நடக்கத் தொடங்கினார். "என்ன முல்லா அவர்களே, ஒன்றும் சொல்லாமல் செல்லுகிறீர்களே?" என்று மக்கள் கேட்டனர். "நண்பர்களே எமது ஊரில் எத்தனை சோம்பேறிகள் இருக் கிறார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்பினேன்; என்னையும் சேர்த்து இந்த ஊரில் உள்ள எல்லோருமே சோம்பேறிகள் தான் என்ற உண்மை எனக்கு விளங்கி விட்டது. இனி எனக்கு இங்கே என்ன வேலை? போய் வருகிறேன்" என்று கூறியவாறே முல்லா செல்லத் தொடங்கினார்.

அங்கிருந்த மக்கள் திகைப்படைந்தவர்களாக முல்லா சென்ற திசையை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தனர்.



## வர்ணம் தீட்டலாம் வாங்க



## அறிந்ததும் அறியாததும்!

1. சராசரி மனிதனின் உடலிலுள்ள குருதியின் அளவு - 5.5 லீற்றர்.
2. மனித உடலில் இருந்து வெளியேறும் சிறுநீரின் சராசரி அளவு - 1.5 லீற்றர்.
3. சராசரி மனிதன் ஒரு நாளில் அருந்த வேண்டிய நீரின் அளவு - 6 லீற்றர்.
4. மனித உடலில் உள்ள குருதி நாளங்களின் மொத்த நீளம் - ஒரு லட்சம் கிலோ மீற்றர்.
5. மனித உடலில் மிகவும் குளிரான பகுதி - மூக்கு
6. மனித உடலில் வியர்க்காத உறுப்பு - உதடு
7. மனித உடலின் சிவப்பு அணுவின் சராசரி ஆயுள் காலம் - 120 நாள்கள்
8. இறந்த மனிதனின் இதயத்தின் உயிர்த்துடிப்பு அடங்க எடுக்கும் நேரம் - 20 நிமிடங்கள்
9. மனித நகம் வளரும் வருட சராசரி அளவு - 12.5 அங்குலம்
10. மனித உடலில் உள்ள வியர்வைச் சுரப்பிகளின் எண்ணிக்கை 2 லட்சம்.

# வாழ்க்கையை முழுமையாக வாழ

***'வாழ்க்கையை முழுமையாக வாழ' என்ற தலைப்பிலான கட்டுரை நேற்றைய உதயனில் பிரசுரமாகியிருந்தது. அதன் தொடர்ச்சி கீழே தரப்படுகிறது.***

உடலின் ஒவ்வொரு பாகத்தின் தசையும் ஓய்வாக உணர்ந்து, ஒரு பாதுகாப்புக் கவசத்தையும் உருவாக்கிய பிறகு, பத்தில் இருந்து ஒன்று வரை எண்ணிக் கொண்டே- மேலிருந்து கீழ் நோக்கி, மாடிப்படி வழியாகவோ அல்லது எலிவேட்டர் மூலமாகவோ இறங்குவதாக கற்பனை செய்யவும். ஒவ்வொரு எண்ணை எண்ணும்போதும் இன்னும் ஆழமாக, இன்னும் ஆழமாக என்று கூறிக்கொண்டே இறங்கவும். (கவனம் சிறிது பிசகுவது போல உணர்ந்தால், பத்திலிருந்து ஒன்று வரை எண்ணிக் கொண்டே இறங்குவதை இரண்டு முறை செய்யலாம்.)

இப்பொழுது நீங்கள் உங்களுக்கு மிகவும் பிடித்தமான, மிக அழகான, மிக இனிமையான ஒரு இடத்துக்கு வந்து விட்டதை உணருங்கள். அந்த இடம் உங்கள் குழந்தைப் பருவத்தைக் கழித்த இடமாகவோ அல்லது உங்கள் விடுமுறை நாள்களில் செல்லும் இடமாகவோ அல்லது ஒரு கற்பனை இடமாகவோ கூட இருக்கலாம். மெதுவாக உங்களைச் சுற்றியுள்ள ஒவ்வொரு பொருளையும் பாருங்கள். மிருதுவாக அவற்றைத் தொட்டுப் பாருங்கள். சுற்றிக் கேட்கும் இனிமையான ஒலி, ஒருவிதமான நறுமணம் ஆகியவற்றை உணருங்கள். இந்த அனுபவம் மனக் கண்முன் தெளிவான உயிரோட்டமுள்ள காட்சியாகட்டும்.





இப்பொழுது, உங்கள் குறிக்கோளைக் கற்பனை செய்யத் தொடங்கலாம். அந்தக் குறிக்கோள் கற்பனையில் காட்சியாகவோ, செயலாகவோ அல்லது வார்த்தை வடிவாகவோ இருக்கலாம். இதைப் பலமுறை செய்யவும்.

பிறகு, அந்த குறிக்கோள் முழுமை அடைவதைப் பல நிலைகளாக்கி, ஒவ்வொரு நிலைக்கும் சென்று, அந்த ஒவ்வொரு நிலை தரும் அனைத்து உணர்வுகளையும், அமைதியாக, முழுமையாக அனுபவிக்கவும்.

இதில் மிக முக்கியமானது, பயிற்சி பயன் கொடுக்க, நாம் உபயோகிக்கும் அனைத்து வார்த்தைகளும் நேர்மறையானவையாக இருக்க வேண்டும்.

பயிற்சி முடிந்தவுடன், ஒன்றிலிருந்து பத்து வரை எண்ணிக் கொண்டே, "மிக உற்சாகமாக, சந்தோசமாக இருக்கிறேன்" என்று கூறிக் கொண்டே கண்களை மெதுவாகத் திறக்கவும்.

எம்மில் பலருக்கு அலாரம் அடிக்கும் முன்னே அல்லது அடித்து முடிக்கும் முன்னர் எழும் பழக்கம் இருக்கக்கூடும். அதேபோல் பயிற்சி ஆரம்பிக்கும்போது எமது மனத் துக்குள் குறிப்பிட்ட நிமிடப் பயிற்சி என்று சொல்லி விட்டால் போதும். எமது உடலில் உள்ள 'பயோகிளாக்' அதைத் தானே 'செற்' செய்து கொள்ளும். அந்த நேரம் முடிந்ததும் தானாகவே பயிற்சியிலிருந்து நீங்கள் வெளியேறுவதை உணர்வீர்கள்.

ஆரம்ப காலத்தில் இந்தப் பயிற்சி தனியான - அமைதியான இடத்தில் செய்ய ஆரம்பித்து, பின்னர் அதனை நாம் பயணம் செய்யும்போது கிடைக்கும் நேரத்திலோ, வேலையின் இடையில் கிடைக்கும் சில நிமிடங்களிலோ கூடச் செய்யலாம். சில நிமிடங்கள் கண்ணை மூடிச் செய்யும் பயிற்சி பொதுவாக மற்றவர்கள் பார்வையிலும் கவனிப்புக்குரியதாகாது. சம தரையில் படுத்துக் கொண்டு, கண்களை மூடி உடலின் ஒவ்வொரு பகுதிக்கும் கவனம் செலுத்துதல் மற்றும் அதை அன்பாக நேசிப்பதாக உணர்வது என்பவை போன்ற சுயமனோவசிய பயிற்சி ஆரோக் கியமான வாழ்க்கைக்கு மிகவும் உதவியாக இருப்பதால், பல யோகா மையங்களில் இப்பொழுது இது பயிற்றுவிக்கப்படுகிறது. இந்த எளிய பயிற்சி மூலம் மிகப் பெரிய வெற்றி அடைகிறோமோ.. இல்லையோ, விரக்தி, மன அழுத்தம் மற்றும் மனச் சோர்வு இல்லாத ஒரு வாழ்க்கையை முழுமையாக, அதே சமயம், பிறரைக் காயப்படுத்தாத வகையில், சந்தோசமாக வாழலாம்.

# வேலணை பிரதேச சபை
## 2016 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணைப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், வாகனத் தரிப்பிடங்கள், சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றை 01.01.2016 தொடக்கம் 31.12.2016 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி:- 13.11.2015 தொடக்கம் 30.11.2015 பி.ப.3.00 மணிவரை.

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 02.12.2015 மதியம் 12.00 மணிவரை.

கேள்வி திறக்கும் திகதி :- 02.12.2015 பிற்பகல் 12.30 மணி.

| இல | சந்தை பெயர் | மாதாந்த வாடகை | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT) தவிர்த்து | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் (VAT) தவிர்த்து | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (VAT) தவிர்த்து |
|---|---|---|---|---|---|
| 1 | வேலணை துறையூர் மீன் சந்தை (புதிய கட்டடம்) | - | 2000.00 | 10,000.00 | 220,000.00 |
| 2 | வேலணை செட்டிபுலம் மீன்சந்தை | - | 500.00 | 5000.00 | 39,748.50 |
| 3 | வேலணை அம்பிகை நகர் மீன்சந்தை | - | 500.00 | 5000.00 | 12,100.00 |
| 4 | சரவணை மீன்சந்தை | - | 500.00 | 5000.00 | 7260.00 |
| 5 | புங்குடுதீவு மடத்துவெளி மீன்சந்தை | - | 2000.00 | 10,000.00 | 390,611.10 |
| 6 | நயினாதீவு வடக்கு மீன்சந்தை | - | 500.00 | 5000.00 | 27,500.00 |
| 7 | நயினா தீவு தெற்கு மீன்சந்தை | - | 500.00 | 5000.00 | 27,500.00 |
| 8 | அல்லைப்பிட்டி மீன்சந்தை | - | 500.00 | 5000.00 | 58,300.00 |
| 9 | வேலணை சாட்டி கடற்கரை வாகனத் தரிப்பிடம் | - | 2000.00 | 10000.00 | 209,000.00 |
| 10 | வேலணை சாட்டி சிற்றுண்டிச்சாலை | - | 500.00 | 5000.00 | 7150.00 |
| 11 | புங்குடுதீவு மாட்டிறைச்சிக்கடை | - | 2000.00 | 10000.00 | 126,500.00 |
| | வேலணை துறையூர் மொத்த மீன் சந்தையில் அமைந்துள்ள கடைகள் | | | | |
| 12 | கடை இல.2- கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை | - | 500.00 | 5000.00 | 31,600.00 |
| 13 | கடை இல 4 - கருவாட்டுக் கடை | - | 500.00 | 5000.00 | 34,760.00 |
| 14 | கடை இல 5 - கருவாட்டுக்கடை | - | 500.00 | 5000.00 | 34760.00 |
| 15 | கடை இல 6 - கோழிக்கடை | - | 500.00 | 5000.00 | 33,715.00 |
| 16 | கடை இல 7 - வேலணை ஆட்டிறைச்சிக்கடை | - | 500.00 | 5000.00 | 33,770.00 |
| 17 | வேலணை 06 ஆம் வட்டாரம் பொதுச்சந்தை - மரக்கறி / மீன் | - | 500.00 | 5000.00 | 32,400.00 |
| 18 | வேலணை 06 ஆம் வட்டாம் பொதுச்சந்தை - கருவாட்டுக்கடை | 750.00 | 500.00 | 5000.00 | 11,000.00 |
| 19 | வேலணை 06 ஆம் வட்டாரம் பொதுச்சந்தை - ஆட்டிறைச்சிக்கடை | 750.00 | 500.00 | 5000.00 | 11,000.00 |
| 20 | வேலணை 06 ஆம் வட்டாரம் பொதுச்சந்தை - சிற்றுண்டிச்சாலை | 1750.00 | 500.00 | 5000.00 | 24,000.00 |
| 21 | வேலணை 06 ஆம் வட்டாரம் பொதுச்சந்தை - கோழிக்கடை | 750.00 | 500.00 | 5000.00 | 16,000.00 |

* கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை ''செயலாளர் வேலணை பிரதேச சபை வேலணை'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டுத் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதி'' பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்'' எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
* கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்
* உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்த்திரம் வழங்கப்பட மாட்டது. படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக் கப்படும்.
* ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
* கேள்விப்படிவக்கட்டணம் கேள்வித்தொகை என்பவற்றிற்கு 11% (Vat) பெறுமதி சேர்வரி செலுத்தப்படல் வேண்டும்
* கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிகைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள் வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு
* தெரிவு செய்யப்படும் இறைச்சிக் கடைக்குரிய கேள்விக்காரர்கள் கேள்வித்தொகையின் 2/3 பகுதியையும் ஏனைய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும் 2015.12.07 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.
* கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வி யாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்க லாம்.
* புங்குடுதீவு மடத்துவெளி மீன்சந்தையில் நயினா தீவிலிருந்து கொண்டுவரப்படும் மீன்களுக்கு சந்தைவரி தவிர்த்தே அறவிடப்பட வேண்டும்.
* சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்குப் பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இட வேண்டும்.
* வாகனத் தரிப்பிடங்களில் வேலணைப் பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களையே பற்றுச் சீட்டை வழங்கி அறவிட வேண்டும். மேலும் இலங்கைப் போக்குவரத்துச் சபை அரச முத்திரை பொறிக்கப்பட்ட வாகனங்கள் தவிர்த்தே வாகனத் தரிப்பிடக் கட்டணம் அறவிட செய்யப்பட வேண்டும்.
* கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்கள் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மு.இராஜகோபால்
செயலாளர்
பிரதேச சபை, வேலணை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
13.11.2015

அன்னையின் மடியில்
09 ★ 04 ★ 1938



அம்பாளின் அடியில்
25 ★ 10 ★ 2014

அமரர் திரு. **சின்னக்குட்டி சிதம்பரநாதன்**
(இளைப்பாறிய பொலிஸ் பரிசோதகர் CID)

காலங்கள் கரையலாம் - ஏன்
கதிரவன் கூட உதிக்க மறுக்கலாம்
காலத்தால் அழியாத காவியமாய் - எம்மனதில்
கலந்துவிட்ட எம் காவிய நாயகனே....

உறவுகள் எப்படி என்று உணர்ந்து பாருங்கள்
ஊர்போற்ற வாழ்ந்து காட்டுங்கள்
உழைப்பு என்பது உள்ளவரை உயர்வு - என்றும்
உண்டு என்னும் தத்துவத்தை உணர்த்திய எம் தந்தையே....

ஆண்டு ஒன்று கடந்து விட்டது - அப்பா
உம் நாமம் எம் நாவில் மந்திரமாய் ஆகிவிட்டது
கண்முன் தோன்றி வாழ்ந்த எம் கடவுளே - எம்மை
கண்ணீரில் ஆழ்த்திய காரணம் என்ன.....

"மண்ணில் தோன்றினால் மரணம் மறுக்க முடியாது ஆனால்
உம்மில் கொண்ட உவகை அதை உணர மறுக்கிறது"

குடும்பத்தினர்



# கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயம்
## முக்கிய அறிவித்தல்

கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயத்தின் வேள்விப் பொங்கல் சம்பந்தமான முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு ஆலயத்தில் இடம்பெற உள்ளது. இக்கலந்துரையாடலில் வைரவப் பெருமானின் அடியவர்கள் அனைவரும் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தர்மகர்த்தாவும் பரிபாலன சபையும்
கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயம்
கருகம்பனை,
காங்கேசன்துறை.

(88058)(12.15)

# University of Jaffna, Sri Lanka
## FACULTY OF SCIENCE
## WALK -IN – INTERVIEW

Walk in interview for appointment to the **Post of Temporary Lecturer/ Temporary Instructor in Computer Science** will be held on **19.11.2015 at 11.00 a.m** at the Board Room of this University.

Candidates who have the required qualifications are invited for a Walk in Interview, with self prepared applications for the above post.

Note: Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Instructor.

| POST | SALARY SCALE |
|---|---|
| .Temporary Lecturer | Rs. 26,020/= P.m. (Fixed) |
| .Temporary Demonstrator/Instructor | Rs. 21,370/= P.m. (Fixed) |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid

Interested candidates with the required qualifications are expected to be present for the interview in time with relevant certificates, NIC and **self prepared application.**

**Registrar**
University of Jaffna
12.11.2015

(C/20039)(10.15)

## வழிகாட்டல் கருத்தரங்கு

அதிபர் தரம் 3க்கான ஆட்சேர்ப்புப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள வட மராட்சி வலயத்துக்குட்பட்ட ஆசிரியர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத் தரங்கு நாளை சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் வலய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

# நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாக ஒழிப்பேன்

## சோபித தேரரின் இறுதி நிகழ்வில் மைத்திரி சூளுரை


சமூகநீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரரின் பூதவுடல் நேற்று தீயுடன் சங்கமமான போது....

கொழும்பு, நவ.13

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாது செய்வதற்குத் தன்னால் முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தனக்குள்ள அதிகாரங்களைக் கைவிட்டு ஜனநாயக சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்புவது இன்றிய மையாத ஒன்று என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மறைந்த கோட்டை நாகவிகாரையின் விஹாராதிபதி மாதுளுவாவே சோபித தேரரின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை நாடாளு மன்ற மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் தனது உரையில்,

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குமாறும், தேர்தல் முறைமையை மாற்றி அமைக்குமாறும் சோபித தேரர் வலியுறுத்தி வந்தார்.

விரைவில் புதிய தேர்தல் முறைமை ஒன்று அறிமுகம் செய்யப்படும் .

சோபித தேரர் பாடுபட்ட நியாயமான சமுதாயத்தை உருவாக்க, முடிந்தளவு நடவடிக்கைகளை மேற்கொள்வது அன்னாருக்குச் செய்யும் மிகப்பெரிய உபகாரம் மற்றும் கௌரவமுமாகும்.

சோபித தேரர் எதிர்பார்த்தது போன்று இந்த நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கும் நியாயமான சமுதாயத்தை உருவாக்குவதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என ஜனாதிபதி கூறினார். (வ)

# பொலிஸார் குறித்த முறைப்பாடுகளை அறிவிப்பதற்கு தொலைபேசி இலக்கம்

## வெளியிட்டுள்ளது பொலிஸ் ஆணைக்குழு

கொழும்பு, நவ.13

பொலிஸாரின் நடவடிக்கைகளில் காணும் குறைகள் தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைக்க 24 மணி நேரமும் செயற்படும் தொலைபேசி இலக்கமொன்றை தேசிய பொலிஸ் ஆணைக்குழு அறிமுகம் செய்துள்ளது.

இந்த இலக்கத்துடன் தொடர்புகொண்டு பொலிஸார் தொடர்பிலான முறைப்பாடுகளை முன்வைக்கு மாறு பொதுமக்களிடம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் என். ஆரியதாச குரே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொதுமக்களுக்குப் பொலிஸாரினால் ஏற்படும் அசௌகரியங்கள் தொடர் பிலான முறைப்பாடுகளை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமையப் பெற்றுள்ள ஆணைக்குழுவின் காரியாலயத்துக்கு வருகை தந்து முன் வைக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இலங்கையின் எட்டு மாகாணங்களில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் ஆணைக்குழுவின் காரியால யங்களிலும் மக்கள் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் எனவும் செயலாளர் கூறியுள்ளார்.

பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை 0710361010 எனும் தொலைபேசி இலக் கத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம் எனவும் ஆணைக் குழு பொதுமக்களைக் கேட்டுள்ளது. (வ)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம். நவ.13

கைதடி குருசாமி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் பாடசாலை முதல்வர் ப.செல்வநாயகம் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற வுள்ளது . இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகத் தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.சிவநாதன் , சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழகத் தின் சித்த மருத்துவத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலைச் செல்வி சௌந் தரராஜன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக சிரேஷ்ட வருமானவரி ஆலோசகர் ராஜினி சிவ ஞானப் பிரகாசமும் கலந்து சிறப்பிக் கவுள்ளனர். (கு)

## ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி

கொழும்பு, நவ.13

அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனைப் பெறுமதி 144 ரூபாவாக அதிகரித்துள்ளது. ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்து செல்கின்றது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயப் பெறுமதி விலை நிர்ணயத்திற்கமைய அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனைப் பெறுமதி 144.17 என குறிப்பிடப் பட்டுள்ளது.

கடந்த 10 மாத காலப்பகுதியில் டொலரின் பெறுமதி 11 ரூபாவினால் அதிகரித்துள்ளதாக பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதன்மூலம் ரூபாவின் பெறுமதி பெருமளவில் குறைவடைந்து செல்வதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (வ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி லூர்த்தம்மா பத்திநாதர்

(இரணைப்பாலை)


சில்லாலையைப் பிப்பிடமாகவும் இரணைப்பாலையை வதிவிடமாகவும்
கொண்ட திருமதி லூர்த்தம்மா பத்திநாதர் 11.11.2015 இறையடி சேர்ந்தார்.
இவர் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை சபினம்மா தம்பதியின
ரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான இராயப்புஎலிசபேத் தம்பதியினரின்
மருமகளும் தம்பிஐயா பத்திநாதர் (ஓய்வுபெற்ற கமநல விஸ்தரிப்பு சேவையா
ளர்) அவர்களின் அன்பு மனைவியும், புனிதராஜா (கொழும்பு), புனிதராணி,
புனிதசீலன் (டென்மார்க்), புனிதாதேவி (ஆசிரியை C.C.T.M.S
வித்தியாலயம். வவுனியா) புனிதநாயகம் (சட்டத்தரணி, வவுனியா)
ஆகியோரின்பாசமிகு தாயாரும், மறிஸ்ரெல்லா (கொழும்பு), காலஞ்சென்ற
அடைக்கலதாஸ், மேரிகொன்சி (டென்மார்க்) காலஞ்சென்ற பிறேம்றாஜ்,
மினோ (சட்டத்தரணி, வவுனியா) ஆகியோரின் அருமை மாமியாரும்,
பிரவின் ராஜ், லினோஜா (கொழும்பு), ரெஜினோல்ட் (கனடா), நிக்சன்
(கனடா), தரிசன் (லண்டன்), சயந்தினி, ஸ்ரீபன் (சட்டபீடமாணவன்,
யாழ்பல்கலைக் கழகம்), டிலோனா ஷல்மி, றொகித், ஜெரமி (டென்மார்க்),
ரிஷோக், லினிசன், கிளனோ, பி(F)ரங்கா, நிர்மலா, சுதா, ஷ்யாம்
ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், டிரோனின் பூட்டியும் காலஞ்சென்ற
திரேசம்மா, காலஞ்சென்ற செபதேஸ் மரியதாஸ், பிலோமினம்மா,
இராசரத்தினம், பற்றிமா புஸ்பம், ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (14.11.2015) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பற்றிமா அன்னை ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டு இரணைப்பாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பத்திநாதர் அன்ரன்
புனிதநாயகம் (மகன்)
சட்டத்தரணி, வவுனியா.

### வல்லிபுரம் வைரமுத்து (அப்பாண்ணை)



கொல்லன் கலட்டி கிளானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் வைரமுத்து நேற்று 12.11.2015 வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் பத்மாசினி (ஆசிரியை யா/குட்டியப்புலம் அ.த.க பாடசாலை), தர்சினி (உதவித் திட்டமி டல் பணிப்பாளர், ஊர்காவற்துறை பிரதேச செயலகம்) ஆகியோரின்அன்புத் தந்தையும் குலநாதன் (யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையம் சுன்னாகம்) அவர்களின் அன்பு மாமனாரும் குழந்தைவேல் காலஞ் சென்ற பசுபதி மற்றும் சோமசுந்தரம் காலஞ்சென்ற நாகராஜா மற்றும் பூரணம், பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2015) வெள்ளிக் கிழமை பிற்பகல் 1 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(66070) தகவல் : குடும்பத்தினர்

### ஆரோக்கியநாதர் டீன்ஸ் ராஜ்குமார்

(றெக்ஸ்சன்- BBA)



யாழ். வசாவிளான் சென் ஜேம்ஸ் வீதியைப் பிறப்பிடமாகவும், இருபாலை, உடுவில் ஆகிய இடங்களை வசிப்பிடமாக வும், கனடாவை தற்காலிக வதிவிடமாக வும் கொண்ட ஆரோக்கியநாதர் டீன்ஸ் ராஜ்குமார் 07.11.2015 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஆரோக்கியநாதர்-மேரிபுஸ்பம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற அருணோதயராஜா மற்றும் கமலா தேவி தம்பதியரின் அன்பு மருமகனும், செரின்சசி மெலோனி அவர்களின் பாசமிகு கணவரும், டீனுஜா, ரெஷானா ஆகியோ ரின் அன்புத்
தந்தையும், ஜேம்ஸ் ராஜ்குமார் (றோகன்- நோர்வே), மரிஸ் நியூட்டன்
(ஜேர்மனி), பிறின்சன்(இலங்கை-ஐடியல் பினான்ஸ் யாழ்ப் பாணம்)
ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆல்டன், ஷிஜாரா (கனடா)
ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டஸ்மெரினா(நோர்வே),
ரூபி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அன்ரன்(கனடா),
றொணி(இலங்கை), றொஷான் (இலங்கை), றொக்ஸி(கனடா), டெல்சி
(சுவிஸ்), பிரிந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு அத்தா னும்,
டார்லிகுமார் (கனடா), தவராசா(சுவிஸ்), யூட்(லண்டன்), சித்திரா
(கனடா), பிரியா (ஆசிரியை-இலங்கை), ஷாமினி (ஆசிரியை-
இலங்கை) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், றோஸ்மன், றொன்
ஷன், றொசினா, (நோர்வே), பியூலா, ஜொலன்ரா, அகஸ்ரின் (ஜேர்
மனி), ஷரரோன், ஷெவோன், ஷாரா(கனடா), பிறிஜோன், பிறையன்,
பிரியானா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.11.2015) வெள்ளிக்கிழமை , பி.ப
05:00 - 09:00 வரை Demarco Funeral Home, 3725 Keele Street, Toronto,
Ontario, M3J 1N4 கனடாவில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, 14.11.2015
சனிக்கிழமை மு.ப 11.45 மணியளவில் Demarco Funeral Home, 3725
Keele Street, Toronto, Ontario, M3J 1N4 கனடாவில் நல்லடக்கம்
செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய றோட்,
கோப்பாய் தெற்கு,
இருபாலை.

(66027)
(10.17)

தகவல்: குடும்பத்தினர்.
021 223 0143
சகோதரன் 077 492 3785

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி அகிலா மனோகரன் அவர்களது
அன்புத் தந்தை
**முத்து திருநாவுக்கரசு**
அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும
அன்னாரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப
துடன் அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த. க.
பாடசாலை

தோற்றம் 21.04.1941 மறைவு 08.11.2015

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மை நாகலிங்கம்



பொல்வத்தை இளவாலையை பிறப்பிடமாவும் அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை நாகலிங்கம் 12.11.2015 அன்று அவுஸ்திரேலியாவில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை - பொன்னு தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் மகாலிங்கம், இந்திரலிங்கம், சிவலிங்கம், விவேகானந்தராணி, விபுலானந் தராணி, விஜயானந்தராணி, முருகானந்தராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ் சென்றவர்களான வினாசித்தம்பி, ராணி, இந்தினம் மற்றும் சுதாமதி, நிலாமதி, யோகமதி, ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொல்வத்தை இளவாலை
T.P : 021 221 1981


தகவல்: இ.கஜமுகன்
(மருமகன்)



ஐ.நாவின் காணாமற்போனோர் தொடர்பான செயற்குழு நேற்று கிளிநொச்சிக்கு வருவதை முன்னிட்டு காணாமற்போனோரின் உறவினர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட போது.. (ரி 3)

# 51 பயங்கரவாத செயற்பாடுகளில் கே.பிக்குத் தொடர்பு இல்லை

## நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் அறிவிப்பு



கொழும்பு, நவ.13

விசாரணை செய்யப்பட்ட 51 பயங்கரவாத நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச பிரிவுத் தலைவர் குமரன் பத்மநாதன் எனப்படும் கே.பி. தொடர்புபட்டிருக்கவில்லை என மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு நேற்று சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதனை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உத்தரவிடக் கோரி, ஜே.வி.பியின் விஜித ஹேரத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜயந்த ஜயசூரிய இதனை நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

கே.பிக்கு எதிராக ஜே.வி.பி தாக்கல் செய்துள்ள 192 குற்றச்சாட்டுக்களில் விசாரணை செய்யப்பட்ட 51 பயங்கர வாத நடவடிக்கைகளில் தொடர்பு பட்டிருக்கவில்லை என குறிப் பிட்டுள்ள அவர், 51குற்றச் சாட்டுக்கள் சம்பந்தமாக, நாட்டின் அனைத்து பிரதிப் பொலிஸ் மாஅதிபர்கள் வாயிலாகவும் அறிக்கை பெறப்பட்டதாகக் கூறினார். பெறப்பட்ட அறிக்கைக ளின் படி, கே.பிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு எந்தவித சாட்சிகளும் காணப்படவில்லை. அத்துடன் கே.பிக்கு எதிராக பயங்கரவாத தடுப்பு பிரிவினர் புதிதாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 3ஆம் திகதிக்கு ஒத்தி வைத்த மேன்முறையீட்டு நீதிமன்றம், தற்போது மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் அறிக்கையை அடுத்த தவணைக்கு ஒரு வாரம் முன்னதாக மன்றில் சமர்பிக்குமாறும் கட்டளையிட்டது. (வ)

# கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை 4ஆவது ஆண்டு நிறைவு ஞாயிறன்று

யாழ். வினின் கிருஷ்ணா அற நெறிப் பாடசாலையின் 4 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வின் பொறுப் பாளர் கந்தையா சுசீந்திரன் தலைமையில் நடை பெறவுள்ளது. இதில் முதன்மை விருந்தினராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன், வடக்கு மாகாண சபைத் தவிசாளர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் பங்கேற்பர்.

கதிர்காமக் கந்தன் திருவுருவத் திரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாச்சாரிய சுவாமிகள் திறந்து வைப்பதுடன் ஆசியுரை வழங்குவார். யாழ். சின்மயாமிசன் பிரமச்சாரி ஜாக்ரத் சைதன்யா சுவாமிகளின் ஆசியுரையும் இடம் பெறும்.

மாணவர்களின் கலை நிகழ்வுகளுடன் பரிசில் வழங்கலும் இடம்பெறும். (த)

# தெற்குக் கடலில் இன்று மர்மப்பொருள் விழும்

இலங்கையின் தெற்கு கடற்பரப்பின் 100 கிலோ மீற்றர் தொலைவில் இன்று விண்ணில் இருந்து விழவுள்ளதாக கூறப்படும் டபிள்யூ.ரி1190எப் என பெயரிடப்பட்டுள்ள மர்மப் பொருள் தொடர்பில் ஆராய்வதற்கான குழுவொன்று தங்காலை சென்றுள்ளது.

இன்று முற்பகல்11.45 மணியளவில் இந்த மர்மப் பொருள் இலங்கையின் தெற்கு கடற்பகுதியில் விழவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.


யாழில் ஓர் புதிய உதயம்
NEW MATHS COLLEGE
2016 இற்குரிய தரம் 6இற்கான தமிழ் ஆங்கில மூலமான கணித பாட வகுப்பு நாளை (14.11.2015) சனிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் ஆரம்பமாகும்.
இடம்:-158, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(Science hall இற்கு அருகில்)
நிர்வாகியும் கணித ஆசிரியரும்
K. உமாகரன்
குறிப்பு:- தரம் 6 11 வரையான தமிழ், ஆங்கில மூலமான கணித வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1210
சீட்டிழுப்பு திகதி 2015.11.12
வெற்றி இலக்கங்கள்
05 12 53 56 F
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 34,516,920/=

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 421
சீட்டிழுப்பு திகதி 2015.11.12
வெற்றி இலக்கங்கள்
19 35 36 70 I
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 41,818,080/=

தேவை
வெள்ளவத்தையில் இயங்கி வரும் கடை ஒன்றுக்கு யாழ். இளைஞர்கள் தேவை. O/L படித்தவர்களுக்கும் கணினி அறிவுள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 077 340 6822 (சீ/19977)(11,15)

தேவை
ஜீவன் ஸ்ருடியோவில் வீடியோ எடுக்கத் தெரிந்தவர்கள் வேலைக்கு தேவை. மாத சம்பள அடிப்படையில் பழக விரும்புவோரும், யாழ் மாநகர எல்லைக்குள் இருப்பவரும் தொடர்பு கொள்ளவும்.
JEEVAN STUDIO - JAFFNA
No. 8B, 1st Floor, Cargills Square, jaffna.
www.jeevanstudio.com - 077 978 5717

வேலை வாய்ப்பு
- கணினி ரைப்பிங் (தமிழ்,ஆங்கிலம்)
- புத்தகம் கட்டுநர்
- உதவியாளர்
- பழக விரும்புபவர்கள்
யாழில் கொழும்பு பிறிண்டேர்ஸ்
யாழ் இந்துக் கல்லூரி முன்பாக
077 1974 875

ALL OUT
Pest control service

கறையான் தொல்லையா?
உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்து கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்
தொடர்புகளுக்கு:
ந. ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200

உ
"பிச்சை எடுத்தும் கற்பனை கல்"
யா/வட்டு இந்துக் கல்லூரி
சித்தன்கேணி
தொழிநுட்ப பீடம் திறப்பு விழா
காலம் : 14.11.2015 சனிக்கிழமை காலை 10.00 மணி
தலைவர் : திரு.நா.தனபாலசிங்கம் (கல்லூரி அதிபர்)
பிரதம விருந்தினர்
திருமிகு வே.இராதாகிருஷ்ணன் அவர்கள் (கௌரவ கல்வி இராஜாங்க அமைச்சர்)
திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் (கௌரவ சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர்)
சிறப்பு விருந்தினர்
திரு. இ. இரவீந்திரன் அவர்கள் (செயலாளர்,கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடமாகாணம்)
கௌரவ விருந்தினர்
திரு. செ. சந்திரராசா அவர்கள் (கல்விப் பணிப்பாளர்-வலிகாமம் கல்வி வலையம்)
ஆசியுரை
பிரம்மஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள். (சிவன் தேவஸ்தானம், சித்தன்கேணி)
* நிகழ்ச்சி நிரல் *
- விருந்தினர்களை அழைத்துவருதல்
- மங்கல விளக்கேற்றல்
- இறை வணக்கம்
- ஆசியுரை
- தொழில் நுட்ப பீடம் திறந்து வைத்தல்
- வள்ளியம்மை மண்டபத்தில் ஒன்று கூடல்
- வரவேற்புரை:- திரு. பா.சுதாகரன் (தலைவர் பழைய மாணவர்சங்கம்)
- தலைமையுரை
- விருந்தினர் உரை
- நன்றியுரை திரு.இ. கைலைவாசன் (தலைவர், ஆசிரியர் கழகம்)
- கல்லூரி கீதம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
யா/வட்டு இந்துக் கல்லூரிச் சமூகம்

பருத்தித்துறையில் மாபெரும் இலவச வழிகாட்டல் கருத்தரங்கு
தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தினால் க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கு நடத்தப்படும் 22 ஆவது இலவச வழிகாட்டல் கருத்தரங்கு
இடம் : யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
காலம் : 14.11.2015, 15.11.2015 காலை 8.00 மணிமுதல்
யாழ். மாவட்டத்தின் முன்னணி ஆசிரியர்களால் நெறிப்படுத்தப்படவுள்ளது
தமிழ் : திரு. இல. நிசாந்தன் (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
கணிதம் : திரு. P.R. கயூரன் (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி)
வரலாறு : திரு. R.S. சந்திரன் (ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)
ஆங்கிலம் : திரு. T. லெஸ்லி (ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)
விஞ்ஞானம்: திரு. A. கஜேந்திரன் (ஆசிரியர், கிளி/முருகானந்தா கல்லூரி)
மாதிரி வினாத்தாள்கள், பயிற்சிக் கையேடுகள் இலவசமாக வழங்கப்படும்
அனுசரணை:- உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பிணை கிடைத்த

சுப்பிரமணியம் ரவிச்சந்திரன், விஜயகுமார் கேதீஸ்வரன், தியாகராஜா ரமேஸ்வரன், சங்கரலிங்கராஜா குசாந்தன், துரைராஜா அமுதகரன், பா.றெஜினோல்ட், பாக்கியநாதன் அலன் அன்ஜோல், மகாதேவன் கிருபாகரன், பாலசுந்தரம் சதானந்தன், குமாரசாமி லிங்கேஸ்வரன், கந்தப்பொடி தர்சன், செல்வநாயகம் ஜோன்ஸன் சுரேஸ்குமார், சிவக்கொழுந்து சங்கரன், காளிமுத்து மகேந்திரன், கோ.குகதாஸன், பொன்னுத்துரை கணேசன், குணரத்திரம் விஜயகுமார், கருணாநிதி கங்காதரன் ஆகியோரே பிணையில் விடுவிக்கப்பட்டவர்களாவர். (த-5)

## கறுப்புத்துணி

உறவினர்கள், தமது காணாமற்போன பிள்ளைகளைக் கண்டறிவதற்கு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் இந்த மௌனப் போராட்டம் நடைபெற்றது.

அதன் பின்னர், பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா செயற்குழு நடத்திய விசாரணையில் பங்குகொண்டு தமது உறவினர்கள் காணாமற்போனமை குறித்த சாட்சியங்களைப் பதிவு செய்ததுடன், மனு ஒன்றையும் கையளித்தனர். (த-106-101)

## வலி. வடக்கின்

இராணுவத்தினர் தொடர்ந்தும் நிலைகொண்டிருந்தனர். இதனை விடுவிக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக அழுத்தம் கொடுக்கப்பட்டு வந்தது.

நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறுவதற்கு முன்பதாக, குறித்த காணிகளை நேரடியாகப் பார்வையிட்டிருந்த மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், குறித்த பிரதேசங்களை விடுவிக்குமாறு இராணுவத்தினரிடம் கோரியிருந்தார். இது தொடர்பில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாநாட்டில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதனை வலியுறுத்தியிருந்தனர்.

குறித்த காணிகளை விடுவிப்பதற்கான இணக்கத்தை இராணுவத்தினர் இரண்டு மாதங்களுக்கு முன்னரே தெரியப்படுத்தியிருந்தனர். இவ்வாறானதொரு நிலையிலேயே குறித்த காணிகள் நேற்றைய தினம் விடுவிக்கப்பட்டுள்ளன.

சாந்தைச் சந்தியிலுள்ள நூறு மீற்றர் நீளமான வீதி, ஒட்டகப்புலம் பகுதியில் அமைந்துள்ள றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, ஒட்டகப்புலம் - வசாவிளான் இடையேயுள்ள சேமக்காலை வீதி மற்றும் வறுத்தலைவிளானில் உள்ள வீட்டுத் திட்டத்தின் ஒரு பகுதி என்பனவே நேற்றைய தினம் விடுவிக்கப்பட்டுள்ளன. (த-5-101)

## தாயகத்தில்

தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யவேண்டும் எனக் கோரி கடந்த 8 ஆம் திகதி முதல் சிறைச்சாலைகளில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களது போராட்டத்துக்கு ஆதரவாகவும், தமிழ் அரசியல் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியும் இன்று வடக்கு - கிழக்கு முழுவதும் மாபெரும் கடையடைப்பு - வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்குக் கட்சி பேதமின்றிச் சகல தரப்பினரும் தமது ஆதரவை வழங்கியிருந்தனர். வடக்கு மாகாண சபையும் இன்றைய போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தது.

இன்றையதினம் சகல வர்த்தக நிலையங்களையும் மூடி, பொதுப் போக்குவரத்துச் சேவைகளை நிறுத்தி முழுமையான போராட்டம் நடத்தப்படவுள்ளது. தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட யாவும் இன்றைய தினம் மூடப்பட்டு ஆதரவு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மருத்துவ - அவசர சேவைகள் மாத்திரம் தடையின்றி இயங்க அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## நம்பிக்கையை

காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா செயற்குழு நேற்றைய தினம் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களுக்குப் பயணத்தை மேற்கொண்டிருந்தது. இதன்போது யாழ்ப்பாணத்தில் நல்லூரில் அமைந்துள்ள ஐ.நா. முகவர் நிறுவனத்தில் வைத்து, காணாமற்போனோரின் உறவுகளிடம் அவர்கள் சாட்சியங்களைப் பதிவு செய்தனர்.

காணாமற்போனமை தொடர்பிலான பல்வேறு விவரங்களையும் அவர்கள் கேட்டுப் பதிவு செய்தனர். இதன் பின்னர், அங்கு குழுமியிருந்த காணாமற்போனோரின் உறவுகளை, செயற்குழுவின் சார்பாக ரீங் பெயிங் என்பவர் சந்தித்தார்.

இதன்போது அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

உங்கள்பிள்ளைகளுக்கு-உறவுகளுக்குஎன்ன நடந்தது என்பது தொடர்பில் இலங்கை அரசு பதில் சொல்வதற்கு நாங்கள் வலியுறுத்துவோம். மனிதர்கள் என்ற முறையில் நீங்கள் நிறைய வேதனைகள், பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளீர்கள். அதே வேளை ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படை மனித உரிமைகள் என்று இருக்கின்றன. உங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டுபிடிக்க உரிமை உண்டு. நீதியைக் கேட்பதற்கும் உரிமை உண்டு.

உங்களுக்கு வழங்கப்படவேண்டிய இழப்பீடும் வழங்கப்பட வேண்டும். அதேவேளை, இவ்வாறான சம்பவங்கள் நடக்கக் கூடாது என்று கோருவதற்கும் உங்களுக்கு உரிமை இருக்கின்றது.

நீங்கள் உங்கள் நம்பிக்கையைத் தக்க வைத்துக்கொண்டு தொடர்ச்சியாகப் போராடுங்கள். மாற்றங்கள் நடைபெறலாம் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு எங்கள் இயலுமைக்கு உட்பட்ட பணிகளை நாம் மேற்கொள்வோம் என்று கூறினார். (த-5-101)

## உணவு தவிர்ப்பால்

டுள்ளனர்.

இந்த நிலையில் மகசின் சிறைச்சாலையிலிருந்து 7 பேரும், அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து 4 பேருமாக 11 பேர் மயங்கிய நிலையில் வைத்தியசாலைகளில் சேர்க்கப் பட்டுள்ளனர். அதிகாரிகளின் வற்புறுத்தலி னாலேயே அவர்கள் வைத்தியசாலைகளில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின் றது.

இதேவேளை, உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் அரசியல் கைதிகளை வடக்கு மாகாண அமைச்சர்களான த.குருகுலராஜா, பொ.ஐங்கரநேசன், ப.சத்தியலிங்கம், பா.டெனீஸ்வரன் ஆகியோர் ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## புனர்வாழ்வு

கைதிகள் மீண்டும் கடந்த 8 ஆம் திகதி முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், கடந்த 10 ஆம் திகதி மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோர் தமிழ் அரசியல் கைதிகளை மகசின் சிறைச்சாலையில் சந்தித்திருந்தனர்.

இதன்போது தமிழ் அரசியல் கைதிகள் தம்மைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்தியாவது விடுதலை செய்யுமாறு கோரியிருந்தனர். இதற்குப் பதிலளித்த மீள்குடியேற்ற அமைச்சரும், பிரதமரின் செயலாளரும், ஒவ்வொரு கைதிகளையும் தனித்தனியே ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதித் தருமாறு தெரிவித்திருந்தனர்.

இதற்கமைய தமிழ் அரசியல் கைதிகளில் பெரும்பான்மையானோர் தமது புனர்வாழ்வுக் கடிதங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, சிறைச்சாலைகள் ஆணையாளர் ஊடாக அனுப்பி வைத்துள்ளனர். ஜனாதிபதி தலைமையில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் குறித்த கடிதங்களை வைத்து, சிறைச்சாலைகள் ஆணையாளர், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளின் கலந்துரையாடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## ஏமாற்றிவிட்டார்

விவகாரத்தில் அவர்கள் நடந்துகொண்ட முறைமை நிரூபித்திருக்கிறது. எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே.

இவ்வாறு கடும் காட்டமாகக் கருத்துத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை மகஸின் சிறைச்சாலையில் நேற்றுச் சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது அரசையும் ஜனாதிபதியையும் மிகக் கடுமையாக விமர்சித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெற்கில் சிங்கள மக்கள் ஒரு மாற்றத்தை வேண்டி நின்றபோது தமிழர்களும் சேர்ந்தே அதனைச் சாத்தியமாக்கினார்கள். அதன் மூலமே மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக முடிந்தது. ஆனால் ஜனாதிபதி இன்று அதனை மறந்துவிட்டார். தான் பெற்றுக்கொண்ட பதவி மூலம் சிங்கள மக்களுக்கு நன்மைகளைச் செய்யும் அவர், தமிழ் மக்களைக் கவனிக்கத் தவறிவிட்டார். அவர்களுக்கு வழங்கிய வாக்குறுதியை - அவர்களிடம் ஏற்படுத்திய நம்பிக்கையை - காப்பாற்றத் தவறிவிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக - பொதுத் தேர்தலின்போதும் கூட- தமிழர்களுடன் காணப்பட்ட எழுதப்படாத இணக்கப்பாடுகளில் அரசியல் கைதிகளின் விடுதலையும் ஒன்று. ஆனால் இன்று அதனை ஜனாதிபதியும் பிரதமரும் நடைமுறைப்படுத்துகிறார்கள் இல்லை. தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டார்கள்.

இதனைத்தான் கடந்த காலங்களிலும் சிங்களத் தலைமைகள் ஓயாமல் செய்து வந்தன. நல்லாட்சி என்று கூறிக்கொண்டு தமிழர்களின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்த இந்த ஜனாதிபதியும் பிரதமரும்கூட, மீண்டும் இதனையேதான் செய்கிறார்கள். எந்தவொரு சிங்களத் தலைமையும் ஒருபோதும் தமிழர்களுக்குத் தீர்வைத் தரப்போவதில்லை என்ற தலைவர் பிரபாகரனின் நம்பிக்கை பொய்த்துப்போய்விடவில்லை என்பதை இப்போதும் நேரடியாகக் காண்கிறோம்.

இந்த ஜனாதிபதியும் பிரதமரும்கூட தமிழர்களை இரண்டாம் தரக் குடிமக்களாகவே நடத்துகிறார்கள். ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களுக்குப் பொதுமன்னிப்புக்கொடுக்க முடியுமாயின் ஏன் தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்புக் கொடுக்க முடியாது? ஏனென்றால் அதற்கு அவர்களுக்கு மனமில்லை. தமிழ்க் கைதிகளை விடுவித்தால் எதிரணியினர் அதனைச் சிங்கள மக்களிடம் தவறாக வியாக்கியானப்படுத்திவிடுவார்கள் என்று சப்பைக்கட்டுக் கட்டுகிறார்கள். இப்படித்தான் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் சொல்லிக்கொண்டிருந்தார். இவர்களுக்கும் அவருக்கும் வித்தியாசம் ஏதுமில்லை.

ஜனாதிபதி நினைத்தால் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்க முடியும் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாகூடக் கூறுகிறார். தான் ஜனாதிபதியானால் 12 ஆயிரம் விடுதலைப் புலிகளையும் பொது மன்னிப்பின் கீழ் விடுவிப்பேன் என்று அவர் அளித்த ஒரே வாக்குறுதிக்காகத்தான் தமிழர்கள் அப்போது அவருக்கு வாக்களித்தார்கள். மைத்திரிபால சிறிசேனவையும் அதே இணக்கப்பாட்டோடுதான் ஆதரித்தார்கள். ஆனால் அவர் ஏமாற்றிவிட்டார்.

இப்போது பிரச்சினை பூதாகரமாகி உணவு தவிர்ப்புப் போராட்டம், கடையடைப்புப் போராட்டம் என்று மீண்டும் பழைய நிலைமையை நோக்கித் தமிழர் தரப்பு நகர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இதனை ஆரம்பித்து வைத்தவர் ஜனாதிபதி மைத்திரிபாலவே. இது இப்படியே போனால் விளைவுகள் விபரீதமாகிவிடும். அதற்கு முன்பாக இதற்கு நல்லதொரு தீர்வு காணப்பட வேண்டும் - என்றார் அவர். (உ)

## கைதிகள்

யதாகவும், கைதிகளின் விடுதலையினால் தென்பகுதியில் ஏற்படும் அரசியல் குழப்பம் தொடர்பிலேயே அவர் அச்சமடைந்துள்ளதாகவும், இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட வடக்கு மாகாண அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், அமைச்சர்களான த.குருகுலராஜா, பொ.ஐங்கரநேசன், ப.சத்தியலிங்கம், பா.டெனீஸ்வரன் ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுப் பகல் 11.15 மணி தொடக்கம் 12.45 மணி வரை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பிரதானமாகப் பேசப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் மக்கள் விடுதலை முன்னணியினரைப் பொது மன்னிப்பில் விடுதலை செய்தமையினால், இவர்களையும் பொதுமன்னிப்பில் விடுதலை செய்வதற்கு எந்தத் தடையும் இருக்கப் போவதில்லை. ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் மக்கள், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற நம்பிக்கையிலேயே உங்களுக்கு வாக்களித்தார்கள். அதனை மறந்து விடவேண்டாம் என்று இதன்போது ஜனாதிபதி மைத்திரிபாலவுக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி மைத்திரி, கைதிகளை விடுவிக்கக் கூடாது என்ற எண்ணம் எதுவும் தனக்கு இல்லை என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன் புதிய அரசு அமைந்து தற்போதுதான் இரண்டு மாதங்கள் ஆகின்றன. கைதிகளின் விடுதலையில் உள்ள சட்டச் சிக்கல்கள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஆராய்ந்து வருகின்றோம். எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் பதில் வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

**முதலமைச்சர் நிதியம்**

வடக்கு மாகாண சபையினால் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட முதலமைச்சர் நிதிய நியதிச் சட்டம் அப்போதைய ஆளுநரினால் அனுமதிக்கப்படாததன் காரணமாக இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. அந்த நிதியத்தை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி சாதகமாகப் பதில் வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

**திட்டமிடலில் மாகாணத்தையும் உள்வாங்கல்**

வடக்கு மாகாணத்தில் மத்திய அரசின் அதிகாரிகள் திட்டங்களைத் தயாரித்த பின்னர் அவற்றை நடைமுறைப்படுத்துமாறு மாகாணத்துக்கு அழுத்தம் கொடுக்கின்றனர். அதில் எமக்கு வேண்டத்தகாத திட்டங்களும் இருக்கின்றன. அதனால் அதனை எம்மால் நடைமுறைப்படுத்த முடியாமல் போகின்றது. எனவே திட்டமிடல் நடவடிக்கைகளின்போது, மாகாண சபை நிர்வாகத்தையும் உள்வாங்கவேண்டும் என்று விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார்.

**காணி விடுவிப்பு**

வடக்கில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறு இந்தச் சந்திப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இராணுவத்தினரின் விவசாய நடவடிக்கைகள், வர்த்தக நடவடிக்கைகளினால் ஏற்படும் பாதிப்புத் தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இராணுவத்தினர் வசமுள்ள விவசாயப் பண்ணைகளையும் விடுவித்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கில் நியமிக்கப்பட்ட பெரும்பான்மையின விவசாய ஆராய்ச்சி உதவியாளர்கள் தென்பகுதிக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். அந்த வெற்றிடங்களுக்கு, வடபகுதியைச் சேர்ந்தவர்களை உள்வாங்க வேண்டும். அதற்கான தனியான அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பிக்குமாறு விடுத்த வேண்டுகோளை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார். அத்துடன் வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதிக்கு இதன்போது கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**நிதி உதவி தேவை**

வடக்கில் வீதி அபிவிருத்தி உள்ளிட்ட ஏனைய அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி தேவை என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்துக்கு வடக்கு மாகாணத்தினால் தேவை என்று அடையாளம் காணப்பட்ட முழுமையான நிதியை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்திய மீனவர்களின் அத்துமீறல்களினால் வடபகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. (த-5)

# தோட்டப்புற மக்களுக்கு புதிய வீடுகள் கிடைக்கும்

கொழும்பு, நவ.13
தோட்டப் புறங்களில் புதிய வீடுகளை அமைப்பதற்கான வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப் படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்துள்ள அவர் –

மலைநாட்டுப் புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சினால் கடன் மற்றும் நன்கொடை அடிப்படையில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினூடாகத் தோட்டப்புற மக்களுக்கு புதிதாகத் தனி வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த திட்டத்தில் ஆயிரத்து 877 வீடுகள் கட்ட உத்தேசித்திருந்த போதும், ஆயிரத்து 260 வீடுகள் மட்டுமே பூரணப்படுத்தப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டன. எஞ்சிய 612 வீடுகளும் பல் வேறு மட்டங்களில் கட்டட வேலை கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு வீடும் 07 பேர்ச்சஸ் காணியில் 550 சதுர அடியில் விறாந்தை, வரவேற்பறை, இரு படுக்கையறைகள், சமையலறை மற்றும் இணைந்த மலசல கூட வசதியுடன் அமைக்கப்படுகின்றன.

வீடொன்றுக்காக முழுத்தொகையாக 5லட்சத்து 15 ஆயிரம் ரூபா ஒதுக்கப்படுவதுடன் அதில் 2லட்சத்து 40 ஆயிரம் ரூபா நன்கொடையாகவும் எஞ்சிய 2லட்சத்து 75 ஆயிரம் ரூபா கடனாகவும் வழங்கப்படுகின்றது.

அந்தத் தொகையை 6லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கும், அதில் 3லட்சத்து 10 ஆயிரம் ரூபாவை நன்கொடையாகவும், 3லட்சத்து 40 ஆயிரம் ரூபாவைக் கடனாகவும் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரத்தினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப்பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது–என்றார். (த)



பதில் பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் பிரியசாத் டெப் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதிவிப்பிரமாணம் செய்துகொண்டார். ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபயக்கோனும் உடனிருந்தார். (த)

## இலங்கை-சேர்பியா இடையே இரு தரப்பு விமான சேவை

கொழும்பு, நவ.13
இலங்கை மற்றும் சேர்பியா இடையே வானோடல் அதிகாரிகளின் கலந்துரையாடல் இடம்பெற்று அதிகாரிகளின் மட்டத்தில் இரு தரப்பு விமான சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும்ஊடகவியலாளர்சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதேஅமைச்சரவைஇணைப் பேச்சாளர் ராஜித சேனா ரத்ன இதனைத் தெரிவித்துள்ளார். இதன்போது கருத்து தெரிவித்துள்ள அவர், இதனை அதிகாரம் பொருந்திய மட்டத்தில் கைச்சாத்திட்டு வலுப்படுத்தும்நோக்கிலும், தொடர்ந்து அதனை நடைமுறைப்படுத்தும் நோக்கிலும், போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல்சிறிபாலடிசில்வாவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது–என்றார். (த)

## சோபித தேரரின் வாழ்க்கை வரலாறு பாடப் புத்தகத்தில்

அமரரான வணக்கத்துக்குரிய மாதுளுவாவே சோபித தேரரின் வாழ்க்கை வரலாற்றை அடுத்த ஆண்டிலிருந்து பாடசாலை பாடப் புத்தகங்களில் சேர்த்துக்கொள்ள பிரதமர் தீர்மானித்துள்ளார்.

அவரது அர்ப்பணிப்பு, இனம், மதம் மற்றும் நாடு மீது காட்டிய ஈடுபாடு போன்றவற்றை எதிர்காலச் சந்ததியும் தெரிந்து கொள்வது முக்கியமானது என்பதால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (த-22)

## பல்கலை ஆசிரியர் சங்கமும் கடையடைப்புக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், நவ. 13
அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி இன்று முன்னெடுக்கப்படும்கடையடைப்புப் போராட்டத்துக்கு யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது.

கடையடைப்புப் போராட்டத்தில் வன்முறை ஏதும் நிகழாது பார்த்துக் கொள்ளுமாறும் அது அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை கோரி அவர்களால் மேற்கொள்ளப்படும் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் நிகழவுள்ள முழு அடைப்புப் போராட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்சங்கம்முழு ஆதரவை வழங்குகிறது.

இந்த முழு அடைப்புப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பை வழங்கும் விதத்தில் அன்றைய தினம் வகுப்புக்களை இடைநிறுத்திப் பரீட்சை தவிர்ந்த எந்தவித அலுவலக நடைமுறையிலும் ஈடுபடவேண்டாம் என யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் பல்கலைக்கழகச் சமூகத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது.

அதேவேளை, அகிம்சை ரீதியில் நிகழும் உணவுத்தவிர்ப்புக்கான முழு அடைப்புப் போராட்டத்தை அமைதியாகவும் வன் முறை ஏதும் நிகழாதும் பார்த்துக் கொள்வதோடு மிகமிக அத்தியாவசிய விடயங்களில் தளர்வுப் போக்கைக் கடைப்பிடிக்குமாறும் பொதுமக்களை வினயமாகக் கேட்டுக் கொள்வதுடன் கடந்த கால அனுபவங்களை மனதில் கொண்டு செயற்படுமாறும் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## அரசின் மதுவரி வருமானம் ஒரு கோடி ரூபா அதிகரிப்பு

கொழும்பு, நவ.13
தற்போது அரசின் மதுவரி வருமானம் மாதமொன்றுக்கு ஒருகோடி ரூபாவால் அதிகரித்திருப்பதாக நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மதுபான வரிகளைச் செலுத்தாமல் ஏய்த்து வந்த மதுபானச் சாலை உரிமையாளர்களிடம்வரிகளைஅறவிடும்கடுமையானகொள்கையொன்று நடை முறைப்படுத்தப்பட்டமையே அதற்குக் காரணம் என அந்த வட்டாரங் கள் தெரிவித்தன. இதற்கு முன்னர் அரசின் மாதாந்த மதுவரி வரு மாணம் 25 லட்சம் வரை இருந்ததாகவும், தற்போது அது ஒரு கோடியே 20 லட்சம் ரூபா வரை அதிகரித்திருப்பதாகவும் நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த-22)



# மற்றுமொரு இறுதியாட்டத்துக்கு சென்.மோரிஸ் தகுதி இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தொடரில்



யாழ்ப்பாணம், நவ. 13
இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் இரண்டாம் பிரிவில் இடம்பிடித்த அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி புள்ளிகளின் அடிப்படையில் இறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

வெலிகம யுனைற்றட் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற குறித்த தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து வெலிகம யுனைற்றட் அணி மோதிக் கொண்டது.

ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் யுனைற்றட் அணி தனது முதல் கோலைப் பதிவுசெய்ய ஆட்டம் மேலும் சூடுபிடிக்க ஆரம்பித்தது. பழிதீர்த்துக் கோல் கணக்கை சமன் செய்யும் முனைப்பில் கடுமையாக போரட்டத்திலீடுபட்டதுசென்.மேரிஸ். நீண்ட போராட்டத்துக்குப் பின்னர், முதல்பாதி முடிவடைய சில நிமிடங்களே இருந்த வேளையில் (41 ஆவது நிமிடத்தில்) பதில் கோலை விளாசியது நாவாந்துறை சென். மேரிஸ். இரு அணிகளதும் சம ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியில் இரு அணிகளதும் பின்கள வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டமையால் எந்தவொரு அணியாலும் ஊடறுத்துச் செல்ல முடியவில்லை. பந்து அங்கும் இங்குமாக அல்லோல கல்லோலப்பட்டதுதான் மிச்சம். நீண்ட போராட்டத்துக்குப் பின்னர் பின்கள வீரர்களை ஊடறுத்துச் சென்று கிடைத்த ஓரிரு வாய்ப்புக்களும் இரு அணிகளாலும் கோலாக பதியப்படாத நிலையில் 1-1 என்று சமநிலையில் முடிவு கண்டது ஆட்டம். ஆனால் புள்ளிகளின் அடிப்படையில் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது சென்.மேரிஸ். (ம-23)

## மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் நாளைய காலிறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 13
மன்னார் உதைபந்தாட்ட லீக்கினால் முதற்தர அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டங்கள் நாளை சனிக்கிழமை தாழ்வுப்பாடு ஆயர் இராயப்பு யோசேப் மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

காலை 9 மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் சின்னக்கடை கீறின்பீல்ட் அணியை எதிர்த்து சாந்திபுரம் குறோஸ்ஸார் அணி மோதவுள்ளது. மு.பகல் 11 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் சா[illegible]கட்டு கில்லறி அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யோசவாஸ்நகர் ஐக்கிய அணியை எதிர்த்து முருங்கன் பொதுசன சேவைகள் அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அடம்பன் ஐக்கிய அணியை எதிர்த்து விடத்தற்தீவு ஐக்கியம் அணி மோதவுள்ளது. (ம-23)

## கட்டாயத்தில் களமிறங்குகிறது இங்கிலாந்து இரண்டாவது ஒருநாள் ஆட்டம் இன்று



இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான நான்கு ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று அபுதாபியில் ஆரம்பமாகவுள்ளது.

ஏற்கனவே முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்றதன் காரணமாக இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறவேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்குகிறது இங்கிலாந்து. ஏனெனில் இன்றைய ஆட்டத்தையும் பாகிஸ்தான் தனதாக்கிவிட்டால் கிண்ணம் பாகிஸ்தானிடம் செல்வதற்கான வாய்ப்புக்கள் மிக அதிகம். இலங்கை நேரப்படி மாலை 4.30 மணிக்கு ஆட்டம் இடம்பெறும். (ம)



அல்ஜீரியாவில் இன்று தொடக்கம் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சர்வதேச கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பயிற்சிநெறியில் இலங்கையிலிருந்து கலந்து கொள்வதற்காக யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச்சங்கத்தினதும் வடமாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினதும் செயலாளரான சுரேஸ்குமார் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (ம-23)

## குத்துச் சண்டையில் காயமடைந்த இரத்தினபுரி மாணவி சாவு

யாழ்ப்பாணம், நவ. 13
இரத்தினபுரி சீவிலி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்த 17 மாணவி ஒருவர் குத்துச் சண்டைப் போட்டியில் எதிர் வீராங்கனையால் தாக்கப்பட்டு சாவடைந்துள்ளார்

கண்டி – பல்லேகல உள்ளக விளையாட்டரங்கில் கடந்தமாதம் 30ஆம் திகதி இடம்பெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான குத்துச்சண்டைப் போட்டியில் எதிர்தரப்புப் போட்டியாளரால் தாக்கப்பட்ட மாணவி 11 நாள்களுக்கு பின்னர் சிகிச்சை பயனின்றிச் சாவடைந்தார். (ம)

## சரஸ்வதி சனசமூக நிலையத்தின் பூப்பந்தாட்டத் தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,நவ.13
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தினால் வட மாகாண ரீதியாக நடத்தப்பட்ட கனகலிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான பூப்பந்தாட்டத் தொடரில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு.

**ஆண்கள் பிரிவு**

19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் ஒற்றையர் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் பிரணவன் முதலாம் இடத்தை யும் அதே பாடசாலையின் தர்சானந்தன் இரண்டாம் இடத்தையும், உடுவில் மான்ஸ் வித்தியாலயத்தின் கனிஸ்ரன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் இரட்டையர் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் வை.பிரணவன், என்.தர்சானந்தன் இணை முதலாம் இடத்தையும் எம்.கீர்த்தனன் (யாழ்.இந்துக்கல்லூரி), ஜி.வெஸ்லி (சென். ஜோன்ஸ் கல்லூரி) இணை இரண்டாம் இடத்தையும் உடுவில் மான்ஸ் பாடசாலையின் கே.கனிஸ்ரன், எஸ்.லூயிஸ் இணை மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.காண்டீபன் முதலாம் இடத்தையும், கே.மோகன் இரண்டாம் இடத்தையும் வவுனியா மாவட்டத்தின் ரி.ராஜேஸ்வரன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

ஆண்கள் இரட்டையர் பிரிவில் எஸ் காண்டீபன், என்.குகதாஸ் இணை முதலாம் இடத்தையும் ஆர். விஜயேந்திரன், ஜீ. முரளிதரன் இணை இரண்டாம் இடத்தையும், கே.மோகனகுமா[illegible] எஸ்.அறிவுச்செல்வன் இணை மூன்றாம் இடத்தையும் தமதாக்கினர்.

ஆண்கள்; திறந்த ஒற்றையர் பிரிவில் யாழ். மாவட்டத்தின் ரி.துஷானந்தன் முதலாம் இடத்தையும், எல்.ஆர்.றொமிசன் இரண்டாம் இடத்தையும், வவுனியா மாவட்டத்தின் வை.பிரணவன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

ஆண்கள் திறந்த இரட்டையர் பிரிவில் ரி.துஷாந்தன், எல்.ஆர்.றொமிசன் இணை முதலாம் இடத்தையும், எஸ்.கண்டீபன், எஸ்.றம்மிய ராகுலன் இணை இரண்டாம் இடத்தையும் வை.பிரணவன், என்.தர்சானந்தன் இணை மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

**பெண்கள் பிரிவு**

பெண்கள் திறந்த ஒற்றையர் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் யதுசா முதலாம் இடத்தையும், உடுவில் மான்ஸ் பாடசாலையின் சி.கோபிகா இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர்.

பெண்கள் திறந்த இரட்டையர் பிரிவில் எஸ்.யதுசா, ஆர்.ராகவி இணை முதலாம் இடத்தையும் சி.கோபிகா, என்.நிவாசிகா இணை இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர். (ம-23)



சிம்பாப்வே - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டு ரி-20 ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் இன்று பங்களாதேஷின் மிர்பூரில் ஆரம்பமாகிறது. இலங்கை நேரப்படி மாலை 4.30 மணிக்கு ஆட்டம் இடம்பெறும். (ம)

# சகல நட்சத்திரங்களின் தொடர் வோர்ண் வாரியர்ஸ் வெற்றி

முன்னாள் பிரபலங்கள் பலரும் பங்கேற்று விளையாடிவரும் சச்சின் பிளாஸ்டர்ஸ், வோர்ண் வாரியர்ஸ் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டத்திலும் 57 ஓட்டங்களால் வோர்ண் வாரியர்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சச்சின் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்து வீண் வேலை பார்த்துவிட்டார். ஆரம்பம் முதலே வெளுத்து வாங்கினார்கள் வாரியர்ஸின் வீரர்கள். கைடனின் விளாசலில் ஐந்தே பந்துப் பரிமாற்றத்தில் 50 ஓட்டங்களை எட்டியது வாரி[illegible]. மெக்ராத்தின் வேகத்தில் வீழ்ந்தார் கைடன். சராசரிமாறா மல் அணியைக் கொண்டு சென்றார் கலீஸ். மறுமுனையில் வோகன் ஆட்டமிழக்க களமிறங் கினார் சங்கா. சங்காவின் உண்மை முகத்தை நேற்று அமெரிக்காவும் பார்த்தது. முரளி உட்பட எந்தவொரு பந்துவீச்சாளர்களும் மிச்சமல்ல. அத்தனை பேரினதும் பந்துகளை பதம் பார்த்தார் சங்கா. சங்காவை விட மிரட்டியெடுத்தார் பொண்டிங். 6 பவுண்டரிகள் 6 சிக்சர்கள் அடங்கலாக 30 பந்துகளில் 70 ஓட்டங்களைக் குவித்தார் சங்கா. அணி 200 ஓட்டங்களை எட்டிப் பிடித்தது. 16 பந்துகளில் 41 ஓட்டங்களைக் குவித்தார் பொண்டிங். சைமன்ஸ் கிடைத்த ஓரிரு வாய்ப்புக்களையும் சிக்சராக மாற்ற முடிவில் வாரியர்ஸ் 262-5.

121 பந்துகளில் 263 ஓட்டங்கள். சாத்தியமே இல்லை. ஆனால் சச்சினும் சேவாக்கும் 10 பந்துப் பரிமாற்றங்கள் வரை நீடித்தால் சில வேளைகளில் சாத்தியமாகலாம். சேவாக், கங்குலி, லாரா மூவரும் பதின்ம ஓட்டங்களை விட்டுத்தாண்டவில்லை. சச்சின் மட்டும் சிறிது நேரம் நிலைத்து நின்றார். சங்காவின் இன்னிங்ஸின் விறுவிறுப்பு சிறிதேனும் இல்லை மகெலவின் இன்னிங்ஸில். 33 ஓட்டங்களுடன் சச்சினின் ஆட்டமும் முடிவுக்குவர 140 ஓட்டங்களில் சுருண்டு விட வேண்டிய நிலையில் பிளாஸ்டர்ஸ். தனித்து நின்று வேடிக்கை காட்டினார் பொலக். 7 சிக்சர்களுடன் 19ஆவது பந்தில் அரைச்சதத்தை



பதிவுசெய்தார் பொலக். பொலக்கின் அரைச்சதத் தின் உதவியுடன் 205 ஓட்டங்கள் வரை சென்றது சச்சின் பிளாஸ் டர்ஸ். மொத்தத்தில் ஆட்டத்தில் சிக்சர்க ளுக்கு பஞ்சமே இருக்கவில்லை. (ம)

## நிபந்தனைகளுடன் இந்தியா ஒப்புதல்





பாகிஸ்தான் அணிக்கு எதிரான கிரிக்கெட் தொடருக்காக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நிபந்தனைகளுடன் கூடிய அனுமதி வழங்கியுள்ளது.

இந்தியா – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் அடுத்த மாதம் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களை நடத்த இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் அத்துமீறியதன் காரணத்தினால் தொடரை நடத்துவதில் இருந்து பின்வாங்கியது இந்தியா. ஆனால் பாகிஸ்தானின் பல்வேறுவிதமான வேண்டுகோளுக்கு அமைய இந்தியா நிபந்தனைகளுடன் கூடிய அனுமதி வழங்கியுள்ளது. எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் அத்துமீறக்கூடாது, தொடர் பாகிஸ்தானிலோ அல்லது ஐக்கிய அரபு இராச்சியத்திலோ அல்லாமல் இந்தியாவில்தான் நடை பெற வேண்டும் என்பதே அந்த இரண்டு நிபந்தனைகள். (ம)



பங்களாதேஷின் சகலதுறை வீரரான சகிப் அல் கசனுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது. கசனின் மனைவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் சிம்பாப்வேக்கு எதிரான தொடரில் இருந்து விலகியிருந்தார். இந்த நிலையில் அவரது மனைவிக்கு பெண்குழந்தை பிறந்துள்ளதாகவும் மனைவியும் குழந்தையும் நலமாக உள்ளதாகவும் கசன் தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார். (ம)

## பரெட்டை தாக்கிய ரூனி





[illegible]கிலாந்தில் நடந்த மல்யுத்தப் போட்டியில் மான்செஸ்டர் கால்பந்து கழகத்தின் அணித்தலைவர் வெய்ன் ரூனி, தன்னை வம்பிழுத்த மல்யுத்த வீரர் வேட் பரெட்டை தாக்கியுள்ளார்.

இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகரில் நடைபெற்ற மல்யுத்தப் போட்டியில் இங்கிலாந்து கால்பந்து அணியின் முன்னாள் தலைவரும், மான்செஸ்டர் கழகத்தின் தலைவருமான வெய்ன் ரூனி தனது மகனுடன் கலந்து கொண்டார். அப்போது மல்யுத்த வீரர் வேட் பரெட் ரூனியை தொடர்ந்து சீண்டிய வண்ணம் இருந்தார். மேலும், அவரை சண்டையிடும் படி அழைத்தார். கீழே இறங்கி ரூனியை தொடர்ந்து வேட் திட்டிக்கொண்டிருந்த நிலையில், ரூனி வேட் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். இதனால் அவர் தரையில் விழுந்தார். இதைச் சாதகமாகப் பயன்படுத்தி அவரது அணியில் சண்டையிட்டுக் கொண்டிருந்த சேமுஸ் தோற்கடிக்கப்பட்டார். (ம)

## வெற்றியுடன் விடைபெற்றார் யுனிஸ்கான் இங்கிலாந்தை வீழ்த்தியது பாகிஸ்தான்

இங்கிலாந்து – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 4 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டத்தில் 6 இலக்குகளால் இங்கிலாந்தை வீழ்த்தி யுனிஸ்கானை வெற்றியுடன் வழியனுப்பியது பாகிஸ்தான்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. ஓட்டங்கள் எவையும் பெறப்படாத நிலையில் ஓட்டம் பிடித்தார் றோய். அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே டக்குடன் ஆட்டமிழந்தார் ரூட். கேல்ஸின் இன்னிங்ஸை முடித்து வைத்தார் அன்வர் அலி. தற்பொழுது இங்கிலாந்து 14-3. மோர்கன், ரெய்லர் இருவரும் இணைந்து சுமாரான சராசரியில் நிதானித்தனர். மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் 100 ஓட்டங்களை எட்டியது இங்கிலாந்து. ஆளுக்கொரு அரைச்சதமும் கடந்தனர். 76 ஓட்டங்களுடன் மோர்கனையும், 60 ஓட்டங்களுடன் ரெய்லரையும் வீழ்த்தினார் மலிக். பட்லர், மொயின் அலி இருவரும் முழுமையாக பத்து ஓட்டங்களை நிறைவு செய்யவில்லை. இங்கிலாந்துக்கு மீண்டும் பின்னடைவு. பின் வரிசையில் வோக்ஸ் சிறிதுநேரம் தாக்குப் பிடித்தார். ஆனால் மறுமுனையில் இலக்குகள் சரிய இங்கிலாந்து 216 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இங்கிலாந்து.



எட்டக்கூடிய இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தானுக்கும் ஆரம்பம் நம்பிக்கை தரும்படியாக அமையவில்லை. 15 ஓட்டங்களில் ஆரம்ப வீரர்கள் இருவரும் ஆட்டமிழந்து விட்டனர். தனது இறுதி இன்னிங்ஸுக்காக களமிறங்கிய யுனிஸ்கானும் சிறப்பாகச் செயற்படவில்லை. 9 ஓட்டங்களுடன் யுனிஸ்கானின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. ஒருமுனையில் நிதானித்து நின்ற கபீஸுக்கு அலாம் சிறந்த ஒத்துழைப்பை வழங்க 44 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் இலங்கை அடைந்தது பாகிஸ்தான். கபீஸ் 102 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்து ஆட்ட நாயகனாகத் தெரிவானார். (ம)

## பவுன்சருக்குப் பெயர்போன பேர்த் ஆடுகளத்தில் இன்று ஆரம்பமாகிறது இரண்டாவது டெஸ்ட்

உலகின் அதிவேக ஆடுகளம் என்று கருதப்படும் ஆஸ்திரேலியாவின் பேர்த் இடையில் சில காலங்கள் அதன் மரபான வேகத்தையும், எகிறு பந்தையும் இழந்திருந்தது. ஆனால் நியூசிலாந்துக்கு எதிரான இன்றைய இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்கு பழைய அதிவேக ஆடுகளம் தயாரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆஸ்திரேலியா – நியூஸிலாந்துக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் இன்று ஆஸியின் பேர்த் மைதானத்தில் ஆரம்பமாகிறது. இந்த ஆட்டத்திலும் ஆஸ்திரேலியாவுக்கு சார்பாக அமையும் விதத்தில் ஆடுகளம் தயாரிக்கப்பட்டதாக அறியமுடிகிறது. குறித்த ஆட்டம் தொடர்பாக ஆடுகளத் தயாரிப்பாளரான பேஜ் தெரிவித்ததாவது:- 'பழைய காலங்களை மீண்டும் கொண்டு வரும் நோக்கத்துடன் ஆடுகளம் தயாரிக்கப்பட்டுள்ளது. நிச்சயம் வேகப்பந்து வீச்சுகள் எகிறுவதற்கும் சாதகமாக இருந்த களிமண்ணைக் கொண்டு தற்போது மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளது. ஜோன்சன், ஸ்ராக், கசில்வூட் ஆகியோரின் ஆதிக்கம் அடுத்த ஆட்டத்தில் அதிகமாக அமையும்- என்றார். (ம)

இதில் சற்று மாறுபட்டவாறு இருக்கும். முன்பு வேகத்துக்கும் பந்து

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 15 ★ 01 ★ 1948

மறைவு 16 ★ 10 ★ 2015



கடந்த 16/10/2015 இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் **வைத்திலிங்கம் பாலேந்திரன்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (14.11.2015) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் சமூகமளித்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

" இவ் அழைப்பினை பிரத்தியேக அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்."

(60069)

இணுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

077 - 4522 568, 077 - 6551 739

# பிளன்டர் விலகல்



தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிளன்டர் காயம் காரணமாக இந்தியாவுக்கு எதிரான எஞ்சியுள்ள டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து விலகியுள்ளார்.

இந்தியா தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை பெங்களூரில் நடைபெறவுள்ளது. இதற்காக தென்னாபிரிக்க வீரர்கள் நேற்று கடும் வலைப் பயிற்சியில் ஈடுபட்டனர். பயிற்சியின் ஒரு பகுதியாக தென்னாபிரிக்க வீரர்கள் கால்பந்து விளையாடினர். அப்போது அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிளன்டருக்கு காலில் காயம் ஏற்பட்டது. காயம் பெரிய அளவில் இருப்பதால் அவருக்கு 8 வாரங்கள் ஓய்வு தேவை என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் இந்தியாவுக்கு எதிரான மீதமுள்ள டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து பிளன்டர் விலகியுள்ளார். காயத்தால் ஸ்ரெய்ன் ஏற்கனவே அவதிப்பட் டு வரும் நிலையில் பிளன்டருக்கும் காயம்ஏற்பட்டிருப்பது அந்த அணிக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது.

(ம)

# சாய்னா காலிறுதியில்



சீனாவில் நடைபெற்றுவந்த பூப்பந்தாட்டத் தொடரில் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார் நட்சத்திர வீராங்கனையான சாய்னா நேவால்.

காலிறுதிக்குத் தகுதிபெறும் சுற்றில் இந்தியாவின் சாய்னா நேவால், மலேசியாவைச் சேர்ந்த தீ ஜிங் என்பவரை எதிர்கொண்டார். முதல் செற்றை 21-10 என இலகுவாக கைப்பற்றிய சாய்னாவுக்கு இரண்டாவது செற் சிறிது சவாலாக அமைந்தது. இருப்பினும் 21-19 என்ற அடிப்படையில் அந்த செற்றும் சாய்னாவிடமே சென்றடைந்தது. தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய அவர் மூன்றாவது செற்றையும் 21-19 எனக் கைப்பற்றி 3-0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

(ம)

நாள், மாதாந்த அடிப்படையில் கார்கள் வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 077 9961 250

## மே.இ.தீவுகள் அணி அறிவிப்பு ஆஸிக்கு எதிரான தொடருக்காக

மேற்கிந்தியத் தீவுகள் - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் 10ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தத் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி அந்த நாட்டின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் நேற்று அறிவிக்கப்பட்டது. [illegible]ல்டரின் தலைமையில் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கெடுத்த வீரர்கள் அத்தனை பேரும் சிறிதுமாற்றமும் இன்றி அப்படியே ஆஸிக்கு எதிரான தொடரிலும் தொடர்கின்றனர்.

ஆஸ்திரேலிய தொடருக்கான தீவுகளின் அணி வருமாறு:- கோல்டர் (தலைவர்), பிரீத்வைட், பி[illegible], பிளக்வூட், கார்லோஸ், டேரன் பிராவோ, ரஜிந்திர, டவ்ரிச், கபிரியேல், கோப், ரம்டின், ரோச், சாமுவேல்ஸ், ஜெரோம் ரெய்லர், வரிக்கன்.

(ம)

## கட்டார் நாட்டில் வேலைவாய்ப்பு

கட்டார் நாட்டில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட Hospital லில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு

| | Nos | Salary (QR) |
|---|---|---|
| 01. Facility manager - Electrical & Mechanical | 01 | 32000 |
| 02. Engineer - Mechanical | 02 | 10100 |
| 03. Engineer - Electrical | 02 | 10100 |
| 04. Supervisor - Mechanical | 03 | 6300 |
| 05. Supervisor - Electrical | 03 | 6300 |
| 06. BMS Technicians | 02 | 3500 |
| 07. Electricians | 04 | 2350 |
| 08. HVAC Technicians | 05 | 2396 |
| 09. Chiller Technicians | 04 | 2396 |
| 10. Plumber | 06 | 2050 |
| 11. Painter / Carpenter | 03 | 1600 |
| 12. Technical Helper | 05 | 900 |
| 13. Appliance Technicians | 06 | 2396 |
| 14. Cleaning Supervisor | 04 | 2800 |
| 15. Cleaners | 56 | 900 |
| 16. Light Duty Drivers (Gulf Express) | 06 | 1760 |

உணவு, தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இல வசம். எதிர்வரும் 17ஆம் திகதி எமது தலைமை நிறுவனத்தில் நேர் முகப்பரீட்டை இடம்பெறும்.

L.L No:-2248

உடன் தொடர்புகொள்ள: Lanka Voice T.P: 0777 9294 75

Capital Recruitment international (Pvt) Ltd

No.130,3/1 3rd Floor, Grandpass Road, Colombo-14.

விசேட கருத்தரங்கு

22ஆம் திகதி நடைபெறவுள்ள

கலாச்சார உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சை

28ஆம் திகதி நடைபெறவுள்ள

அஞ்சல் முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை

விரைவில் நடைபெறவுள்ள

பட்டதாரி ஆசிரியர் போட்டிப் பரீட்சை

அலுவலக பணியாளர் போட்டிப் பரீட்சை

காலம் 14.11.2015

சனி - 9.00-4.00 P.M

(பிரதி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்)

விரிவுரையாளர்கள்

P.உமாசங்கர்

P. கமல்தாசவ்

நாவலர்

கல்வி நிலையம்

ஆலைப்பந்தி, யாழ்.நகர்

077 469 6695

இலங்கையின் மிகப்பாரிய தனியார் உயர்கல்வி வலையமைப்பு

## ESOFT METRO CAMPUS

International Recognized British

HND PROGRAMMES

PEARSON edexcel advancing learning, changing lives

BTEC HND Computing & Sytems Develoment

Highlights in Computing

- Computer Systems
- Programming Languages (C++, C#.net, Asp.net, Java)
- Web Application Develpment
- Object Oriented Programming
- Network Technology
- Knowledge based systems

Including 16 Modules

MBA M.Sc

Degree - Final Year: B.A (Hons) Business Administration, B.Eng. (Hons) in Software Engineering, B.Sc. (Hons) in Computing

HND in Computing & Systems Development / in Business Management

OL's / AL's / DiTEC

PEARSON edexcel advancing learning, changing lives

BTEC HND Business Management

Highlights in Business Management

- Human Resource Management
- Business Environment
- Organizational Behaviour
- Marketing Management
- Financial Management
- Business Law
- Quality Management

Including 16 Modules

Investment Rs.12,500 Monthly

Success to Degree

Final Year: BEng (Hons) in Software Engineering, BSc (Hons) in Computing, BA (Hons) in Business Administration

Awarded By: LONDON METROPOLITAN UNIVERSITY

UGC Recognised

Success to Degree

Final Year: BA (Hons) in Business Administration

Awarded By: LONDON METROPOLITAN UNIVERSITY

UGC Recognised

NEW BATCHES 2015.11.14 & 2015.11.16

SAVE 60,000

Register Before 15th November

ESOFT is proud to be recognized as a GOLD PARTNER

PEARSON edexcel

LONDON METROPOLITAN UNIVERSITY · PEARSON · Registered Course Provider · Microsoft IT Academy Program Member · ORACLE ACADEMY · intel

ESOFT Shaping Lives, Creating Futures.

ESOFT METRO CAMPUS

No.137, K.K.S Road, Jaffna | Hotline : 077 309 9 308 Tel : 021 222 4142

HOTLINE 077 309 9 308

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடாத்தும்

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான

கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

அனுசரணை : உதயன்

கார்த்திகை 14.15 - 2015

யாழ் இந்து கூடைப்பந்தாட்ட திடல்

JAFFNA HINDU COLLEGE

RINI

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.